விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 30 செவ்வாய்க்கிழமை (12.02.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 055

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# ஜனாதிபதி மகிந்த இன்று யாழ். விஜயம்

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்



(யாழ்ப்பாணம்), ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார். அவரது வருகையை முன்னிட்டு யாழ்.நகரப் பகுதியில் கடும் பாதுகாப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதோடு இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் அதிகளவில் பிரசன்னமாகியுள்ளனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## போப்பாண்டவர் பதவி விலகுகிறார்

(வத்திக்கான் சிற்றி)

போப்பாண்டவர் பெனடிக்ட் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.



வத்திக்கானில் நடந்த கூட்டம் ஒன்றின்போது 85 வயதான போப்பாண்டவர் இந்த அறிவிப்பை லத்தீன் மொழியில் வெளியிட்டார்.

தனது வயது முதிர்ச்சியின் காரணமாக, கடந்த சில மாதங்களாக தனது உடலும், மனமும் தனது ஆன்மீகப் பணிகளைச் செய்ய முடியாத அளவுக்கு மோசமடைந்து வந்ததனாலேயே தான் பதவி விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

பெப்ரவரி மாதம் 28-ம் திகதியுடன் அவர் பதவிவிலகுவார். அவருக்கு அடுத்ததாக இன்னுமொருவர் போப்பாண்டவராக தேர்ந்தெடுக்கப்படும் வரை (19ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டத்தைத் தொடர புலிகள் முயற்சிக்கின்றனர்

### பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் போராட்டத்தை தொடர்வதற்கு முயற்சித்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து நான்கு ஆண்டுகள் கடக்கவுள்ள நிலையிலும் புலிகளின் எஞ்சிய உறுப்பினர்கள் தொடர்ந்தும் பிரிவினைவாதத்தை தொடர்வதில் ஆர்வம் காட்டிவருவதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் காரணமாகவே அரசு தேசிய பாதுகாப்பு விவகாரங்களில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். லஷ்மன் கதிர்காமர் சர்வதேச விவகார நிறுவகத்தில் நடைபெற்ற பாகிஸ்தான்-இலங்கை கூட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனிதாபிமான மீட்புப்பணிகளின்போது தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒரு பகுதியினர் இல்லாதொழிக் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி -கமலேஷ் சர்மா சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவிற்கும் ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது. அலரிமாளிகையில் மாலை 3 மணியளவில் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் கலந்துகொண்டார்.

இதேவேளை இன்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் கமலேஷ் சர்மா வெளியுறவு அமைச்சு அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

## எதிர்க் கட்சிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை

ஒரு கட்சியிலிருந்து வெளியேறும் அங்கத்தவருக்கு இன்னொரு பங்காளிக் கட்சி தமது அங்கத்துவத்தை வழங்க முடியாது. பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை விமர்சனம் செய்ய முடியாது. இது தேர்தல் கூட்டணி கிடையாது.

ஆனால், இந்த எதிர்க் கட்சி இயக்கத்தில் இடம்பெறும் எந்த கட்சிகளும் தமக்கிடையே தேர்தல் உடன்பாடு கொள்ளலாம் உட்பட தமக்கிடையிலான பரஸ்பர உறவுகள் தொடர்பில் பல்வேறு விதிமுறைகள் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நேற்று எதிரணி கூட்டமைப்பு தலைவர்கள் கையெழுத்திட்டுள்ளார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, நவ சமசமாஜக் கட்சி, மௌபிம ஜனதா கட்சி, ருஹுணு ஜனதா கட்சி, ஐக்கிய மக்கள் முன்னணி, முஸ்லிம் தமிழ் தேசிய முன்னணி ஆகிய கட்சிகளும் சுதந்திரத்திற்கான மேடை என்ற சிவில் அமைப்பும் தமக்கிடையே நல்லுறவுகளை முன்னெடுக்கும் நோக்கில் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை கைசெழுத்திட்டுள்ளன. இந்தக் கையெழுத்திடும் வைபவம் நேற்று பிற்பகல் (20ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடனான நல்லுறவை நிறுத்தும் காலம் வந்துள்ளது

### ஜனாதிபதி கூறியதாக செய்தி

(கொழும்பு)

இந்தியாவுடன் இருந்த நல்லுறவுகளை நிறுத்துவதற்கு காலம் வந்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது அமைச்சரவையை சேர்ந்த அமைச்சர்களை அழைத்து தெரிவித்துள்ளதாக சிங்கள இணையத் தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதியம் கொழும்பில் உள்ள அமைச்சர்களை அலரி மாளிகைக்கு அழைத்து ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.


இந்த சந்திப்பில் 11 அமைச்சர்கள் கலந்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

சீனா இலங்கையுடன் இருப்பதால் எதற்கும் அஞ்ச வேண்டாம் எனவும் தமது பிரதேசங்களில் இந்தியாவிற்கு எதிராகச் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

தான் இவ்வாறு கூறியதை அமைச்சர் தொண்டமானுக்கு கூறவேண்டாம் எனவும் அவர் இந்த கதையும் வேறு கதைகளையும் சேர்த்து இந்தியாவிடம் (20ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் பயங்கரவாதத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஊடகங்கள் செயற்படுகின்றன

### குற்றம் சாட்டுகிறார் யாழ். கட்டளைத் தளபதி



(யாழ்ப்பாணம்)

முப்பது வருடங்களாக இந்த நாட்டில் நிலை கொண்டிருந்த பயங்கரவாதத்தினை முற்றாக அழித்து, நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்பட்டு, அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது தொடர்பில் ஊடகங்கள் செய்திகளை வெளியிடுவதைத் தவிர்த்து மீண்டும் பயங்கரவாதத்தினை உருவாக்கும் வகையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றியும் அரசாங்கத்திற்கு எதிரான பிரசாரங்களிலும் ஈடுபட்டுகின்றன. இவ்வாறு யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

யாழ். சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டிலுள்ள பத்திரிகைகள் திட்டமிட்டு இராணுவத்தினருக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## நாமல் ராஜபக்ஷ கிளிநொச்சியில்

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இரண்டு நாள் விஜயமாக நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகளை நேரில் சென்று ஆராயவுள்ள அவர், இன்று பல்வேறு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையத்தை முதலில் திறந்து வைக்கவுள்ள அவர் 80 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளுக்கு எப்போது தூக்குத்தண்டனை நிறைவேற்றம்?

## ஜம்மு காஷ்மீர் முதல்வர் கொதிப்பு

(காஷ்மீர்)

நாடாளுமன்ற தாக்குதல் சம்பவத்துக்கு முன்பு நிகழ்ந்த முன்னாள் பிரதமர் ராஜீவ், பஞ்சாப் முதல்வர் பியாந்த்சிங் படுகொலை சம்பவங்களில் கொலையாளிகளை தூக்கிலிடாமல் அப்சல் குருவை தூக்கிலிட்டிருக்கிறார்களே என்று ஜம்மு காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா கொந்தளித்திருக்கிறார்.

அப்சல்குரு தூக்கு தண்டனை நிறைவேற்றம் குறித்து தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், இது போன்ற நடவடிக்கைகள் காஷ்மீர் பகுதி இளைஞர்கள் தங்களை இந்தியாவில் இருந்து தனிமைப்படுத்திக் கொள்ளவும், விரோத மனப்பான்மையை உருவாக்கிக் கொள்ளவும் வாய்ப்பு அளித்து விடும். இதனால் பெரும்பான்மையான காஷ்மீர் இளைஞர்கள் தவறான வழியில் செல்ல வாய்ப்பு அதிகரித்துள்ளது.

அப்சல்குருவை தூக்கிலிடும் முன்பு அவரது குடும்பத்தினரை சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்காதது துரதிர்ஷ்டவசமானது. இந்த விஷயத்தில் பல கேள்விகளுக்கு பதில் அளிக்கப்பட வேண்டியுள்ளது. நான் எப்போதும் மரண தண்டனைக்கு எதிரானவன். இது தேர்வு செய்யப்பட்டு வழங்கப்பட்ட தண்டனை அல்ல என்பதை காஷ்மீர் மக்களுக்கும் உலகுக்கும் உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

அஜ்மல் கசாப்பை தூக்கிலிடும்போதே அவ்சல் குருவையும் தூக்கிலிடுவார்கள் என நினைத்தேன். அப்சல் குருவுக்கு சீக்கிரமாகவே தண்டனை நிறைவேற்றப்பட்டுவிட்டது. இதனால் இந்த தலைமுறை காஷ்மீர் மக்கள் தங்களை அப்சல் குருவின் அங்கமாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள வாய்ப்பு உள்ளது. அவர் மீதான விசாரணை சரியாக நடத்தப்படவில்லை என்பதே காஷ்மீர் மக்களின் கருத்தாக உள்ளது.

இதே கருத்துதான் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எழுந்துள்ளது. இந்திய ஜனநாயகத்தின் அடையாளத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்று அப்சல் குரு தொடர்புடைய நாடாளுமன்ற தாக்குதல் வழக்கு கருதப்படுகிறது.

அதற்கு முன்னர் நிகழ்ந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி ஜனநாயகத்தின் அடையாளம் இல்லையா? பஞ்சாப் முதல்வர் பியாந்த்சிங் தமது அலுவலகத்திலேயே படுகொலை செய்யப்பட்டார். அவர் ஜனநாயகத்தின் அடையாளம் இல்லையா? இந்த வழக்கின் கொலையாளிகளுக்கு தூக்கு தண்டனை கொடுக்கப்பட்டும் அது நிறைவேற்றப்படவில்லையே. அதை நிறைவேற்ற எவரும் குரல் கொடுக்கவில்லையே என்று கொந்தளித்திருக்கிறார் ஜம்மு காஷ்மீர் முதல்வர். (எ-11)



எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பை முன்னெடுக்கும் போராட்டத்தின் ஆரம்பம் நேற்று திங்கட்கிழமை கொழும்பில் ஆரம்பமானது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் இதன் போது கைச்சாத்திடப்பட்டது. அதில் கலந்து கொண்ட கட்சி பிரமுகர்களை படத்தில் காணலாம்.

# மாற்று முன்னணி தேர்தலில் வெற்றிபெற முடியாது!

(கொழும்பு)

ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி என்ற பிரதான இரண்டு கட்சிகளுக்கும் மேலதிகமாக வேறு எந்தவொரு மாற்று முன்னணிக்கும் தேர்தலில் வெற்றிபெற முடியாது என்ற கருத்தை ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க செய்தியாளர்கள் மத்தியில் நேற்று உரையாற்றுகையிலேயே இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

## ஐ.தே.க.தெரிவிப்பு

அவ்வாறான மாற்றுக்கொள்கை முன்னணிகளை தோற்றுவிப்பவர்கள் இறுதியில் அரசியலிலிருந்து விலக வேண்டிய நிலை மாத்திரமே ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பாலித்த ரங்கே பண்டார நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் முகமாகவே ஜோன் அமரதுங்க இந்த நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் மாகாணசபை தேர்தலுக்காக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக மாற்று அரசியல் முன்னணி ஒன்று தோற்றுவிக்கப்படும் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்திருந்தார்.

இதனிடையே நேற்று பதினொரு எதிர்த்தரப்பு அரசியல் கட்சிகள் ஐக்கியதேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்த ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

எவ்வாறாயினும் அந்தக் கூட்டணியில் தாம் இணைந்து கொள்ளப் போதில்லை என்றும் பாலித்த ரங்கே பண்டார அறிவித்துள்ளார். (எ-11)

# யாழ்-கொழும்பு பஸ்ஸில் ஆசன ஒதுக்கீடுகளை ஒழுங்குபடுத்த திட்டம்

யாழ்ப்பாணம்-கொழும்புக்கிடையில் சேவையிலுள்ள பஸ்களில் ஆசன ஒதுக்கீடுகளை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளுக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகளை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை மற்றும் யாழ்ப்பாணமாகிய பஸ் தரிப்பிடங்களில் ஆசன ஒதுக்கீடு தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. பத்திர உரிமையாளர்கள் மற்றும் போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரிகளிடையே இடம் பெற்ற கலந்துரையாடலையடுத்தே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (எ-11)

# அனுமதி இல்லாதவை அகற்றப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற விளம்பரப் பலகைகளை யாழ். மாநகர சபையினர் நேற்று அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் வைத்திய சாலைக்கு முன்பாகவுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் கொம்பனிகளின் விளம்பரப் பலகைகளை இவ்வாறு யாழ்.மாநகர சபையினர் அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (எ-6)

# யாழ்-கண்டி வீதியின் ஒரு பிரதேசம் கீழிறங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்-கண்டி ஏ9 வீதியின் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் சுமார் 60 அடி அளவிலான பாதை இன்று திங்கட்கிழமை மாலை கீழ் இறங்கியது. கட்டுகஸ்தோட்டை நகரில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையிலான வீதியே கீழிறங்கியுள்ளது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக மண் சரிவு அபாயத்தை எதிர்நோக்கிய இந்த பிரதேசம் பொல்கொல்லை வாவியின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையினாலேயே கிழிறங்கியுள்ளது என பிரதேசவாசிகள் தெரிவித்தனர். (எ-11)

# இலங்கைக்கு உதவ பிரேசில் முன்வருகை

(பிரேசிலியா)

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி பணிகளுக்காக உச்சகட்ட ஒத்துழைப்பை வழங்க தயார் என்று பிரேசில் அறிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பிரேசிலுக்கான உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

தமது பயணத்தின் போது நேற்று முன்தினம் அவர், பிரேசில் வெளிவிவகார அமைச்சர் என்போனியா பெட்ரியோட்டாவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போதே, பிரேசில் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் அபிவிருத்திக்கு உதவுவதாக உறுதியளித்ததாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில், பிரேசில் வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து வெளிவிவகார அமைச்சரினால் தெளிவுப்படுத்தப்பட்டதாக, வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

# வழக்கை மாற்றக்கோரிய மனு நிராகரிப்பு

(வவுனியா)

வவுனியா மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் தமிழில் நடப்பதால், தன் மீதான வழக்கை சிங்கள மொழியை பயன்படுத்தும் வேறொரு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என சிங்களவர் ஒருவர் செய்திருந்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பண மோசடி செய்ததாக தன்மீது வவுனியா மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் பொலிஸார் வழக்கு தொடர்ந்துள்ளதாக கொழும்பு அருகே வசிக்கும் சிங்களவர் ஒருவர் இந்த மனுவில் தெரிவித்துள்ளார்.

தானும் தனது சட்டத்தரணிகளும் சிங்கள மொழி மட்டுமே அறிந்தவர்கள் என்பதால் வவுனியா நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கு விசாரணையை சிங்கள மொழியில் செயலாற்றும் வேறொரு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என அவர் கோரியிருந்தார்.

ஆனால் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்களைக்கொண்டு இந்த வழக்கை வவுனியா மஜிஸ்திரேட் நீதிமன்றத்திலேயே நடத்த முடியும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஆவணங்களையும் சாட்சியங்களையும் மொழிபெயர்ப்பதற்காக பிரதிவாதிக்கு கூடுதல் அவகாசம் வழங்கப்படும் நடைமுறையும் இருப்பதால் இந்த வழக்கை இடமாற்ற வேண்டிய அவசியம் இல்லையென்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (எ-11)




**காணி, வீடு விற்பனைக்கு**

வீடு — புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 12 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

வீடு — புத்தூர் சந்திக்கு அண்மையில் சுன்னாகம் வீதியில் 7 ½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

**ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்**
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810

**கரைச்சிப்பிரதேசசபை, தலைமையலுவலகம், கிளிநொச்சி.**
**வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 2013**

வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் தொடர்பாக 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை டிசம்பர் 2012 வெளியிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்கு மேலாக வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்யும் காலம் 2013.03.15ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

தவிசாளர்,
கரைச்சிப்பிரதேசசபை,
கிளிநொச்சி.

(க-2406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எறும்பின் கர்வம்

ஒரு சமயம் இவ்வுலகில் உள்ள எறும்புகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஒரு மகா நாடு நடத்தியது. அந்த மகாநாட்டின் பெயர் அகில உலக எறும்புகள் மாநாடு.

அதிலே ஒரு எறும்புத் தொண்டர் உரையாற்ற ஆரம்பித்தார்.

"எறும்புச் சகோதர்களே! சகோதரிகளே!

இந்த உலகத்திலே நமக்குப் பெரிய எதிரி எது என்று கேட்டால், அது யானைதான்.

நாம் எல்லோரும் சேர்ந்து கூட்டமாக எங்கேயாவது சென்று கொண்டிருப்போம். அப்போது திடீரென ஒரு யானை வந்து எம்மீது காலை வைக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். என்ன நடக்கும்? ஆயிரக்கணக்கான நமது தோழர்கள் மாண்டு போவோம். இதைத் தடுத்து நிறுத்த என்ன வழி என்பது பற்றி நாம் சற்று யோசிக்க வேண்டியுள்ளது" என்றார்.

அதனைத் தொடர்ந்து ஒரு எறும்பு பிரதிநிதி பேச முன் வந்தார்.

"நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது எதிரியான யானையைக் கொல்வதற்கு ஒரு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும்" என்று கூறி விட்டு அமர்ந்து கொண்டது.

கடைசியிலே ஒரு முடிவுக்கு வந்தார்கள். அவர்களுக்குள்ளே ஒரு அகில உலகத் தலைவரைத் தேர்ந்தெடுத்து அந்தத் தலைவர் கடவுளைத் தவம் செய்து அவரிடமிருந்து ஒரு வரம் பெறுவது. அதாவது "**நாம் யானைகளைக் கடித்தால் அது சாக வேண்டும்**" அப்படியென்ற வரம். இதுதான் அவர்கள் எடுத்த முடிவு.

உடனே அத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

அதன்பின்னர் ஏகப்பட்ட போட்டிக்கு நடுவில் ஒரு தலைவர் தேர்தெடுக்கப்பட்டார். தலைவரான உடனே அந்த எறும்புக்கு ஆணவம் வந்து விட்டது.

"எறும்புகளே! உங்களின் ஒரே தலைவன் நான்... கடவுளிடம் வரம் வேண்டி கொடுப்பது என் கடமை... எப்படியான வரம் வாங்கப் போகிறேன் என்பதை சற்று பொறுத்திருந்து பாருங்கள்" என்றது.

நீண்ட காலமாகத் தலைவன் எறும்பு தவம் இருந்தது.

ஒருநாள் கடவுள் காட்சி கொடுத்து "எறும்பே! உன் தவத்தை மெச்சுகிறேன். என்ன வேண்டும் கேள்" என்றார்.

உடனே எறும்பு; "**நான் கடித்தால் சாக வேண்டும்**" அவ்வளவு தான் கேட்டது.

"சரி தந்தேன்" என்று கடவுள் சொல்லி விட்டார்.

வரம் வாங்கியதில் எறும்புத் தலைவனுக்கு மிகவும் மகிழ்ச்சி.

இருந்தாலும் வாங்கிய வரம் பலிக்குதா என்பதை பரிசோதிக்க வேண்டுமல்லவா... யாரை கடிக்கலாம் என்று யோசனை செய்தது.

எதிரில் வரம் கொடுத்த கடவுள் தான் நின்று கொண்டிருந்தார். அதுதான் வரம் வாங்கி முடிந்ததே... இனிமேல் இவர் எதற்கு... என்று யோசனை செய்தது.

உடனே அவரை ஒரு கடி கடித்தது.

அவர் "பட்"டென்று கையாலே ஒரு தட்டுத் தட்டினார். எறும்பு "அப்பாடா"வென்று கத்திக் கொண்டே வலி தாங்க முடியாமல் சுருண்டு விழுந்தது.

"என்ன இது? வரம் பலிக்கவில்லையே... நீங்கள் சாக வேண்டுமே... இப்போது நானல்லவா செத்து விடுவேன் போல இருக்கிறது?" என்று எறும்பு கூறியது.

கடவுள் சிரித்தபடி சொன்னார்;

"நீ என்ன வரம் கேட்டாய்; **நான் கடித்தால் சாக வேண்டும்** என்ற வரம் கேட்டாய்; தந்தேன். இப்போது நீ கடித்தாய்; சாகப் போகிறாய்" என்றார்.

இந்த எறும்பு எப்படி வரம் கேட்டிருக்க வேண்டும்?

"**நான் யாரைக் கடிக்கிறேனோ அவர்கள் சாக வேண்டும்**" என்று கேட்டிருந்தால் சரி. ஏன் அது அப்படி கேட்கவில்லை தெரியுமா?

ஆணவம்! ஆணவம் வந்தால் அறிவு மழுங்கி விடும்.

அப்படித்தான் இவ்வுலகில் வாழும் மனிதர்களாகிய எமக்கு சில நேரங்களில் அறிவு சரியாக செயற்படுவதில்லை. மழுங்கடிக்கப் படுகிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# கொள்கைக்கு முரணான ஆசிரிய இடமாற்றம்

## யாழ்.வலய ஆசிரியர்கள் ம.உ.ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கல்வியமைச்சின் தேசிய இடமாற்ற கொள்கைக்கு அமைவாக இடமாற்றம் வழங்கப்படாத யாழ். வலய ஆசிரியர்கள் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் முறையிட்டுள்ளனர்.

கஸ்டப் பிரதேசங்களில் கடமையாற்றிய யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆசிரியர்களுக்கு யாழ்.வலயத்திற்கு இடமாற்ற சபையினால் இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது.

இதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளரினாலும் வலயக் கல்விப் பணிப்பாளர்களாலும் வெளியிடப்பட்டிருந்ததோடு அதற்கான நியமனக் கடிதங்களும் அவ் ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அதில் குறித்த திகதியில் யாழ். வலயத்தில்பணியாற்றுவதற்கு இணையுமாறும் குறிப்பிடப்பட்டு இருந்ததாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

எனினும் அக்கடிதத்தினை பெற்றுக்கொண்டு பணியில் இணைவதற்கு யாழ். வலயக் கல்விப் பணிமனைக்கு சென்ற ஆசிரியர்கள் யாழ். வலயத்தில் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்றும் மாறாக இடமாற்ற சபையினால் யாழ். வலயத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்ட அவ் அனைத்து ஆசிரியர்களையும் வலிகாமம் கல்வி வலயத்தில் பணியில் இணைந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணத்தினை சொந்த இடமாக கொண்டு கஸ்டப் பிரதேசமான வன்னிப்பகுதி பிரதேசங்களில் கடமையாற்றி இடமாற்றத்திற்கு உரிய அனைத்து சட்ட முறைகளையும் பூர்த்தி செய்தும் யாழ்.வலயத்தில் இடமாற்றம் கோரியும் அவ் வலயத்தில் இடமாற்றம் வழங்கப்படாமல் வலிகாம கல்வி வலயத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களே இவ்வாறு மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறையிட்டுள்ளனர். இதில் 33 ஆசிரியர்கள் மாகாண கல்விப் பணிப்பாளருக்கும் யாழ். வலயக் கல்வி பணிப்பாளருக்கும் எதிராக முறையிட்டுள்ளனர் என யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார். (அ-4)

# மு/மாங்குளம் வித்தியில் விரைவில் விஞ்ஞானப்பிரிவு

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள மு/மாங்குளம் மகா வித்தியில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் மாணவர்கள் நன்மை கருதி க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்தில் மு/மல்லாவி மத்திய கல்லூரியிலும் மு/ஒட்டுசுட்டான் ம.வி.யிலுமே விஞ்ஞானப் பிரிவுக்கற்கை உள்ளது. இதற்கு இடைப்பட்ட இடங்களில் உள்ள மாணவர்களின் சிரமத்தைப் போக்கும் வகையில் ஏ-9 வீதிக்கு அருகில் உள்ள மு/மாங்குளம் ம.வி.யில் விஞ்ஞானப்பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கு முன்னோடி நிகழ்வாக 8 மில்லியன் ரூபா செலவில் இரு மாடிகளைக் கொண்ட நவீன ஆய்வு கூடம் ஒன்றும் 6 மில்லியன் ரூபா செலவில் க.பொ.த. (உ/த) பிரிவு மாணவர்களுக்கான மாடியைக் கொண்ட வகுப்பறையும் அமைக்கப்பட்டு வருகிறது. அத்தோடு ஆசிரியர்களை நியமித்து வருகிறோம். எனவே, கடந்த வருடம் க.பொ.த. (சா/த) பரீட்சை எழுதிய மாணவர்கள் இதனை நன்கு பயன்படுத்திப் பயன்பெற வேண்டும் என்றார். (அ-3-15)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 240 | 300 |
| தக்காளி | 120 | 120 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 50 | 40 | 50 | 70 |
| கரட் | 100 | 80 | 120 | 140 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 40 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80-90 | 100 | 60-80 | 100-140 |
| பெரிய வெங்காயம் | 90 | 60 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 80 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 70 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 60-80 | 50 | 100 | 80 |
| லீக்ஸ் | 130 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 50 | 40 | 60 | 70 |
| கறிமிளகாய் | 120 | 140 | 120 | 140 |
| முருங்கைக்காய் | 350 | 400 | 600 | -- |
| போஞ்சி | 60 | 40 | 60 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10-20 | 20 | 20-30 | 35 |
| தேசிக்காய் | 20-40 | 60 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 35-50 | 45-50 |
| இராசவள்ளி | 90 | 110 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 60-100 | 100 | 100 | 80 |

# இராசி பலன்

12.02.2013
(தை 30, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
துதியை முற்பகல் 11.43 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 5.19 மணிவரை
இராகுகாலம் 3.34-5.04 மணிவரை
சுபநேரம் 11.04-12.34 மணிவரை

**மேடம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, கௌரவமான நாள்.

**இடபம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், அரசு வழியில் அனுகூலமாக செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்லவேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பார்கள், சில பொருட்களை விற்பனை செய்யும் சூழ்நிலை உருவாகலாம்.

**கடகம்** உதவுவதாகச் சொன்ன சிலர் உங்களை விட்டு விலகலாம், குடும்பத்தில் சில கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், முயற்சிகளில் தாமதம் ஏற்படும், போசன நன்மையுண்டு.

**சிங்கம்** கௌரவமான நாள், எடுத்தகாரியங்கள் கைகூடும், புதிய நண்பரின் ஆதரவும் கிடைக்கும், இனசன வருகையுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி** எதிரிகள் உதிரியாகும் நாள், நிலையான வருமானத்திற்கு வழிகிடைக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், உடல் நலன் சீராகி உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள்.

**துலாம்** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும்.

**விருச்சிகம்** செல்வம் பெருக விநாயகரை வழிபடவேண்டிய நாள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, வியாபார விருத்தியுண்டு

**தனுசு** தெய்வ அனுக்கிரகத்தால் சிறப்புக்கள் வந்து சேரலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம்.

**மகரம்** பணப்புழக்கம் அதிகரிக்கும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், நண்பர்கள்மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம்.

**கும்பம்** உறவினர் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியம் சீராக தகுந்த நடவடிக்கை எடுப்பீர்கள், மறக்கமுடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம்.

**மீனம்** வழிபாட்டால் வளர்ச்சிகூடும்நாள், உறவினர் சிலரின் அன்புக்கட்டளைக்கு ஆட்படநேரிடலாம், தொழிலில் சில மாற்றங்கள் செய்யும் சூழ்நிலை உருவாகும், தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு வருடங்களாக 788 ஆம் இலக்க பயணிகள் பேருந்து சேவை இரத்து

## பயணிகள் விசனம்

788 ஆம் இலக்க இ.போ.ச பேருந்து சேவை கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக இடம் பெறுவதில்லை என பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.


கீரிமலை, விளான், பண்டத்தரிப்பு, தொட்டிலடி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்கள் ஊடாக செல்லும் 788 ஆம் இலக்க இ.போ.ச சேவையே இடம்பெறுவதில்லை என பயணிகள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை சேவை மட்டுமே இடம்பெறுகின்றது. அதுவும் ஒழுங்காக இடம்பெறுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் பயணிகள் கேட்டபொழுது, பண்டத்தரிப்பிற்கும் சண்டிலிப்பாய்க்கும் இடையில் உள்ள பாதை அகலமின்மை காரணமாக பேருந்து சேவை இடம்பெறுவதில்லை என தெரிவித்தனர்.

ஆனால் சுற்றுலாப் பயணிகளின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்து சேவை என்பன இடம்பெறுகின்ற வேளை இ.போ.ச பேருந்து சேவை இடம்பெறாதது ஏன் என பயணிகள் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(அ-3-30)




நன்றி:- ஐலண்ட்

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள்

## யாழ்.கட்டளைத்தளபதி

(யாழ்ப்பாணம்)

**தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் இரண்டு மாணவர்களும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். யாழ்.சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவரினால் மாணவர்களின் விடுதலை தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் மேலும் பதிலளிக்கையில்,

யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் எனது கட்டளையின் பேரில் கைது செய்யப்படவில்லை. அவ்வாறு இடம்பெற்றிருந்தால் உடனடியாக விடுதலை செய்திருப்பேன்.

இருப்பினும் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு மாணவர்களும் மிக விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள்.

குறித்த மாணவர்களின் பெற்றோரும் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் என்னிடம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய மாணவர்கள் எவ்வாறு விடுதலை செய்யப்பட்டனரோ அதேபோன்று தடுத்து வைக்கப்பட்டுள்ள மாணவர்களும் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள். ஆனால், விடுதலை செய்யப்படும் திகதியை என்னால் உறுதியாக சொல்ல முடியாது. அது என் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது.

மேலும் வடக்கிலும் தெற்கிலும் ஒரே மாதிரியான நடவடிக்கையைத்தான் பொலிஸாரும் இராணுவத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் தெற்கிலுள்ள பல்கலைக்கழகங்களிலும் பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தெற்கில் ஒரு மாதிரியாகவும் வடக்கில் ஒரு மாதிரியாகவும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் செயற்பாடுகள் இடம்பெறவில்லை.

மேலும் இறந்தவர்களை நினைவுகூருவதற்கு இராணுவம் ஒருபோதும் தடையாக இருக்காது. அதேவேளை பொது இடங்களில் ஒன்றுகூடி மாவீரர்தினம் கொண்டாடவும் நினைவுகூரவும் இடமளிக்க முடியாது. தமது உறவுகளுக்கு தங்களின் வீடுகளில் நினைவுகூர இராணுவம் தடை விதிக்காது. அத்தோடு கலாச்சார நிகழ்வுகளை நடத்த இங்கு எந்த விதத் தடையும் இல்லை. இதனை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## நிர்வாகிகள் தெரிவு

(வல்வெட்டித்துறை)

வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கத்தின் இவ்வாண்டுக்கான நிர்வாக சபை தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக காத்தாமுத்து றஞ்சனதாஸ், உபதலைவராக பொன்னம்பலம் சிவானந்தம், செயலாளராக பூபால கிருஷ்ணசாமி அகமணிதேவர், உப செயலாளராக இரத்தினசாமி சண்முகதாஸ், பொருளாளராக துரைசாமி சக்திவேல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 6 நிர்வாகசபை உறுப்பினர்களும் சர்வதேச இணைப்பாளராக நடராசா சிவரெத்தினம், கணக்காய்வாளராக ஆறுமுகம் நாகலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3)


## 17 ஆவது ஆண்டும் பட்டமளிப்பும்

(யாழ்ப்பாணம்)

IIS நிறுவனத்தின் 17 ஆவது நிறுவன தின விழாவும் IIS City Campus நிறுவனத்தின் பட்டமளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்ப்பாணம் செல்வா மஹாலில் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கு.விக்னேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் IIS City Campus இல் 2012/2013 கல்வியாண்டில் தமது கற்கை நெறிகளை பூர்த்தி செய்து வெளியேறும் மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கப்படுவதுடன் IIS நிறுவனத்தின் பயிற்சிகளை பூர்த்தி செய்து கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை முதன்மையான தகைமைகளை வெளிப்படுத்திய மாணவர் ஒருவருக்கு IIS நிறுவனத்தின் உயரிய விருதான அமரர் வைத்தியலிங்கம் குலரட்ணம் ஞாபகார்த்த தங்கப்பதக்கமும் கற்கை நெறிகளில் முதன்மையாக வந்த மாணவர்களுக்கு விசேட விருதுகளும் வழங்கப்படவுள்ளன. (அ-5)




## நவீன சந்தை கட்டட வேலைகள் இதுவரை பூர்த்தியாக்கப்படவில்லை

(கரவெட்டி)

பருத்தித்துறை புதிய நவீன சந்தைக் கட்டடத் தொகுதி நீண்ட காலமாக வேலை பூர்த்தியடையாமல் உள்ளதனால் அங்கு கடைகளை வாடகைக்கு பெற்ற கடை உரிமையாளர்கள் தமது கடைகளை திறந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.


பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட இரு மாடிகள் கொண்ட நவீன சந்தை மூன்று வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. நிர்மாணிக்கும் பணி ஒப்பந்தம் காலாவதியாகி 2 வருடங்கள் ஆகியும் பூர்த்தியாக்கப்படவில்லை.

இதனால் வாடகைக்கு கடைகளை ஒப்பந்தம் கொண்ட உரிமையாளர்கள் தமது வியாபார நடவடிக்கைகளை பூர்த்தியாக்கப் படாத அக்கட்டடத்தில் ஆரம்பித்துள்ளனர்.

இதனால் மக்களும் பெரும் அசெளகரியங்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந் நவீன சந்தையை முற்றாக நிர்மாணித்து வர்த்தகர்களினதும் மக்களினதும் நலனைப் பாதுகாக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(அ-3-24)

# சிற்றூர்தி-மோ.சைக்கிள் விபத்து; இருவர் படுகாயம்



(கரணவாய்)

சிற்றூர்தி - மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயடைந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் மண்டான் வல்வைப் பகுதியில் நேற்றைய தினம் மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கொழும்பைச் சேர்ந்த நிலைசர்மன் (வயது-28), பதுளையைச் சேர்ந்த நிரோஜன் (வயது-20) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்கள் கொண்டு வந்த வளர்ப்பு நாய் சம்பவ இடத்திலேயே இறந்தது.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-74)

## வெற்றுக்காணிகளையும் கவனியுங்கள்

சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட தொல்புரம் கிழக்கு, தொல்புரம் மத்தி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் குடியிருக்காத காணிகளில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய சூழ்நிலை காணப்படுவதாகவும் இதனால் அருகில் குடியிருப்போர் பாதிக்கப்படுவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே வெற்றுக்காணிகளில் உள்ள கழிவுப் பொருட்களையும் பற்றைகளையும் அகற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.(அ-3-15)

# மீன் பிடிப்பதற்கு அனுமதி வேண்டும்

## மீனவர்கள் கோரிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தங்கியிருந்து மீன் பிடிக்க உள்ளூர் மீனவர்கள் படையினரிடம் அனுமதி கோரியுள்ளனர்.

அப்பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக மீனவர்கள் தமது ஜீவனோபாயத்தை இழந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக சுண்டிக்குளம் கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுகின்றனர்.

அதேவேளை சுண்டிக்குளம் கடற்பகுதியில் தொண்டைமானாறு மற்றும் உடப்பு பகுதி மீனவர்கள் மீன்பிடித்து வருவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-3-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011/2012 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதி வெட்டுப்புள்ளி

மன்னார்

| கற்கைநெறி | புதிய பாடத்திட்டம் | பழைய பாடத்திட்டம் |
|---|---|---|
| MEDICINE | 1.5151 | 1.2608 |
| DENTAL SURGERY | 1.2287 | 1.2174 |
| VETERINARY SCIENCE | 1.0494 | 0.8587 |
| MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | 1.1627 | 1.1119 |
| AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.0293 | 0.4791 |
| AGRICULTURE | 0.6744 | -0.0546 |
| FOOD SCIENCE & NUTRITION | 0.8689 | 0.3123 |
| FOOD SCIENCE & TECHNOLOGY | 0.4385 | 0.3513 |
| BIOLOGICAL SCIENCE | -0.0537 | -0.6689 |
| APPLIED SCIENCES (BIO.SC) | -0.1686 | -0.2802 |
| ENGINEERING | 1.3753 | 1.5335 |
| ENGINEERING (EM) | 0.6289 | 1.5305 |
| ENGINEERING (TM) | 0.544 | 1.3428 |
| QUANTITY SURVEYING | NQC | 0.9874 |
| COMPUTER SCIENCE | 0.3273 | 0.8754 |
| PHYSICAL SCIENCE | 0.368 | -0.3972 |
| SURVEYING SCIENCE | 0.4662 | 0.4016 |
| APPLIED SCIENCES (PHY.SC) | NQC | NQC |
| MANAGEMENT | 0.9398 | 1.1195 |
| ESTATE MANAGEMENT & VALUATION | 1.3437 | 0.9211 |
| COMMERCE | 0.8686 | 1.0753 |
| PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.7148 | 1.4539 |
| BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.7554 | 1.016 |
| LAW | 1.493 | 1.1907 |
| ARTS * | 1.3626 | 1.1501 |
| ARTS (SP) / MASS MEDIA* # | 1.138 | 0.9829 |
| ARTS (SP) / PERFORMING ARTS * # | 1.0779 | 0.3915 |
| ARTS (SAB) - A * | 1.4367 | 1.1692 |
| ARTS (SAB) - B * | 1.414 | 1.3508 |
| MANAGEMENT STUDIES (TV) - A | 1.0736 | 0.8984 |
| MANAGEMENT STUDIES (TV) - B | 1.3368 | 1.147 |
| COMMUNICATION STUDIES * | 1.3535 | 1.1415 |
| PEACE & CONFLICT RESOLUTION * | 1.7508 | 1.5165 |
| ISLAMIC STUDIES * | 1.2108 | 1.0359 |
| ARABIC LANGUAGE * | 0.6782 | 0.8866 |
| ARCHITECTURE # | NQC | NQC |
| DESIGN (ARCHITECTURE) # | NQC | NQC |
| LANDSCAPE ARCHITECTURE # | NQC | NQC |
| TOWN & COUNTRY PLANNING | 1.0285 | 1.1036 |
| FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT # | NQC | NQC |
| INFORMATION TECHNOLOGY (University of Moratuwa) # | NQC | 0.5993 |
| INFORMATION TECHNOLOGY & MANAGEMENT # | 1.758 | 0.3119 |
| FACILITIES MANAGEMENT | 1.1989 | 0.9433 |
| TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 0.4893 | 0.8777 |
| MANAGEMENT & I. T (University of Kelaniya) # | NQC | NQC |
| INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | -0.033 | 0.5898 |
| STATISTICS & OPERATIONS RESEARCH | NQC | 0.7345 |
| COMPUTATION & MANAGEMENT | 1.7105 | 1.4458 |
| INFORMATION & COMMUNICATION TECHNOLOGY # | NQC | NQC |
| INFORMATION SYSTEMS (Uni. of Colombo School of Computing) | 1.3206 | 0.754 |
| AYURVEDIC MEDICINE & SURGERY | NQC | NQC |
| UNANI MEDICINE & SURGERY | 0.4449 | 0.2392 |
| SIDDHA MEDICINE | NQC | -0.1364 |
| HEALTH PROMOTION | 0.0326 | -0.1529 |
| NURSING | 0.0276 | 0.4235 |
| PHARMACY | NQC | 0.1847 |
| MEDICAL LABORATORY SCIENCES | 0.9911 | 0.6682 |
| RADIOGRAPHY | 0.4793 | 0.1307 |
| PHYSIOTHERAPY | 0.9366 | 0.7097 |
| ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | -0.0176 | -0.239 |
| FISHERIES & MARINE SCIENCES (University of Ruhuna) | -0.2942 | -0.4153 |
| ANIMAL SCIENCE & FISHERIES (University of Peradeniya) | NQC | -0.1519 |
| FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT | 0.8884 | 0.2162 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) | 1.4462 | 1.3466 |
| COMPUTING & INFORMATION SYSTEMS # | NQC | NQC |
| PHYSICAL EDUCATION # | NQC | NQC |
| SPORTS SCIENCES & MANAGEMENT # | NQC | NQC |
| SPEECH & HEARING SCIENCES | 1.2467 | 1.1682 |
| TOURISM & HOSPITALITY MANAGEMENT | 1.5767 | 1.1224 |
| AGRICULTURAL RESOURCE MANAGEMENT & TECHNOLOGY | -0.3152 | NQC |
| AGRIC BUSINESS MANGEMENT | 0.2887 | NQC |
| GREEN TECHNOLOGY | 0.5593 | -0.0868 |
| SCIENCE & TECHNOLOGY # | NQC | NQC |
| COMPUTER SCIENCE & TECHNOLOGY # | NQC | NQC |
| ENTREPRENEURSHIP & MANAGEMENT # | NQC | 0.8469 |
| ANIMAL SCIENCE # | NQC | -0.5841 |
| EXPORT AGRICULTURE # | NQC | NQC |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION # | NQC | NQC |
| INDUSTRIAL INFORMATION TECHNOLOGY # | NQC | -0.0287 |
| MINERAL RESOURCES & TECHNOLOGY # | NQC | NQC |
| AQUATIC RESOURCES TECHNOLOGY # | NQC | NQC |
| PALM AND LATEX TECHNOLOGY & VALUE ADDITION # | NQC | NQC |
| HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT (Uwa) # | 0.2317 | NQC |
| VISUAL ARTS (University of the Visual & Performing Arts) # | NQC | NQC |
| MUSIC (University of the Visual & Performing Arts) # | NQC | NQC |
| DANCE (University of the Visual & Performing Arts) # | NQC | NQC |
| DRAMA & THEATRE (Uni. of the Visual & Performing Arts) # | NQC | NQC |
| ART & DESIGN (Ramanathan Academy of Fine Arts) # | NQC | NQC |
| MUSIC (Ramanathan Academy of Fine Arts) # | 0.8802 | 0.4679 |
| DANCE (Ramanathan Academy of Fine Arts) # | NQC | 0.4819 |
| VISUAL & TECHNOLOGICAL ARTS (Swami Vipulananda Institute) | NQC | 0.56 |
| MUSIC (Swami Vipulananda Institute) | 0.6763 | NQC |
| DANCE (Swami Vipulananda Institute) | 0.7668 | 0.4362 |
| DRAMA & THEATRE (Swami Vipulananda Institute) | 1.2673 | 1.0931 |

# யாழிற்கான குடிநீர் விநியோகம் விவசாயிகளை பாதிக்கக்கூடாது

## கமக்கார அமைப்பு கோரிக்கை

(சிவநகர்)

இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நேரடியாக குடிநீர் கொண்டு செல்லும் திட்டத்தை செயற்படுத்தும் போது குளத்துநீர் 6 அடிக்கு குறைவடைய வாய்ப்புக்கள் ஏற்படலாம். இதனால் கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்படலாம் என கமக்கார சம்மேளன உப தலைவர் தெரிவித்தார்.

இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீர் கொண்டு செல்லுதல் தொடர்பான கூட்டம் கடந்த 4 ஆம் திகதி கிளி/மாவட்ட செயலகத்தில் கிளி/மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்திலே மேற்குறித்த கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தெரிவிக்கப்பட்ட கருத்தில் இரணைமடுக்குளத்தில் இருந்து நேரடி நீர் விநி யோகத்தை ஏற்படுத்தாமல் கிளிநொச்சி குள்த்திற்கு நீர்ப்பாசனத்தைச் செய்து அக்குளத்திலிருந்து யாழ்.நகருக்கான நீர் விநியோகத் திட்டத்தை செயற்படுத்துவது சிறந்தது. இதனால் கிளிநொச்சி நகர மக்களுக்கான நீர் விநியோகம் சிறப்படைவதுடன் கிளி. நகரமும் செழிப்படையும்.

இரணைமடுக்குளத்தின் மூலம் நீர்ப்பாசனம் பெறும் விவசாயிகளும் பாதிக்கப்படமாட்டார்கள் என தெரிவித்தார். இந்நிகழ்வில் மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ள வெளிநாட்டு அதிகாரிகள், கிளி/மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர், கமக்கார சம்மேளன பிரதிநிதிகள், விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் இந்த நீர் விநியோக முன்மொழிவுத் திட்டத்தை மீளாய்வு செய்து அனைவருக்கும் நல்லது கிடைக்க ஆவன செய்யப்பட வேண்டுமென கிளி/மாவட்ட விவசாயிகள் வேண்டுகோள் ஒன்றையும் முன்வைத்துள்ளனர். (அ-3-254)

# உணவு நஞ்சானதில் 20 மாணவர்கள் பாதிப்பு

காத்தான்குடி மில்லத் மகளிர் வித்தியாலய மாணவிகள் உட்கொண்ட காலை உணவு நஞ்சானதில் சுமார் 20 மேற்பட்ட மாணவிகள் காத்தான்குடி தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று காலை உட்கொண்ட உணவு நஞ்சானதில் மயக்கமுற்றும் வாந்தி எடுத்த நிலையிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது காத்தான்குடி தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் இது தொடர்பான பரிசோதனைகளை காத்தான்குடி தள வைத்தியசாலை வைத்தியர்கள் மேற்கொண்டு வருவதாகவும் பதில் வைத்திய அத்தியட்சகர் தெரிவித்தார்.

இதேவேளை இது சம்பந்தமாக பரிசீலிப்பதற்காக காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவும் காத்தான்குடி வைத்தியசாலைக்கு விஜயம் செய்துள்ளனர். (அ-2)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>உயரம்: 5' 5"<br>கி.பா: 14.5, 2இல் செவ்.<br>தொழில்/ தகைமை : A/L, (France Work Permit)<br>தொ. இல : B -1195 | பிறப்பு: 1992 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5' 1"<br>2இல் செவ்.<br>தொழில்/ தகைமை: O/L<br>தொ. இல : G - 1172 |
| பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5' 5"<br>தொழில்/ தகைமை : A/L (UK-PR)<br>(விவாகரத்தானவர்)<br>தொ. இல : B - 1196 | பிறப்பு: 1980 இந்து (விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: மகம் 4<br>உயரம்: 4' 3"<br>கி.பா: 27.5, 12இல் செவ்<br>தொழில்/ தகைமை: A/L, முன்பள்ளி ஆசிரியர்<br>தொ. இல : G - 1174 |
| பிறப்பு: 1983 R.C<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5' 6"<br>தொழில்/ தகைமை : BSc, Civil Engineer<br>தொ. இல : B - 1197 | பிறப்பு: 1985 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>உயரம்: 4' 11"<br>கி.பா: 46<br>தொழில்/ தகைமை: முகாமைத்துவம் (Canada Citizen)<br>தொ. இல : G - 1175 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பரணி 1<br>உயரம்: 5' 5", 4 இல் செவ்.<br>தொழில்/ தகைமை: O/L, தையல்<br>தொ. இல : B - 1183 | பிறப்பு: 1980 இந்து (KO)<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5' 4"<br>கி.பா: 15.5<br>தொழில்/ தகைமை: விவசாய டிப்ளோமா, கணக்காளர்<br>தொ. இல : G - 1176 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் இராணுவத்தினர் சுமுகமான உறவையே பேணி வருகின்றனர்

## யாழ். இராணுவ கட்டளை தளபதி தெரிவிப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அரசியலை வியாபாரம் செய்கிறது என யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ். சிவில் பாதுகாப்பு அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர் மேற்ககண்டவாறு குற்றஞ்சாட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினரால் எந்தப் பிரச்சினையும் ஏற்படுவதில்லை. மக்களுடன் நல்ல சுமுகமான உறவினைப் பேணி வருகின்றனர். ஆயிரத்து 700 இற்கும் மேற்பட்ட வீடுகளைக் கட்டிக் கொடுத்து உள்ளனர். அத்தோடு மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர். மீள்குடியேற்றத்திற்கு பல வழிகளிலும் உதவி வருகின்றனர். ஆனால் தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் அரசியலை வியாபாரமாக்கியதோடு பத்திரிகைகள் ஊடாக இராணுவத்தினருக்கு அவதூறு ஏற்படுத்தும் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறன அவதூறு செய்திகளுக்காக மிக விரைவில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளேன். இங்குள்ள பத்திரிகை நிறுவனத்தின் பணியாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொழில் அரசியலல்ல. அரசாங்க உத்தியோகத்தராக நான் பணிபுரிந்து வருகின்றேன். இராணுவத்தினரை இங்கிருந்து முற்றாக வெளியேறுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டால் இராணுவம் வெளியேறும்.

இராணுவம் இங்கு நிலை கொண்டுள்ளது மக்களின் பாதுகாப்புக்காகத்தான். இதை புரிந்து கொள்ளாது மக்கள் மத்தியில் இராணுவத்தினர் தொடர்பாக அவதூறு ஏற்படுத்தி வருகின்றனர்.

இராணுவக் கட்டளைத் தளபதியாக பதவியேற்கும் போது பல பிரச்சினைகள் இங்கிருந்தது. சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமைகளும் பாதுகாப்பு நெருக்கடிகளும் இருந்தன.

இதன் காரணமாக 27 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இங்கு நிலை கொண்டிருந்தனர். ஆனால் கடந்த 2010 ஆம் ஆண்டுக்குப் பின்பு இராணுவத்தினர் இங்கிருந்து படிப்படியாக குறைக்கப்பட்டு வந்துள்ளனர். தற்போது 13 ஆயிரம் இராணுவத்தினர் மட்டுமே இங்கு நிலை கொண்டுள்ளனர். ஆனால் தமது கட்டுப்பாட்டின் கீழ் இராணுவத்தினர் உள்ளது போல் அவர்களின் எண்ணிக்கையினை அதிகரித்து கூறி அதன் ஊடாக அரசியல் வியாபாரம் செய்து வருகின்றனர்.

வெளிநாடுகளிலிருந்து பணத்தினைப் பெற்று இங்கு மீண்டும் பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றனர். அதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கமாட்டோம்.

30 வருட கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையினை வளம்படுத்த ஒத்துழைக்க வேண்டும் எனவும் மக்களின் நலனுக்காகவே இங்கு நாம் உள்ளோம். இராணுவத்தினரால் இங்கு எந்த விதப் பிரச்சினையும் ஏற்படுத்தப்படவில்லை என அவர் தெரிவித்தார். (அ-6)



தேசிய ரீதியாக டெங்கு வாரத்தினை முன்னிட்டு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் ஒன்றிணைந்து வீடு வீடாக சென்று டெங்கு ஒழித்து வருகின்ற போதும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக பகுதியான சண்டிலிப்பாய் சுகாதார பகுதியில் 26 வயதினை உடைய ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் டெங்கு தொற்றுக்கு உள்ளானதை யாழ். வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து டெங்கு தொற்றுக்குள்ளானவர்களின் வீட்டினை சூழ்ந்த பிரதேசங்களுக்கு சுகாதார திணைக்களத்தினால் புகையூட்டுவதை படத்தில் காணலாம்.

(படங்கள்:-பண்டத்தரிப்பு செய்தியாளர்)

# அமெ.வின் யுத்த நடவடிக்கைகளை ஐ.நா.சபை அம்பலப்படுத்தியுள்ளது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

உலக சமாதானத்தை வலியுறுத்தி வரும் அமெரிக்காவின் யுத்த நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் அமைப்பு அம்பலப்படுத்தியுள்ளதாக இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கத் துருப்பினர் நடத்திய தாக்குதல்களில் சிறுவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டமை குறித்து ஐ.நா. அறிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இரண்டாவது தடவையாகவும் தீர்மானம் நிறைவேற்ற முயற்சித்து வரும் இந்தத் தருணத்தில் அமெரிக்காவின் முகத்திரையை ஐக்கிய நாடுகள் அமைப்பு கிழித்தெறிந்துள்ளது.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் அமெரிக்கா இலங்கை மீது அழுத்தங்கள் பிரயோகித்து வருகிறது.

இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி சர்வதேச நீதிமன்றின் முன் ஆஜர்படுத்த தீவிரம் காட்டி வரும் தரப்பினர் அமெரிக்கப்படையினர் ஆப்கானிஸ்தானில் மேற்கொண்ட குற்றச் செயல்கள் குறித்து மௌனம் காத்து வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து சிறுவர்களை பாதுகாக்க அரசாங்கம் எடுத்த முயற்சிகளை உலக சமூகம் பாராட்ட வேண்டும் என்றார். (அ-2)

# அநியாய விலையில் நெல்கொள்வனவு

## விவசாயிகள் கவலை

வன்னி பெருநிலப்பரப்பில் பெய்து வரும் மழை காரணமாக நெல் அறுவடை பாதிப்படைந்துள்ளதுடன் அழிவடைந்தும் உள்ளது. இதனால் வங்கிகளில் கடன்பெற்று விவசாயம் செய்த விவசாயிகள் கடன் மீளச் செலுத்த முடியாத அவலநிலைக்கு உள்ளாகியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மல்லாவி பாண்டிக்குளம் நெட்டாங்கண்டல் உட்பட வன்னி பெரு நிலப்பரப்பில் உள்ள பலஇடங்களை சேர்ந்த விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில், கடந்த வருட இறுதியில் காலபோக செய்கை மேற்கொண்ட போது பெரு வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக விதைத்த நெல் வயல்கள் அழிவடைந்த போதும் மீண்டும் பெரும் துன்பப்பட்டு நெற்செய்கையில் ஈடுபட்டோம். அதுவும் தற்போது பெய்து வரும் மழை காரணமாகவும் நெல் அறுவடைசெய்யும் இயந்திரம் பற்றாக்குறை காரணமாகவும் அழிவடைவதைக் கண்ணால் பார்த்துக் கொண்டு வேதனைப் படுவதை தவிர எம்மால் ஒன்றும் செய்முடியவில்லை. இது ஒருபுறம் இருக்க நெல் கொள்வனவு செய்யும் தனியார் துறையினர் 75 கிலோ எடை கொண்ட சிவப்பு நெல்லை 1300-1500 ரூபா வரைக்கும் 75 கிலோ கொண்ட சம்பா நெல்லை1900-2100 வரையான அடிமாட்டின் விலைக்கே கொள்வனவு செய்கின்றனர்.

அரச துறையினர் நெல்லைக் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்கமைப்புக் களை இதுவரை செய்யாதநிலை காணப்படுவதால் இவ் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இவ்விடயத்தில் முல்லை. மாவட்ட அரச அதிபர் விவசாயத்துறைக்கு பொறுப்பான அதிகாரிகள் தலையீடு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசிடமிருந்து நஷ்டஈடு பெற்று தருவதுடன் பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் ஊடாக நெல்லைக் கட்டுப்பாட்டு விலைக்கு கொள்வனவு செய்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (அ-3-15)

# சென்னையில் உள்ள இலங்கையின் வர்த்தக மையங்கள் தாக்கப்படலாம்

## இந்திய ஊடகங்கள் எச்சரிக்கை

(சென்னை)

சென்னையில் உள்ள இலங்கை வங்கி கிளை தாக்கப்பட்டதை அடுத்து அங்குள்ள ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்திற்கு சொந்தமான அலுவலகம் மற்றும் இலங்கை நிறுவனங்களுக்கு சொந்தமான தனியார் வர்த்தக மையங்கள் தாக்கப்படக்கூடும் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை வங்கி கிளையை தாக்கியவர்கள் அங்கிருந்த ஊழியர்கள் மீது கற்கள் மற்றும் பொல்லுகள் சகிதம் தாக்குதல் நடத்தினர். இந்த சம்பவம் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் இந்திய விஜயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழ்க்கட்சிகளை சேர்ந்தவர்களே இந்த தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

எதிர்காலத்தில் இவ்வாறான தாக்குதல்கள் நடந்தால் இரண்டு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் பாதிக்கப்படும் எனவும் இலங்கையில் உள்ள இந்திய நிறுவனங்களில் பணியாற்றும் இந்திய ஊழியர்களின் தொழில்களும் பாதிக்கப்படக் கூடும் எனவும் வர்த்தக சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-2)




வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதையும் மாணவிகளின் அணிவகுப்பினையும் படங்களில் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி கருணாநிதியின் குடும்ப சொத்தாகிவிட்டது!

**தி.மு.கவுக்காக கருணாநிதி ஒரு பைசா செலவு செய்தது இல்லை. ஆனால், கட்சியை கருணாநிதி தனது குடும்பச் சொத்தாக மாற்றிவிட்டார் என்று கொதிக்கிறார் தி.மு.க.வின் முதல் கொள்கை பரப்புச் செயலாளரும் அண்ணாவின் நெருங்கிய நண்பருமான என்.எஸ்.இளங்கோ.**



தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தைச் சேர்ந்தவர் என்.எஸ்.இளங்கோ. திராவிடர் கழகத்தில் இருந்து விலகிய அண்ணா தி.மு.க.வை உருவாக்கியபோது கட்சியின் ஏழாவது உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டவர் தி.மு.கவின் கொள்கை பரப் புச் செயலாளராகவும் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டச் செயலாளராகவும் அண்ணாவால் நியமிக்கப்பட்டவர், சிறந்த பேச்சாளர். தி.மு.க.வில் இருந்து சம்பத் விலகிய போது



இளங் கோவும் உடன் சென்றார். எம்.ஜி. ஆர். தனிக்கட்சி ஆரம்பித்தபோது அதி.மு.க வில் இணைந்து பணியாற்றினார். சமீபத்தில் 90 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய அவரைச் சந்தித்தோம். 90 வயதானாலும் பழைய நிகழ்வுகளை நம்மோடு பகிர்ந்து கொண்டார்.

நான் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் இன்டர்மீடியட் படிக்கும் போது பெரியாரின் பேச்சைக் கேட்டு மயங்கி தி.கவில் இணைந்தேன். இயற்கையாகவே நானும் நன்றாகப் பேசுவேன். என் பேச்சுத் திறமை அண்ணா, கண்ணதாசன், ஈ.வி.கே. சம்பத் உட்பட தி.க.வின் முன்னணித் தலைவர்களுடன் நட்பை ஏற்படுத்தித் தந்தது.

தி.மு.கவில் இருந்து அண்ணா பிரிந்து புதிய கட்சி ஆரம்பிக்க மண்ணடியில் உள்ள ஒரு லொட்ஜில் ஆலோசனை நடத்தினார். கட்சியின் பெயர், கொடி, சின்னம் வைப்பது தொடர்பான கூட்டம் அது. கூட்டத்தில் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், ஈ.வி.கே.சம்பத், பாவேந்தர் பாரதிதாசன், மதியழகன் ஆகியோருடன் நானும் இருந்தேன். கட்சிப் பெயர் தி.மு.க. என்றும் சூரியன் சின்னம் என்றும் கறுப்பு, சிவப்புக் கொடியையும் உருவாக்கினோம்.


கட்சி ஆரம்பிக்க ரூ.500 தேவைப்பட்டது. உடன் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி நூறு ,குடந்தை கே.கே. நீலமேகம் நூறு, ஈ.வி.கே.சம்பத் நூறு, மதுரை முத்து ஐம்பது, சேலம் சித்தையன் ஐம்பது, நான் நூறு கொடுத்து ஐநூறு ரூபாயை அண்ணாவிடம் கொடுத்தோம். அதிராம்பட்டினத்தில் பெரும் நிலக்கிழார் என் அப்பா நாராயணசாமி. அதனால் எனக்கு நூறு ரூபாய் கொடுப்பது சாதாரணமாக இருந்தது.17.09.1949 இல் சென்னை ரபின்சன் பூங்காவில் வைத்து அண்ணா கொட்டும் மழையில் நனைந்தபடி தி.மு.க. வைத் தொடங்கினார். அப்போது கருணாநிதி தி.மு.கவிற்கு வரவில்லை. அதன் பின்பு ஆறு மாதம் கழித்துத்தான் தி.க.வில் இருந்து தி.மு.க விற்கு வந்தார். அவர் லேட்டா வந்ததற்குக் காரணம் பெரியார் சொத்துக்களையும் தி.க.வையும் கைப்பற்ற முடியாத சூழல் நிலவியதால்தான்.

தி.க. வை விட்டு அண்ணா விலகியதும் கி.வீரமணியும் கருணாநிதியும் வாரிசு இல்லாத பெரியாரின் சொத்துக்களையும் தி.கவையும் கைப்பற்ற முயற்சி செய்தார்கள். அந்த முயற்சியில் பெரியாரின் நம்பிக் கையை கி.வீரமணி பெற்றுவிட வேறு வழியில்லாமல் அரசியல் ஆதாயத்திற்காக தி.மு.க விற்கு வந்தவர்தான். கருணாநிதி ஆனால் இப்போது அண்ணா ராபின்சன் பூங்காவில் தி.மு.க வை ஆரம்பித்த போது கொட்டும் மழையில் பேசியவன் நான்.வரலாற்று உண்மையை மறைக்கப் பார்க்கிறார். பாவம் அவருக்கு நான் உயிரோடு இருப்பது தெரியவில்லை. அதேபோல கட்சிக்காக சல்லிக்காசு கொடுக்கவில்லை அவர்.

என் மீதுள்ள நம்பிக்கையில் கொள்கை பரப்புச் செயலாளர், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட செயலாளர் பதவியை அண்ணா கொடுத்தார். மாவட்டச் செயலாளர் பதவியை அடைய கருணாநிதி விரும்பினார். அது கிடைக்காததால் என் மீது வெறுப்புக் கொண்டார்.

பேச்சாளராக தன்னை நிலை நிறுத்திக் கொண்ட கருணாநிதி பல ஊர்களில் கட்சிக்காரங்க ஏற்பாடு செய்யும் கூட்டங்களுக்குப் பேச வர்றதா அட்வான்ஸ் வாங்கி போகாமல் ஏமார்த்துவார். இதனால் கட்சியில் ஏக குழப்பம். அண்ணா கண்டிச்சும் அவர் அடங்கவில்லை. தஞ்சை மாவட்ட முதல் மாநாட்டில் அவர் பேசவும் பலத்த எதிர்ப்பு எழுந்தது. அப்போதும் நான் தலையிட்டு அவரைப் பேச

அண்ணாவுடன் இளங்கோ



வைத்தேன். தி.மு.க சந்தித்த முதல் தேர்தலில் கருணாநிதி திருவாரூர் தொகுதியில் நிற்க ஆசைப்பட்டார். அங்கே நின்றால் தோற்றுவிடுவார் என்பதால் குளித்தலையில் நிற்க வைத்தேன். அதில் கோபமாகி எனக்கெதிராகத் திரும்பினார். அந்தத் தேர்தலில் அவர் ஜெயித்தார். நான் சொற்ப ஓட்டில் தோற்றுப் போனேன்.

என்னை ஓரங்கட்ட நினைத்த கருணாநிதி மன்னை நாராயணசாமியை வளர்த்து விட்டார். கட்சியில் எல்லாவற்றையும் ஓரங்கட்டி அண்ணாவுக்கு பின்பு தான்தான்கிற நிலையைக் கொண்டு வந்தார். ஆனா,பல சொல்ல முடியாத விடயங்களில் அண்ணாவுக்கும் கருணாநிதிக்கும் கருத்து வேறுபாடு இருந்தது. பேசாமல் கூட இருந்திருக்கிறார்கள். நான்தான் சமாதானம் செய்து வைத்தேன். ஒரு பக்கம் என்னை எதிர்த்தாலும் தேவைப்படும் போதெல்லாம் என்னிடம் பணம் வாங்கிக் கொள்வார்.

***"தன்னை எதிர்த்தவர்களை எல்லாம் ஓரங்கட்டினார். அதற்காக, அவர் செய்த கோல்மால்களை விபரித்தால் நாடு தாங்காது"***

கருணாநிதியின் போக்கு பிடிக்காமல் மனவருத்தத்தில் இருந்த ஈ.வி.கே.சம்பத், மதியழகன் உள்ளிட்டவர்கள் அண்ணா திராவிடத்தை மையமாக வைத்து திராவிட நாடு கேட்டபோது மொழிவாரி மாநிலமே சிறந்தது என்று கூறி வெளியேறி தமிழ் தேசியக் கட்சியை ஆரம்பித்தார்கள். நானும் அண்ணாவின் பேச்சை மீறி அவர்களோடு போய்விட்டேன்.

கொஞ்ச வருடத்திலேயே ஈ.வி.கே. சம்பத் கட்சியை காங்கிரஸோடு இணைத்தார். எனக்கு உடன்பாடு இல்லை. நான் தனிமைப்படுத்தப்பட்டேன். காங்கிரஸில் கட்சியை இணைத்துக் கொண்ட சம்பத் பதவிகள் பெற்றதோடு தனது மகன் ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கு எம்.பி.பதவி வாங்கினார். நானும் காங்கிரஸில் சேர்ந்திருந்தால் எம்.பி,மத்திய அமைச்சர் பதவிகளைப் பெற்றிருக்க முடியும். ப்தவிக்காக கொள்கையை நான் அடகு வைக்க விரும்பவில்லை.

கட்சியில் ஏதேதோ ஃபிராடுகள் பண்ணி அண்ணா தனது வாரிசாக நினைத்த நாவலரை ஓரங்கட்டிட்டு அண்ணா மறைவுக்குப் பின்னர்தானே முதல்வராகவும் கட்சித் தலைவராகவும் வந்துவிட்டார் கருணாநிதி. தி.மு.கவை வளர்க்க மேடைதோறும் நாடகம் நடத்தி கட்சியை வளர்த்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனை கட்சியை விட்டு விரட்டியதும் கருணாநிதிதான்.

எனக்கு இரண்டு சகோதரர்கள், மூன்று சகோதரிகள் இருந்ததால் அவர்களை கரை சேர்க்க அரசியலை விட்டுவிட்டேன். ஆனால், 1972 இல் எம்.ஜி.ஆர். அ.தி.மு.கவை ஆரம்பித்தபோது என்னை அழைத்தார். அ.தி.மு.கவிலும் ஏழாவது உறுப்பினராகச் சேர்ந்தேன். அவர் ஆட்சிப் பொறுப்பேற்றதும் என்னை இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் வரும் இரண்டாயிரம் கோயில்கள் உள்ளடக்கிய ரீஜினல் கமிட்டியின் சேர்மனாக ஆக்கினார். ஆர்.எம். வீரப்பன் அறநிலையத் துறை அமைச்சராக இருந்தபோது இரண்டு வருடங்கள் பெரிய கோயில் சதய விழாவை நடத்தியிருக்கிறேன். தொடர்ந்து பல ஊர்களிலும் பேசும் வாய்ப்பைக் கொடுத்தார். ஆனால், நானாக அவரிடம் எந்தப் பதவியையும் பொறுப்பையும் கேட்டதில்லை. என்னோட பேச்சை இப்போதைய முதல்வரும் ரசிச்சிருக்கார். எம்ஜி.ஆர். இறந்த பின்னர் ஜெயலலிதாவைப் பார்க்க முயன்றேன். முடியவில்லை. அதன்பின்னர் அரசியலில் இருந்து விலகிவிட்டேன் என்றார்.

"இன்றைய தி.மு.கவை எப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டதும். "மூக்குக் கண்ணாடி வழியே பார்க்கிறேன்" கிண்டல் அடித்தவர் அண்ணாதான் உயிரோடு இருந்த வரையில் கருணாநிதியை தனது அரசியல் வாரிசாக முன்மொழியவில்லை. ஆனால், எம்.ஜி.ஆரின் உதவியோடு வாரிசாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டவர். தன்னை எதிர்த்தவர்களை எல்லாம் ஓரங்கட்டினார். அதற்காக அவர் செய்த கோல்மால்களை நான் விபரித்தால் நாடு தாங்காது. அரசியல் பித்தலாட்டத் திறமையை வைத்துக் கொண்டு நாற்பது வருடங்களுக்கு மேலாக தி.மு.கவை கட்டுக்குலையாமல் வைத்திருப்பதை வேண்டுமானால் பாராட்டலாம். ஆனால், தனக்குப் பின்னேயும் தனது மகன் ஸ்டாலினை தலைமைப் பொறுப்புக்குக் கொண்டு வரத் துடிப்பது அநியாயம்? சமீபத்தில் எனக்கு வாய்ப்புக் கிடைத்தால் ஸ்டாலினை கட்சியின் அடுத்த தலைமைக்கு முன்மொழிவேன்'ன்னு சொல்லி இருக்கிறார். இன்னொரு பக்கம் குடும்ப ஆதிக்கம் நடக்க தி.மு.க. ஒன்றும் சங்கரமடம் அல்லன்னு சொல்லி இருக்கிறார்.

இந்த வயதிலும் இரட்டை வேடம் போடுறதை அவர் நிறுத்தவில்லை. அவர் ஸ்டாலினை முன்மொழிந்தால் மதுரையில் இருக்கும் அவரது மூத்த மகன் அழகிரி தனக்கு பதவி வேணும்னு சொல்லி கலவரம் பண்ணுகிறார். இன் னொரு பக்கம் மகள் கனிமொழி, தயாநிதி, அழகிரி பையன் துரை தயாநிதி வரை கட்சியில் முக்கியத்துவப்படுத்துகிறார். இதை எல்லாம் பார்க்கும் போது அண்ணா, ஈ.வி.கே.சம்பத்,மதியழகன், நாவலர் ஆகி யோர் கருணாநிதியின் குடும்பம் பயன் பெறவா கட்சி ஆரம்பித்தார்கள் என்று வேத னையாக இருக்கு. தமிழ் நாட்டை குட்டிச் சுவராக்கிட்டு இருக்கார் கருணாநிதி. அண்ணா ஆரம்பிச்ச தி.மு.க. இப்ப இல்லை என்று முடித்துக் கொண்டார்.

*குமுதம் ரிப்போட்டர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஊசியால் அதிர்ஷ்டம்

## அம்புலிமாமா கதைகள்



வெகுகாலத்திற்கு முன் குப்பு, சுப்பு, சோமு என்று மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்களில் குப்பும் சுப்புவும் பணக்காரர்கள். சோமுவோ பரம ஏழை.

ஒருநாள் குப்பு சோமுவை அழைத்து உனக்கு இருநூறு வராகன்கள் கொடுக்கிறேன். அதை வைத்துக்கொண்டு வியாபாரம் செய் எனச்சொல்லி ஒரு பையில் இருநூறு வராகன்களைப் போட்டுக் கொடுத்தான்.

சோமுவும் அம்மூட்டையைப் பெற்றுக்கொண்டு கடைத் தெருப்பக்கம் சென்றான். பையிலிருந்து பத்து வராகன்களை எடுத்து வீட்டிற்கு வேண்டிய சில அத்தியாவசியமான பொருட்களை வாங்கிக்கொண்டான். பணத்தை எல்லாவற்றையும் சேர்த்து ஒரு மூடையாகக் கட்டி தலையின்மீது வைத்துக்கொண்டு அவன் வந்து கொண்டிருந்தான்.

அப்போது ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த கழுகு ஒன்று சோமுவின் தலையின்மீது உள்ள மூட்டையைக் கண்டு சரேவென்று பாய்ந்து அதைத்தூக்கிச் சென்றது. ஒரே நிமிடத்தில் நூற்றுத் தொண்ணூறு வராகன்களும் பறந்தே போய்விட்டன.

இரண்டு மாதங்களானதும் குப்பு, சுப்புவிடம் தாம் சோமுவுக்கு பண உதவி செய்ததைக்கூறி அவனைப்பார்த்து வரலாமா என்று அவனையும் அழைத்துக்கொண்டு சோமுவின் வீட்டிற்கு வந்தான். சோமு முன்போல ஏழையாக இருப்பதைக் கண்டு என்ன விடயம்? என்று கேட்க சோமு வும் நடந்ததையெல்லாம் கூறினான்.

குப்பு அதை நம்பவில்லை. ஆனால் சுப்புவோ நடந்தது நடந்துவிட்டது.நான் இருநூறு வராகன்கள் கொடுக்கிறேன். அதைக் கொண்டாவது வியாபாரம் செய்து முன்னுக்கு வா என்று கூறி வராகன்களைக் கொடுத்தான். சோமுவும் அதைவாங்கிக்கொண்டு நேராகத் தன் வீட்டிற்குச் சென்றான். யாருக்கும் தெரியாமல் நூற்றுத் தொண்ணூறு வராகன்களை தவிட்டுப்பானையில் ஒளித்து வைத்துவிட்டு பத்துவராகன்களை எடுத்துக்கொண்டு பொருட்களை வாங்கக் கடைத்தெருவிற்குச் சென்றான்.

அங்கு வீட்டில் சமைக்க ஒரு பொருளும் இல்லாததால் சோமுவின் மனைவி அதே தவிட்டுப் பானையை தவிட்டுடன் அப்படியே



விலைக்கு கொடுத்து ஒருரூபாய் வாங்கிக்கொண்டாள். கடைத் தெருவிலிருந்து வந்தசோமு தவிட்டுப் பானையைக் காணாது எங்கே பானை? எனவே அவனது மனைவியும் நடந்ததைக்கூறி அவனிடம் ஒரு ரூபாயை கொடுத்தான். சோமு என்ன செய்வான் பாவம்!

சுப்புவும் குப்புவும் இரண்டு மாதங்கள் கழித்து சோமுவை பார்க்க வந்தனர். அப்போதும் அவனது நிலைமாறாது இருக்கக்கண்டு என்ன சமாச்சாரம் என்று விசாரிக்க சோமுவும் நடந்ததைக்கூறினான். இந்தத் தடவை சுப்பு அதை நம்பவில்லை. அப்போது குப்பு கோபத்துடன் உனக்கு என்ன கொடுத்தும் பயனில்லை. போ உன் துணியெல்லாம் கிழிந்திருக்கிறதே! அதைத்தைத்தாவது போடக்கூடாதா என்று கேட்டான். அப்போது சோமு வீட்டில் ஊசிகூட இல்லை என்றான்.

அப்போது தெருவில் ஊசி விற்றுக்கொண்டு ஒரு குறத்தி போய்க் கொண்டிருந்தாள். அவனிடமிருந்து ஒரு ஊசியை விலைக்கு வாங்கி குப்பு சோமுவிடம் கொடுத்துவிட்டு எங்களாலான உதவியைச் செய்தோம். இனி உன்னுடையபாடு என்று சொல்லி சுப்புவையும் அழைத்துக் கொண்டு சென்றான்.

அன்றிரவு பக்கத்து வீட்டிலுள்ள செம்படவனின் மனைவி சோமுவின் மனைவியிடம் வந்து அம்மா உங்கள் வீட்டில் ஊசியிருந்தால் கொடுங்களேன் என் கணவர் வலையைத் தைக்கவேண்டும். வலையில் கிடைக்கும் முதல் மீனை உங்களுக்குக் கொடுக்கிறேன் என்றாள். சோமுவின் மனைவியும் வீட்டிலிருந்த ஊசியைக் கொடுத்தாள்.

மறுநாள் சாயந்திரம் செம்படவன் மனைவி ஒரு பெரிய மீனைக் கொண்டு வந்து சோமுவின் மனைவியிடம் கொடுத்து அம்மா இன்று நிறைய மீன்கள் கிடைத்தது. இதுதான் முதலில் கிடைத்த மீன் என்று சொல்லிப் போனாள்.

சோமுவின் மனைவியும் அன்றிரவே அதை அறுத்து சமையல் செய்யலானாள். ஆனால் மீனை அறுக்கையில் அதன் வயிற்றிலிருந்த பெரிய கண்ணாடிக்கல் போன்ற வஸ்துவை அவள் கண்டாள். அதைத் தன் கணவனிடம் கொடுக்க அவனும் அதை சாதாரணக்கல் என்று வீட்டில் சற்று



உயரமான இடத்தில் குழந்தைகளுக்கு விளையாடும் பொருள் போல வைத்துவிட்டான். ஒருநாள் ஒரு கல் வியாபாரி சோமுவின் வீட்டுப்பக்கம் வந்தபோது அந்தக்கல்லைக்கண்டு ஆயிரம் வராகன் கொடுத்தால் அதைத்தான் வாங்கிக்கொள்வதாக கூறினான். இதைக்கேட்டு சோமு அக்கல்லை விற்காமல் மறுநாளே தனக்குத் தெரிந்த ஒரு பெரிய இரத்தின வியாபாரியிடம் காட்டினான். அவனும் அதைப் பரீட்சித்து விட்டு இது ஒரு வகையான வைடூரியம். உனக்கு இதற்கு நிறையப் பணம் வாங்கித்தருகி றேன் என்று சொல்லி அதை விற்று பணத்தைச் சோமுவிடம் கொடுத்தான். சோமுவும் அதைக்கொண்டு வீடுவாசல் வாங்கிக்கொண்டு வியாபாரம் செய்து நல்லபெயர் பெற்றான்.

இதைக்கேட்டு குப்புவும் சுப்புவும் அவனைப்பார்க்க வந்தனர். சோமு அவர்களிடம் ஊசியால் தனக்கு வந்த அதிர்ஷ்டம் பற்றிக் கூறினான். அவர்கள் நம்பவில்லை. தாங்கள் கொடுத்த பணத்தாலேயே வியாபாரம் செய்து வந்ததாக நினைத்தனர்.

சோமு அவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு கொல்லைப்புறம் சென்று வீட்டைக்காட்டு கையில் சோமுவின் புத்திரர்கள் ஒரு மூட்டையைக்கொண்டு வந்து அப்பா இது இந்தக்குருவிக் கூட்டோடு மரத்தில் இருந்தது என்றனர். சோமு அந்தப் பையைக் குப்புவிடம் காண்பித்து இதோ நீ கொடுத்தபை. இதைத்தான் பறவை தூக்கிக்கொண்டு போனது என்றான். குப்புவும் அதை அவிழ்த்துப்பார்க்க அதில் நூற்றுத்தொண்ணூறு வராகன்கள் இருந்தன.

இதேசமயம் ஒரு வேலையாள் சோமுவிடம் வந்து இன்று மாட்டுக்கு தவிடு வாங்கிவந்தேன். அந்தத் தவிட்டுப் பானைக்குள் நூற்றுத்தொண்ணூறு வராகன்கள் அகப்பட்டன என்று சொல்லி அதைச்சோமுவின் முன்வைத்தான். சுப்புவும் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு சோமு சொன்னது உண்மையேயென அப்போது நம்பினான்.

அதிர்ஷ்டம் இருந்தால் ஒரு சிறு ஊசிகூட ஒருவனைப் பணக்காரன் ஆக்கும் என்பதற்கு இதுவே சாட்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

**43**

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

# 'இன்னைக்குத் தேவை ரூவா அம்பது மட்டும்'



காத்தருளுங்கள்

அகோ ஐம்பூதங்களே!
எங்கள் வாகனங்களே நீங்கள்
எங்கள் மேலநீங்களே சவாரி
செய்யாதீர்கள்
நீங்களெல்லாம் நெகிழ்ந்து
கொடுக்க வேண்டாம்
உங்கள் ரகசியம் அகழ்ந்தெடுக்க
மனித ஜாதிக்கு வலிமை
கொடுங்கள்

நிலத்தின் முதல்துகள்களே!
நீரின் முதல்துளியே!
தீயின் முதற்பொறியே!
காற்றின் முதல் அணுவே!
வானின் முதல்வெளியே!
உங்களின் நீட்சியே நாங்கள்

வணங்குகிறோம்

எம்மால் மாசுறாமல் உம்மையும்
உம்மால் உயிர்கெடாமல்
எம்மையும் காத்தருளுங்கள்
-வைரமுத்து-



"முப்பது டாலரில் இவன் ஒருமாதம் வாழ்கிறான்" என்றதும் 'ஆவ்' என்று ஆச்சரியமானாள் எமிலி.

"மிச்சத்தை நாளையத் தேவைக்கு வைத்துக் கொள்ளலாமே!" தான் சொன்னதை பரதேசிக்கு சொல்லச் சொன்னான் இஷி.

பரதேசி சொன்னான்:

"நான் நாளைக்கு சாப்புடற சாப்பாட்ட இன்னைக்கே சமைக்கிற தில்ல. நாளைக்கு சமைக்கிற பொருளுக்கு நான் இன்னைக்கே சேமிக்கிறதில்ல."

இஷியும் எமிலியும் தங்களை அறியாமல் ஓரடி பின்னுக்கு நகர்ந்தார்கள்.

மாணிக்கம் மிதக்கும் பரதேசியின் கண்களைக் கண்டுகொண்டே நிலைக் குத்தி நின்றார்கள்.

எமிலி சொன்னாள்:

...எங்கள் ஆங்கிலக் கவியைத் தன் திருவோட்டுக் குழியில் அடக்கம் செய்துவிட்டார் உங்கள் பரதேசி. நெற்றியில் விழுந்தாடிய முடியை ஒதுக்கவும் மறந்தவளாய்த் தன்னை மறந்து தன் நாமம் கெட்டாள் எமிலி.

கண்ணிரண்டும் கவிழ்ந்தான் இஷிமுரா.

"புத்தர் பிறந்த பூமி தத்துவ பூமிதான்"

உதட்டுக்குள் முணுமுணுத்து நீண்டதாய் நெட்டுயிர்த்தான்.

அவன் அடிக்கடி மேற்கோள் காட்டும் ஜப்பானியக் கவிஞர் டாமோ கோடாவின் கவிதை ஒன்று அவன் நெற்றியில் மின்னி மின்னிப் போயிற்று. சொன்னான் வாய்விட்டு.

"ஏழையாகவே பிறந்தேன்
ஏழ்மையின் செல்வந்தன் நான் -
அதில்
எனக்கு இணையாக முடியாது
எந்த அரசனும்

ஒருபக்கம் வெண்ணெய் தடவியு
ரொட்டிக்கு மேலே
வேறெதைத்தான்
விழுங்கமுடியும் என்னால்?

இந்தப் பிச்சைக்காரனிடம் வந்து பிச்சை வாங்க வேண்டும் எங்கள் ஜப்பானியக் கவிஞன்.

எமிலியின் ஐந்து டாலர் வந்து விழுந்தது பரதேசியின் திருவோட்டில்.

அவளையும் தாளையும் மாறி மாறிப் பார்த்தான் பரதேசி.

"எங்க டீக்கடையில் இது செல்லாது தாயி" திருப்பிக் கொடுத்து விட்டான்.

பரதேசியை 30 டிகிரி முதுகு வளைத்து வணங்கி நூறு ரூபாய் இட்டான் இஷி.

"தானம் தருவதற்கும் வணங்குவீர்களா?" கேலியோடு வியந்து கேட்டான் சின்னப்பாண்டி.

"தொழு நோயாளிக்குச் சேவகம் செய்வது என்று முடிவான பின் அவனுக்குச் சவரம் செய்யத் தயங்கக் கூடாது என்று எங்கள் நாட்டில் யட்டோரி மொகா ஷா எழுதிய கவிதை ஒன்று இருக்கிறது. பெற்றுக் கொள்கிறவர் என்னைப் பெருமைப்படுத்துகிறார். நான் வணங்கித்தானே ஆகவேண்டும்" என்றான் இஷி.

"இம்புட்டுக்காசை வைச்சிருந்தா எனக்கு ஒறக்கம் வராது ராசா. இன்னைக்குத் தேவை அம்பது. அத மட்டும் கொடு."

இஷிக்கு அவன் சொன்னதைச் சொன்னான் சின்னப் பாண்டி.

"இந்தியாவின் ஞானம் தெருவில் கொட்டிக் கிடக்கிறது."

அவர்களின் வியப்பின் விரிவாக்கத்தையெல்லாம் மில்லிமீட்டர் மில்லி மீட்டராய் கவனித்தபின்பு மென்மையாய்ச் சொன்னான் சின்னப்பாண்டி:

"இங்கே நீங்கள் பார்ப்பது இந்தியாவின் இன்னொரு முகம். உண்மையான இந்தியா பிரதான சாலையை விட்டுப் பிரிந்து கிடக்கிறது."

அவன் சொன்னது எத்துணை சத்தியம் என்பதை எமிலியும் இஷியும் உணர்ந்து கொண்டார்கள் அட்டணம் பட்டிக்குள் நுழையும்பொழுதே.

• • • • •

எமிலிக்கும் இஷிமுராவுக்கும் அட்டணம்பட்டி குடுத்த வரவேற்பே அதிசயமாத்தான் இருந்துச்சு. ஒடுங்குன பாதை-ஒத்தையடிப் பாதைக்கு அண்ணன்னு சொல்லலாம்; ஒரு வண்டி வந்தா மறுவண்டி விலக முடியாது. மூணுபேரும் காரைவிட்டு எறங்கி பொடிநடையா நடந்து போறாக.

அத்து வந்த கன்னுக்குட்டி ஒண்ணு எந்த வீடு தன் வீடுன்னு தெரியாம முழிச்சு முழிச்சுப் பாத்பாத்துக் கிட்டிருக்கு மேலயும் கீழயும்.

ரெண்டு பக்கமும் கொட்டிக் கிடக்கு குப்பை எருவு. ஒரு குப்பை மேட்டை சும்மா குத்திக் கிளப்பிக் கிட்டிருக்கு ஒரு காளை மாடு. ரெண்டு கொம்பையும் மாத்தி மாத்தி குப்பையில குத்தி தலையச் சிலுப்பவும் அந்த வெளியெல்லாம் கன்னங்கரேல்னு எருவுத் தூள் பறக்குது.

மண்டை காஞ்சுபோன மாட்டுக்கு கொம்புல அரிக்குமாம் குறு குறுன்னு. எருவுக்குள்ள இருக்கிற கதகதப்பு கொம்புக் குருத்துகள்ல பட்டதும் அரிப்பெடுத்த கொம்புக்கு சொரிஞ்சு விட்ட சொகம் கெடைக்குமாம் மாட்டுக்கு.

ரெண்டு எட்டு பின்னுக்கு வைச்ச மாடு மளார்ன்னு தவ்வி வந்து இன்னொரு குத்துக் குத்தி அள்ளி எறியுது குப்பைகளை இவுக இருக்கிற பக்கமா. ரெண்டு பேரையும் ஓரமா ஒதுக்கிக் கூட்டிக்கிட்டுப் போறான் சின்னப்பாண்டி.

கொஞ்சத் தூரத்துல பொசு பொசுன்னு புகை வருது; என்னமோ ஒரு கருகல் வாசனையும் சேந்து வருது. கூரைக் கிடுகை எரிச்சு கரும்புச்சோகையை மேல போட்டு நாலுகாலையும் ரெண்டு பேர் புடிச்சு வாட்டுவாட்டுன்னு வாட்டிக்கிட் டுருக்காங்க ஒரு பன்னிய. முதுகு உரோமம் தீஞ்ச வாசனை வந்ததும் படக்குன்னு பொரட்டி வயித்துப் பக்கம் மாத்திக் காட்டுறாங்க தீயை. என்னமோ ஊருக்கே சாம் பிராணி போட்ட மாதிரி புளியந் தோப்பு வழியா புகை போகுது ஊருக்குள்ள.

மூக்குல கைக்குட்டைய வச்சு மூடிக்கிட்டே போறாக மூணுபேரும்.

• • • • •

"ஏ இங்கே பார்றா ஒரு வெள்ளைக் காரிச்சியும் ஒரு வெள்ளைக் காரனும்." வாய்காப் பள்ளத்து வேலியோரமா வெளிக்கிருந்துக்கிட்டிருந்த நாலஞ்சு பயலுக விசுக்கின்னு எழுந் திருச்சிட்டானுங்க வெளிநாட்டுக் காரங்களப் பாக்கிற ஆசையில.

சத்தம் வந்த பக்கம் எமிலி எதேச்சையாத் திரும்பிப் பாக்கவும் தப்பா எந்திரிச்சிட்டமேன்னு தெரிஞ்சு, புத்துக்குள்ள தலையை இழுக்கிற பாம்புக மாதிரி பொசுக்குன்னு ஒக்காந்துட்டானுங்க.

கிட்ட வந்துட்டாக; ஊர் வரப்போகுது.

• • • • •

அவுக கண்முன்னால ஒருத்தன் உசிரைக் கையில புடிச்சு ஓடியாந் தான். சீமைக் கருவேலச் செடிகளை மளார்ன்னு தவ்வி, வேலி முள்ளுல லுங்கியச் சிக்கவிட்டுட்டுத் தெறிச்சு ஓடுறான் பய தென்னந்தோப்புக்குள்ள. கையில வெளக்குமாத்தோட அவன வெரட்டி வர்றா ஒரு கெடாச்சி.

"ஏலேய் கோடங்கிப் பேரா!... வறுத்த கறிக்கும் சாராயத்துக்கும் துட்டு இருக்கு; வட்டி கொடுக்கத் துட்ட இல்லையா? நாளைக்கு பொழுது சாயத்துக்குள்ள வட்டி வந்து சேரல... செருப்பு நஞ்சிருக்கும்; வெளக்குமாறு பிஞ்சிருக்கும்."

அவ, தோப்புக்குள்ள விட்டெறிஞ்ச வெளக்குமாறு வெகு தூரத்துல போய்விழுந்த சத்தம் கேட்டுச்சு.

நடந்த கூத்து என்னான்னு கேட்டுக் கிட்டாங்க எமிலியும் இஷிமுராவும்.

சின்னப்பாண்டியும் உள்ளதை மறைக்காம உண்மையச் சொல்லிட் டான்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனிக்காலத்தில் தொல்லை கொடுக்கும் வியாதிகள்

**ஆயுர்வேதம், வியாதிகளை கால நோய், அகால நோய் என்று இரண்டு வகையாகப் பிரிக்கின்றது.**



கால நோய் என்பது அந்தந்த பருவ காலத்தில் ஏற்படுகின்ற குறிப்பிட்ட நோய்கள். இவற்றைப் பற்றி நாம் நன்றாகத் தெரிந்து கொண்டால் நோய் வராமல் தடுத்து நோயின் தீவிரத்திலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம்.

அகால நோய் என்பது காலம் தவறிய நோயாகும்.

ஜலதோஷம், இருமல், ஆஸ்துமா, மலச்சிக்கல், தோலில் வரட்சி மற்றும் வெடிப்பு, ஒவ்வாமை எனப்படும் அலர்ஜி, ஆமவாதம் எனப்படும் மூட்டு வியாதிகள். இவை பனிக்காலத்தில் ஏற்படக்கூடிய நோய்களாகும்.

### ஆஸ்துமா

ஆஸ்துமா நோய்க்கு ஆயுர்வேதத் தில் தமக சுவாசம் என்று பெயர். இரவில் இந்நோய் அதிகமாக துன்புறுத்துவதால் இப்பெயர் பெற்றுள்ளது. பனிக்காலத்தில் இரவு நேரம் அதிகம். கூடவே அதிக குளிர். இதனால் ஆஸ்துமா நோயாளிகள் நீடித்த தொந்தரவைச் சந்திக்கிறார்கள்.

ஆஸ்துமா நோயாளிகள் எப்போதும் சுடு தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும். மேற்றோல் நீக்கிய சுக்கை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அந்தச் சுக்கு நீரை குடிக்க பயன்படுத்தலாம்.

குளிரில் வெறுங்காலோடு இவர்கள் நடக்கக்கூடாது. காதுகளையும் மறைத்துக் கொள்ள வேண்டும். தூங்கும் போதும் காதுகள், உள்ளங்கைகள், உள்ளங்கால்கள் மறைய போர்த்திக் கொள்ள வேண்டும். குளிர்ச்சியான உணவுகளை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். சுண்டைக்காய், இஞ்சி, முசுமுசுக்கை, தூதுவளை இரசம் போன்றவற்றை உணவில் அதிகளவு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தேங்காய் எண்ணெயில் கர்ப்பூரம், நெஞ்சு மற்றும் முதுகுப் பகுதியில் பூசி, சுடு தண்ணீர் கொண்டு ஒத்தடம் கொடுத்து வந்தால் ஆஸ்துமா குறைந்து சுகம் ஏற்படும்.

தூதுவளை சகலம் எடுத்துக் கொண்டு பதினாறு மடங்கு அதிகமான தண்ணீரில் கொதிக்க வைத்து எட்டில் ஒன்றாக வற்ற வைத்து தேன் கலந்து உபயோகிக்க ஆஸ்துமா இருமல் தீரும்.

ஆடாதோடை இலைச் சாற்றில் தேன் கலந்து சாப்பிட ஆஸ்துமாவில் இருந்து நிவாரணம் கிடைக்கும்.

### ஜலதோசம்

பனிக்காலத்தில் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் வெதுவெதுப்பான நீரைப் பயன்படுத்தினால் ஜலதோஷத்திலிருந்து தப்பிக்கலாம். ஒரு தேக்கரண்டி இஞ்சிச் சாற்றில் தேன் கலந்து சாப்பிட்டு வர ஜலதோஷம் விரைவில் தீரும். மூக்கடைப்பு ஏற்பட்டால் ஓமம், கருஞ்சீரகம், பச்சை கர்ப்பூரம் மூன்றையும் சம அளவு எடுத்துப் பொடித்து சிறு மூட்டை போல் கட்டி முகர்ந்து வந்தால் மூக்கடைப்புத் தீரும். இடம்விட்டு இடம் மாறுவதனால் ஏற்படும் ஜலதோஷம் நீங்க இஞ்சியை தண்ணீரில் கொதிக்க வைத்து குடித்து வந்தால் போதும்.

### இருமல்

ஆடாதோடை வேர், கண்டங்கத்தரி வேர் சம அளவு எடுத்து தண்ணீரில் கொதிக்க




வைத்து வடிகட்டி தேன் கலந்து கொடுக்க பனிக்காலத்தில் ஏற்படும் வறட்டு இருமல் நீங்கும். வறுத்த திப்பிலிப் பொடி, அரைத் தேக்கரண்டி வீதம் எடுத்து தேன் கலந்து சாப்பிட இருமல் தணியும்.

ஓமவல்லி இலைச்சாறு அல்லது திருநீற்றுப் பச்சிலைச் சாற்றில் தேன் சம அளவு கலந்து சாப்பிட இருமல் அகலும். தாளீச பத்ராதி சூரணத்தை அடிக்கடி சிறியளவு உட்கொண்டு வந்தாலும் இருமல் நீங்கும்.

### மலச்சிக்கல்

பொதுவாக குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் பனிக்காலத்தில் மலச்சிக்கல் ஏற்படும். குளிர்ச்சியான உணவுகளைத் தவிர்க்க வேண்டும். ஆறிப்போன, வறண்ட ஆகாரமும் நல்லதல்ல. பனிக்காலத்தில் சமைத்த உணவை சூடாக அவ்வப்போது உண்பது மிக நல்லது.

நிலா ஆவாரை இலையை துவையல் செய்து சாப்பிட்டு வரலாம். கறிவேப்பிலை, சுக்கு, மிளகு, சீரகம், இந்துப்பு, பொரித்த பெருங்காயம் சம அளவு எடுத்து பொடி செய்து சுடு சோற்றில் கலந்து நெய்விட்டுப் பிசைந்து உட்கொள்ள மலச்சிக்கல் தீரும்.

ஆயுர்வேத மருந்துக் கடைகளில் கிடைக்கும் ஹிங்கு திரிதண தைலம், கந்தர்வஹஸ்தாதி தைலம் போன்ற மருந்துகளை ஒரு தேக்கரண்டி வீதம் இரவில் படுக்கும் போது உட்கொண்டு வரலாம்.

### தோல் வரட்சி மற்றும் வெடிப்பு!

பனிக்காலத்தில் தோலில் எண்ணெய்ப் பசை குறைந்து வரட்சியும் உதட்டில் வெடிப்பும் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இதற்கு மகாதிக்தகம் நெய் என்ற மருந்தை உடலிலும் உதட்டிலும் பூசி வரலாம். அல்லது வெறும் பசுநெய், வெண்ணெய் இவற்றை உதட்டில் பூசிக் கொள்ளலாம். ஏலாதி தைலம், தார் வாதி தைலம் போன்ற எண்ணெய்களை உடல் முழுவதும் பூசிக் கொண்டு சுடு தண்ணீரில் குளித்து வந்தால் குளிர் காலத்தில் ஏற்படும் தோல் வரட்சி நீங்கும். தோல் தொல்லைகள் உள்ளவர்கள் தயிரை அறவே உணவில் இருந்து நீக்க வேண்டும். இரவில் கீரை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

எப்போதும் அசைவ உணவுகள் உட்கொள்கிறபோது உடன் பால் மற்றும் பாலில் தயாரிக்கப்பட்ட பண்டங்களை பயன்படுத்தக்கூடாது. அசைவ உணவுகளை சமைத்து ஆறிய பின் மீண்டும் சூடாக்கி உண்ணுதல் கூடாது.

குடிக்கும் தண்ணீரில் கருங்காலி கட்டையை இடித்து தண்ணீரில் கொதிக்க வைத்து குடிப்பதற்கு பயன்படுத்தி வந்தால் தோல் நோய் கட்டுப்படும். இது நீரிழிவு நோயா ளிக்கும் நலன் பயக்கும் என்று ஆயுர்வேத மருத்துவத்தின் தந்தை சரகர் கூறுகிறார்.

### மூட்டுவலி

பனிக்காலத்தில் மூட்டுவலி நோயாளிகள் அதிக துன்பத்திற்கு ஆளாகிறார்கள். இக்காலத்தில் இவர்கள் அஜீரணம், மலச்சிக்கல், காய்ச்சல் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆயுர்வேதம் வலியுறுத்துகிறது. இந்நோயாளிகள் பனியில் உலாவுதல், குளிர்ந்த நீரை குடிப்பதை, குளிப்பதை முடிந்தவரை தவிர்க்க வேண்டும்.

நீர்வாழ் உயிரினங்களின் மாமிசம், குளிர்ச்சியான உணவுகள், அரைகுறையாக வெந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும். பிண்டத் தைலம், சொட்டம் சுக்காதி தைலம் போன்ற எண்ணெய்களை சூடு செய்து உடலெங்கும் பூசிக் குளித்து வந்தால் மூட்டு வலி குறையும்.

குளிக்கும் தண்ணீரில் ஆமணக்கு இலை,



புளியிலை, நொச்சியிலை, தழுதாறையி லை போன்ற இலைகளைக் கொதிக்க வைத்து குளித்து வந்தால் மூட்டு வலியின் தீவிரம் குறையும்.

# அடிப்படை வசதிகளின்றி கோரக்கன்கட்டு கிராமம்

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கோரக்கன்கட்டு குடியிருப்பில் வசிக்கும் 25 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாமல் மிகவும் கஷ்டமடைவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கோரக்கன்கட்டு கிராமத்துடன் இணைந்ததாக உள்ள இக்குடியிருப்பு மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. அத்துடன் போக்குவரத்திற்கான பாதை புனரமைக்கப்படாத நிலையில் உள்ளது. இவர்களுக்கு 12 தகரங்கள், தடிகள், 25 ஆயிரம் ரூபா ஆகியவை மட்டுமே மீளக்குடியமர்ந்த பின்பு கிடைத்ததாகவும் குடியிருப்பு பழுதடைந்துள்ளதால் குழந்தைகளுடன் வாழ்வாதாரத்திற்கு ஏங்குவதாகவும் ஆதங்கப்படுகின்றனர்.

இங்கு குடியிருக்கும் மக்கள் பல வருடங்களுக்கு முன்பு மலையகத்தில் இருந்து வந்து தனியாரின் வீடுகளில் வேலையாளர்களாகவும் கமக்காரர்களுடன் கூலித் தொழிலாளர்களாகவும் இருந்து வந்த நிலையில் 2003 ஆம் ஆண்டில் மேற்படி குடியிருப்பில் வாழத்தொடங்கி பின்னர் 2008 ஆம் ஆண்டு யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்ததாகவும் தெரிவிக்கின்றனர். எனவே, இத்தனை இடர்களுக்குள்ளும் வாழும் தமக்கு உரிய தரப்பினர் உதவ முன்வர வேண்டுமென கோரிக்கை முன் வைத்துள்ளனர். (அ-3-254)

# சர்வாதிகாரப்போக்கில் எதிர்க்கட்சித் தலைவர்

## பாலித ரங்கே எம்.பி. தெரிவிப்பு

எதிர்வரும் வடமேல் மாகாண மற்றும் மத்திய மாகாண சபைத் தேர்தலில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான குழு போட்டியிடவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை கட்சிக்குள் ஜனநாயத்தை உதாசீனம் செய்து வருகிறது. எனவே, அந்த தலைமைக்கு எதிராக செயற்பட வேண்டியேற்பட்டுள்ளதாக பாலித ரங்கே பண்டார குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்க சர்வதிகாரியாக நடந்து கொள்வதாகவும் ரங்கே பண்டார குற்றம் சுமத்தியுள்ளார். இதேவேளை, ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைப் பொறுப்பை நிரப்பக் கூடிய எவரும் இல்லை என்று ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தமிழர்களுக்காக இலங்கை அரசுடன் பேசுவது யார்?

## கேள்வியெழுப்புகிறார் நாராயணசாமி

இந்தியாவிற்கு இரு நாட்கள் பயணத்தை மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு இந்திய அரசு சார்பில் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்படவில்லையென மத்திய மந்திரி ஜே.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் மேஜர் எம்.ராதாகிருஷ்ண பிள்ளை நூற்றாண்டு விழா பெரியார் திடலில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு,

திருப்பதி வந்தது அவரது சொந்தப் பயணம். தமிழக மக்கள் உணர்வைப் புரிந்து பயணத்தை அவர் இரத்து செய்திருக்க வேண்டும். மேலும் மத்திய அமைச்சர் நாராயணசாமியிடம் இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக இந்தியாவில் நடைபெற்ற பலத்த ஆர்ப்பாட்டங்கள் குறித்து கருத்துக் கேட்டபோது அவர் கருத்தளிக்க மறுத்துவிட்டார்.

ஆனாலும் இலங்கை அரசோடு மத்திய அரசு வைத்திருக்கும் உறவைத் துண்டித்தால், இந்தியா பேசுவதை நிறுத்தி விட்டால், இலங்கைக்கு எதிராக முடிவெடுத்தால், ஈழத்தமிழர்களுக்காக யார் குரல் கொடுப்பது என நாரயணசாமி கேள்வியெழுப்பியுள்ளார்.

தமிழகத்தில் இருக்கும் அரசியல்வாதிகள், தலைவர்கள் குரல் கொடுத்தால் கேட்பார்களா? எனவே, மத்திய அரசு ரீதியாக் தான் பேச முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## கோயிலை சாட்டி

# பணம் சம்பாதிக்கும் சில ஆசாமிகள்

(றெட்பானா)

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக்காலமாக கோவிலின் பெயரை சொல்லி பணம் சம்பாதிக்கும் முறை தொடர்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கோவிலின் பெயரை சொல்லி பணம் வாங்கும் இவர்கள் தாம் பணம் பெற்றுக் கொண்டதற்கான சிட்டைகளை கொடுப்பதில்லை என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, இவ்வாறு வருபவர்களிடம் அவர்கள் கூறும் கோவில் பற்றி வேறு விடயங்களை [illegible] தடுமாறுவதாகவும் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக உண்மையாக கோவிலுக்கு பணம் தேடி வருபவர்களை இனம்காண முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (அ-5-260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளை மதிக்கத்தவறினால் ஐ.நா.தீர்மானத்தை ஆதரிப்போம்

## நாராயணசாமி கூளுரை



(கொழும்பு)

மனிதவுரிமைகள் தொடர்பான ஐ.நா வின் பரிந்துரைகளை இலங்கை மதிக்க தவறினால் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படும் இலங்கைக்கு எதிரான எத்தகைய தீர்மானத்தையும் இந்தியா ஆதரிக்கும்.

இவ்வாறு மத்திய இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கூறிய அவர்,

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது அதை இந்தியா ஆதரித்தது.

மனிதவுரிமைகள் தொடர்பான ஐ.நா வின் பரிந்துரைகளை இலங்கை மதிக்கத் தவறினால் ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் மீளவும் அந்த நாட்டுக்கு எதிராக கொண்டு வரப்படும் எத்தகைய தீர்மானத்தையும் இந்தியா ஆதரிக்கும்.

மத்திய அரசு எப்போதும் இலங்கையில் உள்ள தமிழர்களின் நலனைப் பாதுகாப்பதில் உறுதியாக உள்ளது.

அவர்களுக்கு ராஜீவ்காந்தி –ஜெய வர்த்தன உடன்பாட்டின் மூலம் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை இப்போது இலங்கை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்.

தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுக்கொடுக்க இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது.

சில தமிழ்க்கட்சிகள், தமிழ்நாடு அரசாங்கம் போன்றன முன்யோசனையின்றி தீர்மானம் நிறைவேற்றியது போலன்றி இந்தியா நடுநிலைப்பாட்டை எடுத்தது. அதனால் தான் இலங்கை பிரச்சினையை இந்திய அரசு நாசூக்காகவே கையாள வேண்டியுள்ளது.

அங்குள்ள தமிழர்களுக்காக 500 கோடி செலவில் வீடமைப்பு சாலை அமைப்பு பணிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

இன்னும் பல நலத்திட்டங்களையும் செயற்படுத்த இருக்கின்றோம்.

தமிழ்நாடு அரசு கூறுவது போல் இலங்கை மீது பொருளாதார தடை விதித்து அவர்களை விரோதித்து கொண்டால் அங்குள்ள தமிழர்களுக்கு நம்மால் உதவி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# விசாரணை அறிக்கை இன்று கையளிப்பு

(கொழும்பு)

வீட்டு படிக்கட்டில் தடுக்கி விழுந்து கை முறிவு ஏற்பட்ட மாணவிக்கு சிகிச் சையின் பின் கை அகற்றப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை இன்று சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் அந்த விசாரணை அறிக்கை இதுவரையில் சுகாதார அமைச்சிற்கு கையளிக்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு தெரிவிக்கையிலேயே இன்று கையளிக்கப்படும் என தெரியவந்துள்ளது. (அ-2)

# மாத்தளை மனித எச்சங்கள் பரிசோதனைக்காக அமெரிக்காவிற்கு

(கொழும்பு)

மாத்தளை மனித புதைகுழியிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டுள்ள மனித எச்சங்கள் எண்ணிக்கை 146 ஆக உயர்வடைந்துள்ளது.

கடந்த 9 ஆம் திகதி மண்டையோடுடனான மனித எச்சங்கள் 136 கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் மண்டையோடற்ற 13 மனித எச்சங்களும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

மாத்தளை வைத்தியசாலையின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்காக கடந்த டிசம்பர் மாதம் நிலம் தோண்டப்பட்ட போதே இந்த மனித எச்சங்கள் கிடைத்துள்ளன.

இதேவேளை மாத்தளை வைத்தியசாலை வளாகத்திலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் புதைக்கப்பட்ட காலத்தை கண்டறிவதற்காக அதன் மாதிரிகளை அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நீதிமன்ற அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக களனி பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் ஆராய்ச்சி பிரிவின் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.

அனுபவமற்ற அதிகாரிகளால் மனித புதைகுழியை தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதால் அதன் ஆய்வுகளுக்குத் தடை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த மனித எச்சங்கள் தொடர்பான ஆய்வுகள் இடம்பெற்று வருவதாகவும் எதிர்வரும் சில வாரங்களில் அது தொடர்பான அறிக்கை வெளியிடப்படும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (செ-11)

# பேட்ஸ் கிருமிநாசினிகளுக்கு பதில் பி.ரி.ஐ.நுண்ணங்கி பக்றீரியா

(கொழும்பு)

பேட்ஸ் உள்ளிட்ட கிருமிநாசினிகள் நுளம்பு ஒழிப்புக்கெனப் பயன்படுத்தப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பி.ரி.ஐ. பக்றீரியா நுண்ணுயிரைப் பாவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பயிர்ச்செய்கைகளுக்குத் துணைபுரியும் தேனீக்கள், குளவிகள், வண்ணாத்திப் பூச்சிகள், சிலந்திகள் போன்றவற்றுக்கு பேட்ஸ் போன்ற கிருமிநாசினிகள் பாதிப்பு ஏற்படுத்துகின்ற போதிலும் பி.ரி.ஐ. பக்றீரியாக்கள் அவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கொழும்பு மாநகர சபை, தெஹிவளை, கல்கிஸ்ஸை மாநகர சபை, கொலன்னாவை நகர சபை உள்ளிட்ட பிரதேசங்களில் மாத்திரம் நுளம்பு ஒழிப்புக்காக பி.ரி.ஐ. பக்றீரியாவை ஒரு தடவை விமானம் மூலம் விசிறுவதற்கு 225 மில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது விடயமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் அமைச்சரவையையும் தாம் அறிவூட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் பி.ரி.ஐ.பக்றீரியா சுமார் இரு வாரங்கள் அளவில்தான் உயிருடன் காணப்படும் என்றும் அதனால் அதனை மீண்டும் மீண்டும் விமானம் மூலம் விசிற அதிக செலவு ஏற்படும் என்றும் மருத்துவ நிபுணர்கள் சுட்டிகாட்டி இருப்பதையும் அமைச்சரவையின் கவனத்திற்கு எடுத்துக் கூறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை நுளம்பு ஒழிப்புக்காக பி.ரி.ஐ. பக்றீரியாவை விரிவான அடிப்படையில் மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்காக விசேட நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்குமாறும் அமைச்சர், அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.(அ-2)

# 32 இலட்சத்தை மடிக்கணனியில் மறைத்து கடத்த முற்பட்டவர் கைது

சட்டவிரோதமான முறையில் 32 இலட்ச ரூபா பெறுமதியான வெளிநாட்டு பணத்தை மாலைதீவிற்கு எடுத்துச் செல்ல முயற்சித்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நபர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

25ஆயிரத்து 610 அமெரிக்க டொடலர்கள் மற்றும் 500 சிங்கப்பூர் டொலர்களும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். இவற்றின் இலங்கைப் பெறுமதி 32 இலட்சம்ரூபா என கணிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொள்ளுப்பிட்டி பிரதேசத்தைச் சேந்தவர் என தெரியவந்துள்ளது.

இவர் தனது மடிக்கணினியில் பணத்தை மறைத்து எடுத்துச் சென்றுள்ளார். சந்தேகநபர் மாலைதீவிற்கும் இலங்கைக்கும் இடையில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருபவர் என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2)

# இனவாதசக்திகளின் பிரசாரம் நாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல

## அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி

சில இனவாத சக்திகளின் பிரசாரம் ஆரோக்கியமானதல்ல என சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில கடும்போக்குவாதிகள் முஸ்லிம் இனத்திற்கும் இஸ்லாமிய மதத்திற்கும் எதிராகப் பிரசாரம் செய்து வருகின்றனர். சிங்கள பௌத்த மக்களுடன் முஸ்லிம் மக்கள் ஆரோக்கியமான உறவைப் பேணி வருகி ன்றனர்.

அரசாங்கம் அனைத்து மதங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருவதாக வும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் சர்வதேச அரங்கில் அபகீர்த்தியை ஏற்படுத் தக்கூடிய வகையில் அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முஸ்லிம் சமூகத் தில் கடும்போக்குவாதிகள் கிடையாது எனவும் முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கிடையில் இணக்கப்பாடு கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சிலர் ஏனைய முஸ்லிம் தலைவர்களை பலவீனப்படுத்தி தங்கள் பெயரை நிறுத்திக் கொள்ள முயற்சிக்கும் நிலைமை காணப்படுகின்றது.

தேவையற்ற பிரசாரங்கள் நீடித்தால் மீளவும் இன முரண்பாடுகள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ-2)



இணுவில் கந்தசுவாமி கோவில் இளம் தொண்டர் சபையின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலையில் சிறுவர்தின நிகழ்வு அண்மையில் யா/இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கமலராணி பஞ்சலிங்கம் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் சிறார்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் இலக்கு ?



விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் முடிவுக்கு வந்த பின்னர், முதல் முறையாக அமெரிக்காவின் வர்த்தகக் குழுவொன்று இலங்கைக்கு வந்து சென்றுள்ளது. விடுதலைப் புலிகள் அரங்கிலிருந்து அகற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகப் போகிற நிலையில்தான், அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தக் குழுவின் பயணம் இடம்பெற்றுள்ளது. கல்வி, பொறியியல் மற்றும் வடிவமைப்பு ஆலோசனைச் சேவைகள், உணவுக் கைத்தொழில், சுகாதார பராமரிப்பு, விமானச் சேவைகள் உதவி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகிய துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளே இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர். ஒரு பக்கத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஜெனிவாவில் கொண்டு வரும் முயற்சிகளில் இறங்கியுள்ள சூழலில்தான், இந்தக் குழுவின் வருகை இடம்பெற்றுள்ளது. இது தனியே இருதரப்பு வர்த்தக நலன்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டதொரு பயணமல்ல. அதற்கும் அப்பால் இலங்கைமீதான தனது பிடியை இறுக்குவதற்கான அமெரிக்காவின் இன்னொரு முயற்சியாக இதனைக் கருதலாம். பொருளாதார உறவுகளை வலுப்படுத்தல் கூட்டு முயற்சி வாய்ப்புகளை உருவாக்கல், விநியோகம், மற்றும் தரமான அமெரிக்கப் பொருட்களை இலங்கைப் பாவனையாளருக்கு கொண்டு வருதல் ஆகியனவே இந்த வர்த்தகக்குழுவின் வருகைக்கான நோக்கம் என்று அமெரிக்கத் தூதரக பொருளாதார கவுன்சிலர் அலிசன் விஅரியஸ், குறிப்பிட்டிருந்தார். என்னதான் சீனாவின் ஆதிக்கம் இருந்தாலும், இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளி நாடாக அமெரிக்காவே திகழ்கிறது.

2012 ஆம் ஆண்டில், முதல் 11 மாதங்களில் மட்டும் 2283.7 மில்லியன் டொலருக்கு இருதரப்பு பொருட்கள் வர்த்தகம் இடம்பெற்றுள்ளது. இதில் 2074.7 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை அமெரிக்கா இறக்குமதி செய்துள்ளதாகவும், 209 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்துள்ளதாகவும் கூறுகிறது, அமெரிக்க வர்த்தகத் திணைக்களத்தின் புள்ளி விபரம் ஒன்று.

இதில் ஒன்றைக் கவனிக்க முடியும், அமெரிக்காவே இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக இருக்கின்றபோதிலும், இலங்கையில் இருந்து அமெரிக்கா இறக்குமதி செய்யும் பொருட்களே அதிகம். அமெரிக்காவில் இருந்து இலங்கை இறக்குமதி செய்யும் பொருட்களின் அளவு மிகமிகக் குறைவானது. இதனால், இலங்கையுடன் நெருக்கமான வாத்தக உறவைக்கொண்டுள்ள போதிலும், அதன் சாதகத் தன்மையை அமெரிக்காவினால் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. அதாவது இலங்கையின் முதன்மையான ஏற்றுமதி நாடாக அமெரிக்கா உள்ள போதிலும் இறக்குமதி நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா ஏழாவது இடத்தில் தான் இருக்கிறது. முதலிடத்தில் இருப்பது இந்தியாதான்.

ஆக, இதுவரையில் இலங்கையின் நெருங்கிய வர்த்தக பங்காளியாக இருந்தாலும், அந்த வர்த்தக உறவுகளை தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்வதற்கு அமெரிக்கா இப்போது முற்பட்டுள்ளது. அதாவது, அமெரிக்கப் பொருட்களின் முக்கிய சந்தையாக இலங்கையை மாற்றுவது, அமெரிக்க வர்த்தகக் குழுவின் வருகையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று.

ஆனால், இருதரப்பு வர்த்தகத்தை அதிகரித்தல் மட்டும்தான், அமெரிக்காவின் பிரதான இலக்கு அல்ல. அண்மையில் அமெரிக்கத் தூதுவராகப் பொறுப்பேற்ற மைக்கல் ஜே சிசன், ஒரு அனுபவம் மிக்க இராஜதந்திரி. அவர் உலகின் மிகவும் சிக்கலான பல நாடுகளின் தூதுவராகவும், இராஜதந்திரியாகவும் பணியாற்றியவர். இலங்கைக்கு வரமுன்னரே, அவர் செனட் சபையில் வெளியிட்ட கருத்து இலங்கை அரசாங்கத்தை, கண்டனம் தெரிவிக்கும் அளவுக்கு கோபங்கொள்ள வைத்தது. ஆனால், அவர், கொழும்பு வந்து பவதவியைப் பொறப்பேற்ற பின்னர் அவ்வளவாக அதிகம் பேசுவதில்லை. இது அரசாங்கத்துக்கு ஒருவித கிலியை எற்படுத்தியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் அண்மைக்காலமாகவே ஒரு பேச்சு இருந்து வந்தது.

மைக்கல் ஜே சிசன் கொழும்பில் தூதுவராகப் பொறப்பேற்ற பின்னர் யாருடைய அறிக்கையையும் நம்பியிருக்காமல், தானே உண்மைநிலையை அறிய முற்பட்டது அவரை வித்தியாசமானதொரு தூதுவராக நோக்க வைத்தது. நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை ஆராய்ந்து விட்ட அவர், கடைசியாக அம்பாந்தோட்டைக்குச் சென்றிருந்தார். அம்பாந்தோட்டையில் அமெரிக்காவின் முதலீட்டுக்கான வாய்ப்புகளை ஆராய்வதே அவரது இந்தப் பயணத்தின் நோக்கம். ஏற்கனவே அம்பாந்தோட்டையில் சீனா காலூன்றிவிட்ட நிலையில், இப்போது, அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் அதன்மீது ஒரு கண் இருந்துகொண்டேயிருக்கிறது. அம்பாந்தோட்டையில் இந்தியா ஒரு துணைத் தூதரகத்தை அமைக்கும் அளவுக்குப் போயுள்ளது. அமெரிக்காவோ அங்கு தூரகத்தை திறக்க முனையவில்லை. வர்த்தக முதலீடுகளை மேற்கொள்வது குறித்தே ஆலாசிக்கிறது. அம்பாந்தோட்டையில் சீனாவின் செல்வாக்கு துறைமுகம்,விமான நிலையம், வர்த்தக முதலீடுகள் என்று விரிவடைந்துள்ள நிலையில், இதற்கு மேலும் அங்கு இடைவெளி அதிகரிப்பதைத் தடுக்க அமெரிக்கா விரும்புகிறது. இதனாலேயே அங்கு முதலீடுகளை மேற்கொள்ள அமெரிக்கா திட்டமிடுகிறது.

அதற்கான சாத்தியங்கள் குறித்தே அமெரிக்கத் தூதுவர் மைக்கல் ஜே சிசன் ஆராய்ந்திருந்தார்.

கொழும்பு வந்த அமெரிக்க வர்த்தகக் குழுவும் இதைப்பற்றி ஆராய்துள்ளது. இந்து சமுத்திரத்தில் அதிகரித்துவரும் சீனாவின் தலையீட்டை முறியடிக்கின்ற ஒரு மூலோபாயத்துடனேயே வர்த்தகக் குழுவை அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது. அதேவேளை, அண்மையில் பிரதம நீதியரசர் பதவிநீக்க விவகாரத்தில் அமெரிக்கா கூறிய ஒரு கருத்து எவருக்கும் மறந்துபோயிருக்க வாய்ப்பில்லை. பிரதம நீதியரசர் பதவி நீக்க முயற்சிகள் இலங்கையின் வெளிநாட்டு முதலீடுகளைப் பாதிக்கும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியா நுலன்ட் குறிப்பிட்டிருந்தார். அந்தக் கருத்து வெளியாகி சிலவாரங்களேயான நிலையில், அந்தக் கருத்துக்கு மாறாக, தனது வர்த்தகக் குழுவை கொழும்புக்கு அனுப்பி முதலீட்டு வாய்ப்புகள் குறித்துப் பேசியுள்ளது அமெரிக்கா.

இது பலருக்கு ஆச்சரியத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி[illegible]ருக்கலாம்.

உண்மையைச் சொல்லப்போனால், அமெரிக்கா இவ்வாறு நடந்து கொள்ளாமல் போனால்தான் ஆச்சரியப்படவேண்டும்.

ஏனென்றால், அமெரிக்காவின் இயல்பு அது.

தனது வர்த்தக நலன்களையும் பாதுகாப்பு நலன்களையும் எத்தகைய சூழலிலும் அமெரிக்கா விட்டுக் கொடுப்பதில்லை.

அரசியல், இராஜதந்திர நகர்வுகளையும் இவற்றையும் ஒன்றோடு ஒன்றாகப்போட்டுக் குழப்பிக்கொள்வதில்லை.

இதனடிப்படையில் தான், எத்தகைய கட்டத்திலும் இலங்கையுடனான வர்த்தக, பாதுகாப்பு உறவுகளை அமெரிக்கா பலியிடத் துணியாது என்று கூறமுடிகிறது.

ஒரு பக்கத்தில் இலங்கைக்கு அரசியல், இராஜாதந்திர ரீதியான அழுத்தங்களைக் கொடுத்தாலும், அதனுடன் முரண்பட்டுக் கொண்டாலும் இந்த விடயங்களில் அது இணக்கப் போக்குடனேயே செயற்படும். அரசியல் நடவடிக்கைகளால், தனது வர்த்தக, பாதுகாப்பு நலன்களுக்கு இடையூறு ஏற்படாமல் காய்களை நகர்த்துவதில் அமெரிக்கா கில்லாடி.

இந்த உண்மையின் அடிப்படையில், அமெரிக்க வர்த்தக குழுவின் வருகையை நோக்கினால், அது ஆச்சரியத்தை ஏற்படுத்தாது. இல்லாவிட்டால், ஒரு பக்கத்தில் இலங்கை அரசாங்கத்தை அமெரிக்கா கண்டிக்கிறது. இன்னொரு பக்கத்தில் முதலீடுகள் பற்றிப் பேசுகிறது என்று குழம்பிக்கொள்ள வேண்டியிருக்கும். அமெரிக்காவின் இந்த மாறுபட்ட அணுகுமுறை எமக்குக் குழப்பத்தை ஏற்படுத்தினாலும், அமெரிக்கா மட்டும் தனது இலக்குகளில் தெளிவாகவே உள்ளது.

-ஹரிஹரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தைச் சேர்ந்த 27 பேர் கொழும்பு சிறைச்சாலையில்

(கொழும்பு)

இலங்கை சிறையில் வாடும் 27 தமிழர்களை தமிழகம் கொண்டு வருவதற்கு அவர்களின் முகவரியை மத்திய அரசுக்கு அனுப்பாமல் தமிழக அரசு காலம் தாழ்த்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சிறைச்சாலையில் தமிழகத்தை சேர்ந்த 27 பேரும் கேரளாவை சேர்ந்த ஆறு பேரும் என மொத்தம் 33 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரையும் இந்தியா கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இவர்களில் கேரளாவைச் சேர்ந்த ஒருவரது பெயர் தவறுதலாக தமிழகத்தை சேர்ந்தவர்கள் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து சிறையில் உள்ள 33 பேரின் சரியான முகவரியை தருமாறு மத்திய உள்துறை அமைச்சகம், தமிழகம் மற்றும் கேரள அரசுகளிடம் வேண்டுகோள் விடுத்தது. கேரளா மட்டும் தன் மாநிலத்தை சேர்ந்த ஆறு பேரின் முகவரியை மத்திய அரசுக்கு அனுப்பியது. ஆனால், தமிழக அரசு தமிழகத்தை சேர்ந்த 27 பேரின் முகவரியை தமிழகம் இன்னும் அனுப்பவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மொத்தமுள்ள 33 பேரையும் கொழும்பு சிறையில் இருந்து இந்தியா கொண்டு வர தாமதம் ஏற்பட்டுள்ளது. கால தாமத்தை தவிர்க்க தங்கள் மாநிலத்தை சேர்ந்த ஆறு பேரை மட்டும் சிறையில் இருந்து விடுவித்து கொண்டு வர மத்திய அரசை கேரளா வலியுறுத்தி வருகிறது. (அ-2)

# இலங்கைக்கான தூதரை சவுதி திருப்பி அழைத்தது

(கொழும்பு)

இலங்கைக்கான தமது தூதுவரை சவுதி அரேபியா திருப்பியழைத்துள்ளது.

திருகோணமலை பணிப்பெண் ரிஸானா நபீக்கின் மரண தண்டனை தொடர்பில் இரண்டு நாடுகளுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலை அடுத்தே சவுதி தமது தூதுவரை திருப்பியழைத்துள்ளது.

இலங்கை அரசாங்கம் தமது சவுதி தூதுவரை திருப்பியழைத்ததாக தெரிவித்த நிலையில் சவுதியும் பதிலுக்கு தமது தூதுவர் அப்துல் அஸிஸ் அல் ஜமாலை திருப்பியழைத்துள்ளது.

குழந்தை ஒன்றை கொலை செய்தமை தொடர்பில் ரிஸானா நபீக்குக்கு கடந்த மாதம் சவுதியில் வைத்து தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து இலங்கைக்கும் சவுதிக்கும் இடையில் ராஜதந்திர முறுகலும் ஏற்பட்டுள்ளது. (அ-2)

# வெளிநாட்டவர்களுக்கு காணிகள் விற்பனை செய்ய முடியாது?

## அமைச்சர் ஜனக பண்டார தெரிவிப்பு

வெளிநாட்டவர்களுக்கு காணிகளை விற்பனை செய்ய முடியாத வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக காணி மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்பார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தம்புள்ள பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் ஆலோசனைக்கு அமைய இந்த சட்டத்திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது. வறிய மக்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

காணிச்சட்டத்தை திருத்தி அமைப்பதன் மூலம் வெளிநாட்டவர்கள் இலங்கையில் காணிகளை கொள்ளவனவு செய்ய முடியாது என அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

# மின்சார கூட்டுத்தாபனத்திற்கும் மின்சார சபைக்கும் இடையில் முறுகல்

இந்தியாவின் தேசிய மின்சார கூட்டுத்தாபனத்துக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையில் தீவிர முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக திருகோணமலை சம்பூரில் இந்தியாவின் உதவியுடன் அமைக்கப்படவுள்ள 500 மெகா வோட்ஸ் உற்பத்தியை தரவல்ல மின்சார மையத்தின் பணிகள் மேலும் தாமதமடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே செய்து கொண்ட உடன்படிக்கையில் மாற்றங்களை கொண்டு வர இலங்கை மின்சார சபை முயற்சிப்பதை அடுத்தே முறுகல் ஏற்பட்டுள்ளதாக இந்திய தேசிய மின்சார கூட்டுத்தாபனம் குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த முறுகல் தீர்க்கப்படாத நிலையில் திருகோணமலை திட்டம் 2016 ஆம் ஆண்டு அளவிலேயே நிறைவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# மொரட்டுவ பொலிஸ் நிலைய உயரதிகாரிகள் இடமாற்றம்

மொரட்டுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட நான்கு பேர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதற்கமைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நூர்தீன் மொஹமட், பதில் பொறுப்பதிகாரி சத்தாரட்ன உள்ளிட்ட நான்கு அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மொரட்டுவ எகோ உயன விகாரையின் விகாராதிபதி மிடிகஹ தென்னே விமலவன்ச தேரர் படுகொலைச் சம்பவம் தொடர்பில் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அச்சுறுத்தல் காணப்படுவதாக குறித்த பௌத்த பிக்கு பல தடவைகள் முறைப்பாடு செய்த போதிலும் பொலிஸார் உரிய முறையில் விசாரணை நடத்தவில்லை. தற்போது மொரட்டுவ பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக கமல் ஜயநெத்தி நியமிக்கப்பட்டுள்ளார். (அ-2)




★55 - ரோமின் முடிக்குரிய இளவரசன் டிபேரியஸ் கிளோடியஸ் சீசர் பிரிட்டானிக்கஸ் மர்மமான முறையில் இறந்தான். இவனது மரணம் நீரோ மன்னனாக வர வாய்ப்பளித்தது.

★1502 - இந்தியாவுக்கான தனது இரண்டாவது கடற்பயணத்தை வாஸ் கொடகாமா லிஸ்பனில் இருந்து ஆரம்பித்தார்.

★1733 - ஐக்கிய அமெரிக்காவின் ஜோர்ஜியா ஆங்கிலக் குடியேற்ற நாடாக ஜேம்ஸ் ஒக்லிதோர்ப் என்பவரால் அமைக்கப்பட்டது.

★1771 - சுவீடன் மன்னன் அடொல்ஃப் பிரெடெரிக் இறந்ததை அடுத்து அவனது மகன் மூன்றாம் குஸ்டாவ் மன்னன் ஆனான்.

★1818 - சிலி ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★1832 - கலாபகசுத் தீவுகளை ஈக்குவாடோர் இணைத்துக் கொண்டது.

★1832 - லண்டனில் கொலரா பரவியதில் 3 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

★1873 - எமிலியோ காஸ்டெல்லார் ஸ்பெயினின் புதிய குடியரசின் பிரதமராக ஆனார்.

★1912 - சீனாவின் கடைசி அரசன் க்சுவான் டொங் முடி துறந்தான்.

★1912 - சீனக் குடியரசில் கிரெகோரியன் நாட்காட்டி அமுலுக்கு வந்தது.

★1927 - முதலாவது பிரித்தானியப் படைகள் 'ஷங்காய் நகரை அடைந்தன.

★1934 - ஆஸ்திரியாவில் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியது.

★1961 - வெனேரா 1 விண்கலத்தை சோவியத் ஒன்றியம் வெள்ளிக் கோளை நோக்கி ஏவியது.

★2001 - நியர் ஷூமேக்கர் என்ற விண்கலம் 433 ஈரோஸ் என்ற சிறுகோளில் தரையிறங்கியது. சிறுகோள் ஒன்றில் தரையிறங்கிய முதலாவது விண்கலம் இதுவாகும்.

★2002 - யூகொஸ்லாவியாவின் முன்னாள் தலைவர் சிலொபடான் மிலோசெவிச் மீது ஹேக் நகரில் ஐ.நாவின் போர்க்குற்ற விசாரணைகள் ஆரம்பமாயின.

★2002 - ஈரானின் விமானம் ஒன்று கோரமபாத் நகரில் வீழ்ந்ததில் 119 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

★1809 - சார்ள்ஸ் டார்வின், ஆங்கிலேய இயற்கையியல் அறிஞர் (இ.1882)

★1809 - ஆபிரகாம் லிங்கன், ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதி (இ.1865)

★1918 - ஜூலியன் ஷ்விங்கர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (இ.1994)

★1967 - என்.ரவிக்கிரன், சித்திர வீணைக் கலைஞர்

### இறப்புகள்

★1804 - இம்மானுவேல் கண்ட், ஜேர்மனியைச் சேர்ந்த மெய்யியலாளர். (பி.1724)

★1908 - ஜி.யு.போப், தமிழ்நாட்டில் தமிழ்ப் பணிபுரிந்த அமெரிக்கர் (பி.1820)


★2009 - புண்ணியமூர்த்தி சத்திய மூர்த்தி, தமிழீழ ஊடகவியலாளர்

★2009 - முருகதாசன், தீக்குளித்து இறந்த ஈழத்தமிழன் (பி.1982)

### சிறப்பு தினம்

★டார்வின் தினம்

### ஆபிரகாம் லிங்கன்



அமெரிக்காவின் 16 ஆவது குடியரசு தலைவரான ஆபிரகாம்லிங்கன் 1809 ஆம் ஆணடு பெப்ரவரி 12 ஆம் திகதி அமெரிக்காவின் கெண்டக்கியில் ஓர் ஏழை குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை தோமஸ் லிங்கன் ஒரு தச்சர்.

தாயார் நான்சி ஹாங்க்ஸ் (*Nancy Hanks*) . காடுகளுக்கிடையே ஒன்பது மைல் நடந்து சென்று கல்வி பயின்றார் லிங்கன். ஆபிரகாம் லிங்கனுக்கு 9 வயது இருக்கும் போது தாய் இறந்து போனதால் சிற்றன்னையால் லிங்கன் வளர்க்கப்பட்டார். எப்போதும் கலகலப்பாகப் பழகுதல், கதை சொல்லுதல், வேடிக்கையாகப் பேசுவதல் ஆகிய லிங்கனின் குணங்கள், அவர் மீது மற்றவர்களை விருப்பம் கொள்ளச் செய்தன.

இவர் கறுப்பினத்தவர்களின் அடிமைத்தனத்திற்கு எதிராக குரல் கொடுத்தார். அரசியலில் ஈடுபடுவதன் மூலமே அடிமைத்தனத்தை ஒழிக்க முடியும் என்ற முடிவுக்கு வந்த லிங்கன் 1834 ஆம் ஆண்டு தமது 25 ஆவது வயதில் அரசியலில் களம் இறங்கினார்.

1860 இல் மேற்கு மாநிலங்களில் தலைவராக இருந்த இவர் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக வெற்றி பெற்றார்.

ஐக்கிய அமெரிக்காவைப் பிளவுபடாமல் காக்க தென் மாநிலப் பிரிவினைக் கருத்தாளர்களை எதிர்கொண்டு உள்நாட்டுப் போர் நடத்தி வெற்றி பெற்றவர். இவர் 1863 இல் அடிமைகள் விடுதலை பெற புகழ்பெற்ற விடுதலை எழுச்சி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 1865 இல் ஐக்கிய அமெரிக்காவின் 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் வழி அடிமை முறையை ஒழித்தார். இவருடைய தலைவருக்கான பண்புகளை அறிய இவர் நடத்திய உள்நாட்டுப் போர் மற்றும் அடிமை முறையை எதிர்த்து இவர் நாட்டு மக்களுக்கு விழிப்பு ஏற்படுத்தும் வகையில் எழுப்பிய குரலும் முக்கியமானவை.

உள்நாட்டுப் போர் முடியும் தறுவாயில் தென் மாநிலங்களுடன் கடுமையாக இல்லாமல் இணக்கமான முறையில் அமெரிக்க ஒன்றியத்தை நிறுவ முயன்றார். இவர் அடிமை முறையை ஒழிப்பதில் ஒரு சிறிதும் தளர்வில்லாமல் உறுதியாக இருந்ததை ஒரு சிலர் கடுமையாக சாடினார்கள். ஆனால், வேறு சிலர் இவர் போதிய விரைவுடன் அடிமை முறையை ஒழிக்கவில்லை என்றும் அடிமை முறையை போற்றிய தென் மாநிலங்களிடம் உள்நாட்டுப் போரின் இறுதியில் போதிய அளவு கடுமையாக நடந்து கொள்ளவில்லை என்றும் குற்றம் சாட்டினார். இறுதியில் 1865 இவர் வோஷிங்டன் டி.சியில் உள்ள ஃவோர்டு அரங்கில் ஜான் வில்கிஸ் பூத் என்பவனால் கொல்லப்பட்டார். அமெரிக்க ஒன்றியத்தின் ஒற்றுமைக்காக உயிர் துறந்து புகழ் எய்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை வழிநடத்த சிறப்புக்குழு; ஜெனீவா தீர்மான இரகசியங்கள் கசிவு

## இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானம் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கீழ் செயற்படும் சிறப்புக்குழுவை நியமித்தல், பொருளாதாரத் தடையை விதித்தல் உள்ளிட்ட பல இறுக்கமான யோசனைகளை கொண்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைக்கவுள்ள தீர்மானத்தின் பிரதிகள், கடந்த முறை தீர்மானத்தை ஆதரித்த நாடுகளின் தூதுவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பரிமாறப்பட்டுள்ளன.

இலங்கையில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கீழ் செயற்படும் சிறப்புக்குழுவொன்றை நியமிப்பதென்றும் இந்தக்குழு இலங்கையில் இருந்தே செயற்படுவதென்றும் இந்தத் தீர்மானத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வலியுறுத்தல், மனித உரிமைகளைப் பாதுகாத்தல், ஆட்கள் காணாமற்போவதை தடுத்தல் மற்றும் நீதித்துறை சுதந்திரத்தை உறுதி செய்தல் போன்றவற்றை வலியுறுத்தவும் இந்தத் தீர்மானத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இவை தவிர வடக்கில் நிலை கொண்டுள்ள இலங்கை படையினரைக் குறைத்தல், வடக்கு, கிழக்கு மக்களின் காணிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நிரந்தர வேலைத்திட்டத்தை முன்னெடுத்தல், ஆட்களைக் கைது செய்தல் மற்றும் தடுத்து வைத்தல் கொள்கைகளை அனைத்துலக சட்டங்களுக்கு அமைய அமைத்தல், கருத்து சுதந்திரத்தை உறுதி செய்தல் மற்றும் மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்குதல் தொடர்பான பல யோசனைகளும் இந்தத் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு எதிராக பொருளாதார தடைவிதிக்கும் யோசனையும் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் கூறியுள்ளன.

அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த தீர்மான முன்மொழிவு அடுத்த இரண்டு வாரங்களில் மேலும் திருத்தம் செய்யப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டுள்ளன. (அ-2)

## டீசல் நிராகரிப்புக்கு எதிராக வழக்குத் தாக்கல்

இலங்கைக்கு டீசலை விநியோகம் செய்தமையின் காரணமாக இழப்பீடு கேட்டு சிலோன் எண்ணெய் நிறுவனம் மீதும் அந்நாட்டு மூத்த பெற்றோலியத்துறை அதிகாரிகள் மீதும் இலங்கை மோட்டார் வாகன உரிமையாளர்கள் வழக்கு தொடர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இந்தியாவிடம் இறக்குமதி செய்துள்ள டீசல் தரம் குறைந்துள்ளதாக கூறி இந்த டீசலை இறக்குமதி செய்ய வேண்டாம் என இலங்கை நிராகரித்துள்ளது. இது குறித்து லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் சுபோத் தக்பால் கூறியதாவது,

இலங்கைக்கு 5 ஆயிரம் தொன் தரமான டீசலை கப்பல் வாயிலாக சிங்கப்பூரில் இருந்து அனுப்பி வைத்தோம். முன்னதாக சிலோன் எண்ணெய் சேமிப்பு நிறுவனம், டீசலின் மாதிரியை சோதனை செய்து பார்த்ததாகவும் அதில் டீசலின் தரம் குறைவாக இருப்பதாக கூறியுள்ளது. இதையடுத்து இந்தியன் ஒயில் கோர்ப்பரேசன் (ஐ.ஓ.சி.) அனுப்பிவைத்துள்ள 5 ஆயிரம் தொன் டீசலை இறக்குமதி செய்ய வேண்டாம் என திருப்பி அனுப்பி வைத்ததாகவும் அறிவித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (அ-2)

## இந்தோ.வில் இலங்கையர்கள் ஒன்பது பேர் கைதாகினர்

இந்தோனேசியாவில் ஒன்பது இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்ட விரோதமான முறையில் நாட்டுக்குள் பிரவேசிப்பதாகக் குறித்த இலங்கையர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் உள்ளூர் விமானமொன்றில் செல்வதற்காக முயற்சித்த போது குறித்த இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் இந்தோனேசியாவின் எந்தப் பகுதியில் தங்கியிருக்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்த தவறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் அடங்குவதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)

## பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க வேண்டாம்

### உறுப்பு நாடுகளிடம் கனடா மீண்டும் கோரிக்கை

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்க வேண்டாம் என கனடா மீண்டும் உறுப்பு நாடுகளிடம் கோரியுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இலங்கையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. இலங்கையில் நீதிமன்றக் கட்டமைப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளதாக கனடா சுட்டிக்காட்டியுள்ளது. முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்த இரண்டு உச்ச நீதிமன்ற தீர்ப்புக்களையும் அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளுக்கு புறம்பாக செயற்பட்டு வருவதாக கனடா குற்றம் சுமத்தியுள்ளது. 2009 ஆம் ஆண்டு யுத்தம் தொடர்பான விசாரணைகள் உரிய முறையில் இன்னமும் நடத்தப்படவில்லை என கனடா குற்றம் சுமத்தியுள்ளது. (அ-2)

## இணையத்தளம் ஊடாக விசா பெறுவோர் தொகை அதிகரிப்பு

இணையத்தின் ஊடாக விசா பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாளுக்கு நாள் இணையத்தின் ஊடாக விசா பெற்றுக் கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக தகவல் தொடர்பாடல் முகவர் நிறுவகம் அறிவித்துள்ளது.

மாதாந்தம் சுமார் ஒரு இலட்சம் பேர் விசா பெற்றுக்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. இணையத்தின் ஊடாக விசா வழங்குவதன் மூலம் உரிய முறையில் துரித கதியில் சேவைகளை வழங்க முடிவதாகக் குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு இணையத்தின் ஊடாக விசா வழங்குவதன் மூலம் ஒரு பில்லியன் ரூபா வருமானம் கிட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

## தேர்தல்களுக்கு பதிலாக சர்வஜன வாக்கெடுப்பா?

### கொதிக்கிறார் ஹேரத்

தேர்தல்களுக்குப் பதிலாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

தேர்தல்களை நடத்தாது அரசாங்கத்தின் மீது மக்களுக்கு காணப்படும் விசுவாசத்தை நிரூபிக்க சர்வஜன வாக்கெடுப்பை நடத்த முடியும் என அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன அண்மையில் தெரிவித்திருந்தார். எனினும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாக்குரிமையை கொள்ளையிடும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பை நடத்த உத்தேசித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தலுக்கு பதிலாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் தற்போது காணப்படுகின்ற போதிலும் அது மக்களினால் அளிக்கப்பட்ட ஆணையாக கருதப்பட முடியாது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களை விலைக்கு வாங்கியே இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கம் சகல துறைகளிலும் வீழ்ச்சி கண்டு வருவதாகவும் குறிப்பாக பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் எதிர்வரும் தேர்தலில் இந்த அரசாங்கம் வெற்றியீட்டாது. அதன் காரணமாகவே சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி ஆட்சியை நீடித்துக் கொள்ளும் முனைப்புகளில் தீவிரம் காட்டி வருகிறது என்றார். (அ-2)

## உலக புகைப்பட போட்டியில் கிழக்கு மாணவன் வெற்றி

உலக வங்கியினால் இணையத்தின் ஊடாக பிராந்திய ரீதியாக நடத்தப்பட்ட உலக புகைப்பட போட்டியில் கிழக்கு மாகாணத்தை சேர்ந்த 17 வயதுடைய பாடசாலை மாணவரொருவர் வெற்றி பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு, பட்டிருப்பு தேசிய பாடசாலையில் க.பொ.த. உயர்தர வகுப்பில் இறுதி யாண்டு கல்வி பயிலும் திவ்வியராஜ் சயந்தன் என்ற மாணவனால் அனுப்பி வைக்கப்பட்ட தெருவோரத்தில் வியாபாரம் செய்யும் சிறுவன் ஒருவனை காண்பிக்கும் புகைப்படமே இந்தப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

ஆபிரிக்கா, தெற்காசியா, கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் என ஆறு பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டு நடைபெற்ற குறித்த போட்டியில் 17 வயது கீழ் பிரிவில் தெரிவான 11 புகைப் படங்களில் இலங்கை மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளை சேர்ந்த இருவரது புகைப் படங்கள் தெற்காசிய பிராந்தியத்திலிருந்து தெரிவானதாக உலக வங்கியினால் வெளியிடப்பட்ட தெரிவுகள் பற்றிய விபரத்தின் மூலம் அறிய முடிகின்றது. (அ-2)






வாழ்வாதார கல்வியும் அபிவிருத்தியும் எனும் தொனிப்பொருளிலான தொழிற் பயிற்சி நெறிக்கான நிலையத்தினை ஜனாதிபதியின் ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜயசிங்கவினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க, முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என். வேதநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் சி.ஏ.மேகன்ராஜ் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டம் செய்தியாளர் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்டஈடு வழங்கக்கோரி விவசாயிகள் உண்ணாவிரதம்

## 18 ஆம் திகதி நடைபெற ஏற்பாடு

மன்னார் மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் வரட்சி காரணங்களினால் விவசாய நடவடிக்கைகள் அழிவடைந்த நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள நட்டங்களை ஈடுசெய்யும் முகமாக அவர்களுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்க பாதிக்கப்பட்ட விவசாயிகளுடனான அவசர கலந்துரையாடல் ஒன்று கடந்த சனிக்கிழமை மன்னார் உயிலங்குளம் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

இதன்போது விவசாய அமைப்புக்களும் விவசாயிகளும் இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை மன்னார் உயிலங்குளத்தில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக மன்னார் மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்தது.

இதன்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரியமுறையில் நிவாரணம் வழங்கப்படவில்லை. விவசாயிகள் வங்கியில் பெற்றுக்கொண்ட கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் உள்ளனர். நகைகளை வங்கியில் வைத்து பணத்தை பெற்றவர்கள் திருப்பி நகைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

ஆனால், அரசாங்கத்தினால் விவசாயிகளுக்கு அமுல்படுத்தப்பட்ட சகல திட்டங்களும் தென்பகுதி விவசாயிகளுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், வடமாகாணத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அமுல் படுத்தவில்லை.

இதனால் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தொடர்ந்தும் தற்போது பொருளாதார ரீதியில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றதோடு விவசாய குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அரசாங்கத்தினால் வடமாகாண விவசாயிகள் சகல விடயங்களிலும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதை கண்டித்து எதிர்வரும் 18 ஆம் திகதி அனைத்து விவசாயிகளும் ஒன்றிணைந்து மன்னார் உயிலங்குளம் பகுதியில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து அரசாங்க அதிபருக்கு மகஜர் கையளிப்பது என தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் வித்தியாலய அதிபர் பி.ரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ராஜகுமார் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (அ-3-30)

## விண்ணப்பம்கோரல்

இலங்கைத்திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் நடத்தப்படும் சுற்றுலாத்துறையில் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிக்கு 18 வயதைப்பூர்த்தி செய்த அனைவரும் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)

# சிறுமி தேங்காய் திருடிய வழக்கை வாபஸ் பெற்றனர் பொலிஸார்

பாடசாலை தேவைக்காக பணத்தை பெற்றுக் கொள்ளும் பொருட்டு 8 தேங்காய்கள் திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட 13 வயதுச் சிறுமிக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

சிறுமி மீதான இந்த வழக்கை ஹொரண நீதவான் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் வாபஸ் பெறப்பட்டது. சிறுமிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த பொலிஸாரால் வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது. வழக்கு வாபஸ் பெறப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறுமிக்கு அறியத் தருமாறு நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

சிறுமி கல்வி கற்ற பாடசாலைக்கு நிறப்பூச்சு பூசுவதற்காக 800 ரூபா பணம் அனைத்து மாணவர்களிடமிருந்தும் அறவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் அவரது ஏழைப் பெற்றோரால் பணத்தை வழங்க முடியாமையின் காரணமாக சிறுமி தேங்காயை திருடி விற்று பாடசாலைக்கு பணம் செலுத்த முற்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊடகங்கள் அநாவசிய பிரசாரங்களை மேற்கொண்டதாகவும் அதன் காரணமாக சிறுமியின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் எனவும் இவ்வாறான சம்பவங்கள் குறித்து ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (அ-2)

# ஹலால் என்பது சுத்தமான உணவு; பிரச்சினைப்படுவதற்கு எதுவுமில்லை

## பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

ஹலாலை பூதாகரமாக்கி அதிலிருந்து பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு ஹலாலில் ஒன்றுமே இல்லை. ஹலாலான உணவு என்பது சுத்தமான உணவாகும். இவ்வாறு பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கம்பளையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் இன மற்றும் மதங்கள் மூலமாக இனங்களுக்கிடையில் நிலவும் புரிந்துணர்வை ஒழிக்க முற்படும் சக்திகளுக்கு ஜனாதிபதி ஒருபோதும் இடமளிக்கமாட்டார். நாட்டில் நடைபெற்ற கொடிய யுத்தத்தின் பின்பு இனங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஏற்பட்டு வருகின்றது. சமாதானம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தில் இனங்களுக்கு மத்தியில் பகைமைகளை வளர்க்க இடமளிக்க முடியாது. இவ்வாறான முரண்பாடுகளை உருவாக்குவதற்கு சிறு சக்திகள் முற்படுகின்றன. நாம் முஸ்லிம் சமூகத்தை சந்தேக கண்கொண்டு நோக்கக்கூடாது.

சர்வதேசத்தின் முன்னால் இலங்கையை தண்டிக்க சில நாடுகள் முனைப்புடன் செயற்படுகின்றன. பின்லேடன் எப்படி கொலை செய்யப்பட்டார். அவருக்கு என்ன நடந்தது? அவரை கொலை செய்ய யார் வந்தார்கள் என்று யாருக்கும் தெரியாது.

ஆனால், இலங்கைக்கு எதிராக விரல் நீட்டப்படுகின்றது. நாம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தியுள்ளோம். அரசாங்கம் யுத்தத்தின் பின்பு வட கிழக்கு உட்பட சகல பகுதிகளிலும் கோயில்களை நிர்மாணிக்கவும் பள்ளிவாசல்கள் கட்டவும் உதவியுள்ளது என்றார். (அ-2)

# இரத்தினபுரியில் பரவும் மூளைக்காய்ச்சல் நோய்

## சுகாதார அமைச்சு தகவல்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் பரவிவரும் மூளைக் காய்ச்சல் நோயை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரத்தினபுரியில் மூளைக் காய்ச்சல் நோய்க்கு பலர் பாதிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. மூளைக் காய்ச்சல் கியூலெக்ஸ் நுளம்பு மூலமாக பரவுகிறது.

பிள்ளைகளுக்கு காய்ச்சல் ஏற்படுமாயின் உடனடியாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது. இந்நோயால் காய்ச்சல், தலைவலி, வாந்தி, மயக்கம், வலிப்பு, நினைவு தடுமாறுதல், கோமா நிலையும் இறப்பும் ஏற்படும்.

நோய் அறிகுறிகள்; அதிகமான காய்ச்சல், தலைவலி, வாந்தி, மூளை நிலை குலைதல், நினைவிழத்தல், வலிப்பு, இதயம் மற்றும் சுவாச உறுப்புகள் செயலிழத்தல், அதிக ஆழ்ந்த மூச்சு, கண்தசை நார்கள் செயல் இழப்பு, கை, கால்கள் முடங்கிப் போதல் என்பன ஏற்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# தாக்குதலுக்குள்ளான பணிப்பெண் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

தொழில் வாய்ப்பின் நிமிர்த்தம் சென்று பாதிக்கப்பட்ட குளியாபிட்டிய கிரிந்த பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய பெண்ணொருவர் நாடு திரும்பியுள்ளார்.

இரு பிள்ளைகளின் தாயான இவர் கடந்த டிசெம்பர் 21 ஆம் திகதி தனியார் வேலை வாய்ப்பு முகவர் நிறுவனத்தின் ஊடாக டுபாய்க்கு சென்றுள்ளார்.

அந்த வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தின் டுபாய் கிளையின் நிர்வாகியினால் தாம் தாக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்த நிர்வாகியினால் வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தில் தங்கியுள்ள இலங்கைப் பணிப்பெண்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாக்குதல் காரணமாக அவரது கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவர் தற்போது சிகிச்சைகளுக்காக குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனமதிக்கப்பட்டுள்ளார். (அ-2)



இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் புதிதாக அமைக்கப்பட்ட என்.எஸ்.ஆர்.ரூபன் கொம்பிளக்ஸ் கட்டட திறப்பு விழா நேற்று மாலை நடைபெற்றது. இதன்போது..... (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரறிவாளன், சாந்தன், முருகனது தூக்குக்கயிறு அறுக்கப்படும் - வைகோ



மரணதண்டனை என்பது கூடாது என்று நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம். அந்த வகையில் அப்சல் குருவை தூக்கிலிட்டதை நாங்கள் கண்டிக்கிறோம் என ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் என்ற வழக்கு டில்லி உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கின் தீர்ப்பு இன்னும் ஒன்றரை மாதத்தில் வரும் என எதிர்பார்க்கிறோம். இதில் நீதி கிடைக்கும் என்று நம்புகிறோம். 3 பேரின் தூக்குக்கயிறு அறுத்து எறியப்படும்.

மேலும் தமிழக மக்களாகிய நீங்கள் எங்களை வாழ்த்துங்கள். நாங்கள் நடத்தும் கிளர்ச்சி போராட்டத்தை வெற்றி பெற செய்யுங்கள். ஈழத்தமிழர்களுக்கான பிரச்சினையில் எங்களது நிலைப்பாட்டை நாங்கள் எப்போதும் மாற்றமாட்டோம்.

தமிழக மக்களின் சுயமரியாதையை நிலை நாட்டுவதற்கு போராடுகிற ஒரே இயக்கம் ம.தி.மு.க தான். தமிழர்களின் வாழ்வுரிமைக்காக முதலில் குரல் கொடுப்பது ம.தி.மு.க தான்.

தேர்தலில் தோற்பது தோல்வி அல்ல. நாங்கள் போராளிகள். போராடிக் கொண்டுதான் இருப்போம்.

அ.தி.மு.க, தி.மு.கவுக்கு அடுத்த மாற்று கட்சியை மக்கள் தேட ஆரம்பித்து விட்டனர். அந்த தேடல் ம.தி.மு.கதான். எதிர்காலத்தில் வெற்றியை பெறுவோம் என தெரிவித்துள்ளார்.(அ-5)


# காந்தியின் கடிதம் ஏலத்துக்கு வருகிறது

(லண்டன்)

சுதந்திர போராட்டத்தின்போது பிரிட்டிஷ் அரசுக்கு மகாத்மாகாந்தி எழுதிய அரிய கடிதம் ஒன்று லண்டனில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஏலம் விடப்படவுள்ளது.

கடந்த 1943 ஆம் ஆண்டு காந்தியும் அவரது தொண்டர்களும் கைது செய்யப்பட்டு புனேயில் உள்ள ஆகா கான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டனர்.

நான் எந்தச் சிறையிலும் எத்தனை காலம் வேண்டுமானாலும் இருக்க தயார். ஆனால் என்னுடன் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்களை உடனே விடுவிக்க வேண்டும். என்னை அடைத்து வைக்க ஏராளமான பொது நிதி செலவழிக்கப்படுவது கடும் கண்டனத்துக்குரியது. இதை உடனடியாக நிறுத்த வேண்டும் என 1943 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி மகாத்மா காந்தியால் பிரிட்டிஷ் அரசுக்கு எழுதப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இதில் மகாத்மா காந்தியின் கையொப்பமும் இடம் பெற்றுள்ளது.



இந்தியர்களின் விடுதலை குறித்த காந்திஜின் கடின உழைப்பையும் தியாக மனப்பான்மையையும் எடுத்துரைப்பதாக இக்கடிதம் உள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

எதிர்வரும் 14ஆம் திகதி இக்கடிதம் ஏலத்திற்கு வரவிருக்கிறது. இக்கடிதத்தின் ஆரம்ப ஏலத்தொகை 8.5 இலட்சம் தொடக்கம் 13 இலட்சம் ரூபாய் வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# இந்தியாவிற்குள் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித்திட்டம்

பாராளுமன்ற தாக்குதல் தீவிரவாதி அப்சல் குருவுக்கு டில்லி திகார் சிறையில் கடந்த 9 ஆம் திகதி தூக்குதண்டனை நிறைவேற்றப்பட்டது. இதன் எதிரொலியாக அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் தடுப்பதற்காக நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

### தாக்குதலுக்கு சதி

இந்த நிலையில் அப்சல் குரு தூக்கிலிடப்பட்டதற்கு பழிக்குப் பழி வாங்கும் விதத்தில் இந்தியாவுக்குள் பெரியளவில் தாக்குதல் நடத்துவதற்கான சதித்திட்டம் தீட்டப்பட்டு இருப்பதாக உயர்மட்ட புலனாய்வு குழுவினருக்கு இரகசிய தகவல்கள் கிடைத்துள்ளன. பாகிஸ்தானில் ராவல்பிண்டி மற்றும் செப்பூர் ஆகிய இடங்களில் லஸ்கர் இ தொய்பா மற்றும் ஜெய்ஸ் இ முகமது ஆகிய தீவிரவாத இயக்க தளபதிகள் கூடி இது தொடர்பாக ஆலோசனை நடத்தியுள்ளனர்.

பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ அதிகாரி மேஜர் நூர் ஹசன் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் இருந்து வந்த தொலைபேசி அழைப்பொன்றை இந்திய உளவு துறையினர் இடைமறித்து கேட்டனர். அப்போது விருந்தினர்களை வரவேற்கவும் அவர்களுக்கு அனைத்து உதவிகளை செய்யவும் தயாராக இருங்கள் என்று தொலைபேசியில் பேசியவர் கட்டளை பிறப்பித்தது தெரிய வந்துள்ளது, இதன்மூலம் டில்லி, மும்பை, பெங்களூர், ஜெய்ப்பூர் மற்றும் குஜராத், உபி, கர்நாடகா மாநிலங்களில் ஏனைய நகரங்களில் பெரியளவில் நாச வேலைக்கு திட்டமிடப்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்தியாவில் உள்ள ஏதாவது ஒரு விமான நிலையத்தை தகர்க்க அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தின் உதவி கோரப்பட்டிருக்கும் தகவலும் உளவுப்பிரிவினருக்கு கசிந்துள்ளது. இந்த சதித்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அமெரிக்கா வாழ் பாகிஸ்தான் பிரஜையான கம்ருதீன் உட்பட 7 முதல் 9 பேர் வரை தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த குழுவினருக்கு கடந்த 3 மாதங்களாக பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் பயற்சி அளிக்கப்பட்டு வந்த தகவலும் கிடைத்துள்ளது.

அப்சல் குருவை தூக்கிலிட்டதற்காக இந்தியாவை பழிக்குப்பழி வாங்குவோம் என்று லஷ்கர் இ தொய்பாவின் செய்தி தொடர்பாளர் அப்துல்லா கஸ்னாவில் தொலைபேசி மூலம் ஊடகங்களுக்கு பேட்டியளித்திருப்பதையும் உளவு துறையினர் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.


### நாடு முழுவதும் பாதுகாப்பு

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலை தொடர்ந்து 2 ஆவது நாளாக நேற்றும் தலைநகர் டில்லி உட்பட நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### சோனியா பயணம் இரத்து

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்று முன்தினம் திரிபுரா மாநிலத்தில் தேர்தல் பிரசாரம் செய்வதாக இருந்தது. தீவிரவாதிகள் அச்சுறுத்தல் காரணமாக பாதுகாப்பு கருதி சோனியாவின் திரிபுரா சுற்றுப்பயணம் இரத்து செய்யப்பட்டது. ஏற்கனவே பிரதமர் மன்மோகன் சிங்கின் திரிபுரா சுற்றுப்பயணமும் இரத்து செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்காவில் வரலாறு காணாத பனிப்புயல்; 10 பேர் பலியாகினர்



அமெரிக்காவில் பனிப்புயல் காரணமாக மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டதால் ஏழு இலட்சம் வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன.

அமெரிக்காவின் பல மாகாணங்களில் கடும் பனிப்புயல் வீசி வருவதால் சாலைகளில் 3 அடி உயரத்துக்கு பனிக்குவியல்கள் காணப்படுகின்றன. இதனால் நியூயோர்க், பொஸ்டன் ஆகிய பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களில் 5 ஆயிரத்துக்கும் அதிகமான விமானங்கள் இரத்து செய்யப்பட்டன.

ஹீட்டர் இல்லாத காரணத்தால் பலர் உடல் வெப்பம் குறைந்து பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும் பனிப்புயலால் சிறுவன் உட்பட 10 பேர் பலியாகியுள்ளதாக தெரிய வருகின்றது.

### 7 இலட்சம் பேர் தவிப்பு

சாலைகளில் தேங்கி கிடக்கும் பனிக்கட்டிகளை பொலிஸார் அவ்வப்போது அகற்றி வருகிறார்கள். என்றாலும் முக்கிய தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து அடியோடு முடங்கிவிட்டது. மின்சாரத் தடை ஏற்பட்டு சுமார் 7 இலட்சம் மக்கள் தவிக்கிறார்கள். (அ-2)

# இந்தியா-பிரான்ஸ் கூட்டு முயற்சியில் ஏவப்படுகிறது செயற்கைக்கோள்

இந்தியா – பிரான்ஸ் கூட்டு முயற்சியில் உருவான செயற்கைக்கோள் இந்த மாத இறுதியில் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியா–பிரான்ஸ் கூட்டு முயற்சியில் சரள் செயற்கைக் கோள் உருவாக்கப்பட்டது.

சுற்றுச்சூழல் பற்றிய ஆய்வுகள் தொடர்பாக கடலில் ஏற்படும் மாற்றங்களை அறிய இந்த செயற்கைக்கோள் மூலம் தகவல்கள் பெற முடியும் எனவும் இதனால் மழை வாய்ப்பு, கடலின் பரப்பில் ஏற்படும் மாற்றங்கள், அதன் மூலம் கரையோரங்களில் ஏற்படக்கூடிய பாதிப்பு, சுனாமி ஆபத்து போன்றவை குறித்து அறிய முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் (இஸ்ரோ) ஏவுதளமான ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து இந்த செயற்கைக்கோள் ஏவப்படுகிறது. பெப்ரவரி 22 முதல் பெப்ரவரி 25 வரையில் ஏதாவது ஒரு நாளில் இச் செயற்கைக்கோளை ஏவத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

450 கிலோ எடையுள்ள இந்த செயற்கைக் கோளின் இரு முக்கிய பாகங்களை பிரெஞ்சு தேசிய விண்வெளி ஆய்வு மையம் வழங்கியிருந்தது. இந்த செயற்கைக்கோளை வடிவமைத்து உருவாக்கி விண்ணில் செலுத்துவதோடு அது செயற்படும் காலம் முழுவதும் அதனை பராமரிப்பது அனைத்தையும் இஸ்ரோவே பொறுப்பேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை கடந்த டிசெம்பர் மாதம் விண்ணில் செலுத்த திட்டமிட்டிருந்த போதிலும் கூடுதல் சோதனைகள் நடத்துவதற்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலாந்து அடுத்த வாரம் இந்தியாவிற்கு பயணமாகவுள்ள நிலையில் இந்தியா-பிரான்ஸ் கூட்டு முயற்சியான செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

# பிரிட்டனிலிருந்து பிரிந்து செல்லாதீர்

### ஸ்கொட்லாந்தை கோருகிறார் கமரூன்

பிரிட்டனிலிருந்து பிரிந்து செல்வதைத் தவிர்க்க வேண்டுமென்று பிரதமர் டேவிட் கமரூன் ஸ்கொட்லாந்தை வலியுறுத்தியுள்ளார்.

பிரிட்டனில் ஸ்கொட்லாந்தின் பங்கு குறித்த ஆய்வறிக்கையை பிரிட்டன் அரசு நேற்று வெளி யிட்டுள்ளது. இந்நிலையில் கமரூன் கூறுகையில், 300 ஆண்டுகளுக்கும் மேலாக இணைந்திருந்த நாம் பிரிந்தால் சர்வதேச அரங்கில் பிரிட்டனின் பலம் குறைந்து விடும்.

பிரிட்டன் இப்போது நன்றாக செயற்படுகிறது. இதை ஏன் உடைக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

பிரிட்டனிலிருந்து பிரிந்து செல்ல ஸ்கொட்லாந்து திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக அடுத்த ஆண்டு மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தப் போவதாக அறிவித்துள்ளது.

அதேநேரம் கடந்த மாதம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் 23 சதவீத ஸ்கொட்லாந்து மக்கள் மட்டுமே பிரிந்து செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். 61 சதவீதம் பேர் பிரிட்டனுடன் இணைந்திருக்க விரும்புவதாகவும் தெரியவந்துள்ளது. (அ-5)

# தூக்குத்தண்டனையை நிறுத்த வேண்டும்

### இந்தியாவை கோருகிறது ம.உ. அமைப்பு

(புதுடில்லி)

குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை அளிப்பதை இந்தியா நிறுத்த வேண்டும். தூக்கு தண்டனையை அடியோடு இரத்து செய்ய வேண்டும் என மனித உரிமை அமைப்புகள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

மும்பை தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதி அஜ்மல் கசாப் பாராளுமன்ற தாக்குதல் சம்பவத்துக்கு மூளையாக செயற்பட்ட அப்சல் குரு ஆகியோருக்கான தூக்குத் தண்டனை அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதற்கிடையே இந்தியாவில் தூக்குத்தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. நியூயோர்க்கில் செயற்படும் மனித உரிமை கண்காணிப்பகத்தின் தெற்காசிய இயக்குநர் மீனாட்சி கங்குலி கூறியதாவது,

கொடூர குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு தண்டனை கூடாது என யாரும் கூறவில்லை. கொடூரமான மரணதண்டனை கூடாது என்றுதான் கூறுகிறோம். குற்றத்தை தடுப்பதற்கு மரண தண்டனைதான் தீர்வு என யார் கூறியது என்று தெரியவில்லை.

மரண தண்டனை கொடுப்பது மனித தன்மையற்ற செயல். எனவே இந்திய அரசு இதுபோன்ற தண்டனைகளை நிறைவேற்றுவதை நிறுத்தி தூக்குத்தண்டனையை அடியோடு இரத்து செய்த நாடுகளின் பட்டியலில் இணைய வேண்டும் என்றார்.

லண்டனை சேர்ந்த சர்வதேச பொது மன்னிப்பு குழுவின் திட்ட இயக்குநர் சசிகுமார் கூறியதாவது, சர்வதேச நாடுகள் தூக்குத்தண்டனைக்கு எதிரான போக்கை பின்பற்றும் நிலையில் இந்தியா இது போல் நடந்து கொள்வது வருத்தம் அளிக்கிறது. குற்றங்களில் ஈடுபடுவோருக்கு மரண தண்டனைக்கு பதிலாக வேறு கடுமையான தண்டனைகளை வழங்கலாம் என்றார்.(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால்
வாக்கினிலே ஒளி உண்டாகும்.
-பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதியின் யாழ்.வருகை தமிழ் மக்களை ஆற்றுப்படுத்துமா?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகிறார்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய கட்டிடத் தொகுதியை திறந்து வைத்தல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இன்று அபிவிருத்திக்குழுக் கூட்டத்தையும் நடத்தவுள்ளார்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தி நிலைகள் பற்றி துறைசார் தலைவர்கள் எடுத்துரைப்பார்கள் என நம்பலாம்.

அதேநேரம் யாழ்.மாவட்டத்து இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு பற்றியும் இக்கூட்டத்தில் ஆராய்வது பொருத்துடையதாகும்.

இவையாவற்றுக்கும் மேலாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தமிழ் மக்கள் பல எதிர்பார்ப்பைக் கொண்டிருப்பர் என்பது திண்ணம்.

குறிப்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் உரையாற்றுவார். அந்த உரையானது தென்பகுதியில் அவர் ஆற்றிய உரைகளைவிட வித்தியாசமாக அமையும்-அமைய வேண்டும்.

அவ்வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி கொண்டுள்ள நிலைப்பாடு என்ன என்பதை அறிவதில் தமிழ் மக்கள் மிகுந்த ஆர்வமாகவுள்ளனர்.

போருக்குப் பின்பான தமிழ் மக்களின் நினைப்புகளும் சிந்தனைகளும் மௌனமாகவே உள்ளன.

எங்கள் நம்பிக்கைகள் அத்தனையும் இடிந்து தூளாகிப் போன பின்பு -எங்களுக்கான பலம் எதுவென்று இன்னமும் இனங்கண்டு கொள்ள முடியாத நிலையில்,

அப்பாவித் தமிழ்மக்களாகிய நாங்கள் எங்கள் உணர்வுகளுக்கும் எங்கள் உரிமைகளுக்குமாக மனதிற்குள் போராட்டம் நடத்திக் கொள்வதைத் தவிர வேறு வழியெதுவும் தெரியவில்லை.

இந்நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் இன்று ஆற்றுகின்ற உரை தமிழ் மக்களின் மனங்களை வெல்வதாக -ஆற்றுப்படுத்துவதாக அமையவேண்டும் என்பது நம் விருப்பு.

இனப்பிரச்சினையால் நீண்டகாலம் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வன்னி யுத்தத்தில் பேரழிவுகளைச் சந்தித்தனர்.

எனினும் எங்கள் உரிமை, எங்கள் வாழ்விடம், எங்கள் இருப்பு என்பன தொடர்பில் இன்னமும் உறுதியான-ஸ்திரமான தீர்வுகள் கிடைக்கப் பெறவில்லை.

சிறைகளில் வாடுகின்ற தமிழ் கைதிகள், காணாமல் போனவர்களைத் தேடும் படலங்கள்,மீள் குடியமர்வதற்கான வசதிகள் கிடைக்கப்பெறாத துன்பங்கள், யுத்தத்தில் குடும்பத் தலைவனை இழந்துபோய்; தம் பிள்ளைகளைக் காப்பாற்றத் தெரியாமல் சதா கண்ணீர்விடும் தாய்மார்களின் சோகங்கள் என்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியின் உரை தீர்வு காண்பதாக அமைய வேண்டும்.

எவ்வளவுதான் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தாலும் மக்கள் தீராத் துன்பத்தில் மூழ்கியிருப்பார்களாயின், அபிவிருத்தித் திட்டங்களால் எந்தப் பயனும் ஆகமாட்டாது.

எனவே தமிழ் மக்களின் விவகாரங்களை, இனத்துவம் என்ற நிலைகடந்து, ஜனாதிபதி நோக்கவேண்டும் என்பதே நம் கோரிக்கை.

அதற்கு அவரின் இன்றைய யாழ்.விஜயம் நல்லதோர் களம்.

# அரச இணையத்தளங்கள் மீது தொடரும் சைபர் தாக்குதல்கள்

இலங்கை அரசின் இணையத் தளங்கள் மீதான சைபர் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இதுவரை அரசின் 50 இணையத் தளங்கள் வரை சைபர் தாக்குதலுக்கு இலக்காகிச் செயலிழந்துள்ளன.

ஆகப்பிந்திய தாக்குதல் நல்லிணக்க ஆணைக்குழுவின் இணையத் தளம் மீது நடத்தப்பட்டுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 22-வது அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன.

இணையத்தளங்கள் மீதான சைபர் தாக்குதல்களால் கணினிகளில் சேமிக்கப்பட்டிருந்த இலங்கை அரசின் அதிகாரப் பூர்வ ஆவணங்கள், தகவல்களும் அழிந்து போயுள்ளன.

ஊழியர் சேமலாப நிதியம், நீதி அமைச்சு, தேசிய அருங்காட்சியகம், குடிவரவுத் திணைக்களம், விவசாயத் திணைக்களம், ஊவா மாகாண சுற்றுலாப் பிரிவு, மூலோபாய நிறுவன முகாமைத்துவ முகவரகம், தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம், வட மத்திய மாகாண சபை, துறைமுக அதிகார சபை, வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், சுங்கத் திணைக்களம், தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணையம், மதிப்பீட்டுத் திணைக்களம், நிதி ஆணையம், மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம், தேசிய பாரம்பரிய அமைச்சு உள்ளிட்ட பல தளங்கள் சைபர் தாக்குதலால் முடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையத்தின் இணையத்தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு பல வாரங்களாகியும் இதுவரை அது மீள இயங்கத்தொடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

மாதகல் சென் ஜோசப் வித்தியாசாலையின் 2013-ம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டியும், மைதானத் திறப்பு விழாவும் நாளை மறுதினம் 14-ம் திகதி பிற்பகல்2.00 மணியளவில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வ.நடராஜா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட மைதானத்தை திறந்து வைக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டு, விளையாட்டு அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலனும், கௌரவ விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசாவும், மாதகல் பரிஷ் வண.பிதா ஜே. கனிசுயிஸ்ராஜ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-23)

◆ ◆ ◆ ◆

யாழ்/ அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் வித்தியாலயத்தின் அதிபர் திருமதி ஜே.சிவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.திருநாவுக்கரசு கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஸ்ணன், ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி பணிப்பாளர் ரி.சோமசேகரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (எ-3)

◆ ◆ ◆ ◆

(சாவகச்சேரி)

மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பி.ப 1 மணிக்கு பாடசாலை அதிபர் த.அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வித்தியாலயத்தின் பழைய மாணவனும் மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாருமான க. சண்முகலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் தீ.ஸ்ரீஸ்கந்தராசா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (எ-3,29)

# மகிந்த நாட்டின் சர்வாதிகாரி; ரணில் ஐ.தே.கவின் சர்வாதிகாரி ஜே.வி.பி குற்றச்சாட்டு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இலங்கை நாட்டின் சர்வாதிகாரியாக செயற்படுகிறார். அதேபோல ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியின் சர்வாதிகாரியாக செயற்படுவதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தநிலையில் இலங்கையில் நிலவும் முதலாளித்துவ சுழற்சிமுறை ஆட்சியதிகாரங்கள் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகள் கிடைக்கமாட்டாது என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் மகிந்தவும் அவரது அமைச்சரவையும் திருகோணமலையில் 65 -வது சுதந்திர தினத்தைக் கொண்டாடினர். எனினும் நாட்டு மக்கள் இன்று உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கிறார்களா? என்பது சந்தேகமாகும் என்று ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.



நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை மீறி மகிந்தராஜபக்ஷ பிரதமநீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை பதவி விலக்கினார்.

இன்று அவருடைய அமைச்சரவை ஆலோசகரை பிரதம நீதியரசராக்கி அவர் மூலம் கைது செய்யப்பட்ட ஒருவரை 48 மணித்தியாலங்கள் தடுத்து வைக்கும் சட்டத்தை அமுல் செய்துள்ளார் என்றும் ரில்வின் சில்வா சுட்டிக் காட்டினார்.(எ-11)

# தற்கொலைத் தடுப்பில் உதவ முன்வருமாறு அழைப்பு!

தற்கொலைகளைத் தடுப்பதை நோக்கமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட சிறிலங்கா சுமித்ரயோவின் யாழ்ப்பாணக் கிளையான கை கொடுக்கும் நண்பர்கள் சேவை பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று வருகிறது

ஆரம்பித்து இருவாரங்களுக்குள் ஐம்பதற்கு மேற்பட்டோர் இவர்களின் பணிமனையுடன் தொடர்பு கொண்டுள்ளனர். பாரிய மனக் கவலை, தளர்ச்சி மன உளைச்சல், விரக்தி போன்ற பாதிப்புகளுக்கு உள்ளானோருக்கு இப் பணிமனையில் சேவையாற்றும் தன்னார்வத் தொண்டர்கள் உணர்வு ரீதியான ஆதரவை வழங்குகின்றனர்.

தினசரி பிற்பகல் 12.30 மணி முதல் 4.30 மணி வரை நடைபெற்றுவரும் சேவையை மேலும் விரிவுபடுத்துவதற்கு மேலதிக தொண்டர்கள் அவசரமாகத் தேவைப்படுவதாகக் கைகொடுக்கும் நண்பர்கள் தெரிவிக்கின்றனர்.

வாரத்தில் ஒரு நாள், நான்கு மணி நேரம் சம்பளம் எதுவுமின்றிப் பணியாற்ற முன்வரும் தன்னார்வத் தொண்டர்கள் 021 2228117 அல்லது 077 8923480 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

இவ்வாறு சேர்வோருக்கு குறிப்பிட்ட எந்தக் கல்வித் தகைமையோ தொழில் ரீதியான தகைமையோ அவசியமில்லை எனவும், ஓய்வு பெற்றோரும் இணைந்து தொண்டாற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணி தொடங்கமுன் உரிய பயிற்சி வழங்கப்படும். தேர்வுக்கான நேர்முகம், வார இறுதியில் நடைபெறவுள்ளது என கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பு வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உழைத்து வாழ வேண்டும்



தைரியமாகயிருங்கள், பலமுடையவர் ஆகுங்கள், உங்கள் மீதே முழுப் பொறுப்புகளையும் சுமத்திக் கொண்டு செயற்படுங்கள்.

உங்கள் விதியை நிர்ணயிப்பவர் நீங்களே, உங்களுக்கு வேண்டிய பலமும், துணையும் உங்களுக்குள்ளேயே இருக்கின்றன.

கொழுந்து விட்டெரியும் அன்பும், தன்னலமில்லாத பண்பும், ஒழுக்கமும் கொண்ட நல்லவர்களையே இந்த மண்ணுலகம் வேண்டி நிற்கிறது.

உழைத்து வாழுங்கள், இவ்வுலக வாழ்வு எத்தனை நாள் என்பது நமக்குத் தெரியாது. உலகில் தோன்றியதன் அறிகுறியாக ஏதேனும் நல்லதைச் செய்ய முயலுங்கள்.

உங்களுக்குள் இருக்கும் தெய்வீகத்தன்மையை வெளிப்படுத்துங்கள். அதன் பின் உங்களைச் சுற்றி இருக்கும் ஒவ்வொன்றுக்கும் சீராகி ஒழுங்காகி விடும்.

வாழ்வில் நன்மை பெற வேண்டுமானால், மனிதர்களுக்கு முதலில் தொண்டு செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஆபிரிக்க காற்பந்து கிண்ணம்; 3 ஆவது முறையாக நைஜீரியா வசம்

ஆபிரிக்க நாடுகள் கலந்துகொண்ட காற்பந்து போட்டியின் இறுதி ஆட்டம், தென்னாபிரிக்க தலைநகர் ஜோகனெஸ்பர்க்கில் நடைபெற்றது. இதில் இரண்டு முறை சம்பியன் பட்டம் வென்ற நைஜீரியா அணி, பர்கினா பாசோ நாட்டை சந்தித்தது.

மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நைஜீரியா 1-0 என்ற கோல் கணக்கில் பர்கினா பாசோவை வென்றது. இந்த வெற்றியின் மூலம் நைஜீரியா மூன்றாவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சைக்கிள் சம்பியன்



பெல்ஜியம் வீரரான முன்னாள் உலக சம்பியன் மார்க் கேவன்டிஷ் (MARK CAVENDISH) கட்டார் சர்வதேச சைக்கிள் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

கட்டார் நாட்டின் பல்வேறு பகுதிகளை கடந்து வந்த இந்த சைக்கிள் தொடர், டோஹா நகரில் 6ஆவது சுற்றுடன் முடிவுக்கு வந்தது. அப்போது உலகின் முன்னணி வீரர்கள் ஒருவரையொருவர் முந்தியபடி பாய்ந்து சென்றனர். 160 கிலோ மீற்றர் பந்தய இலக்கை கடக்க, விரைந்து வந்த சைக்கிள் வீரர்களை பார்வையாளர்கள் உற்சாகப்படுத்தினர்.

இந்த கடைசி சுற்றில் பெல்ஜியம் வீரர் மார்க் கேவன்டிஷ், அமெரிக்காவின் ப்ரெண்ட் புக்வால்டர் உள்ளிட்டோர் இடையே கடும் போட்டி நிலவியது. இறுதியில், பந்தய இலக்கை முதலாவதாக அடைந்து, சம்பியன் பட்டத்தை மார்க் கேவன் டிஷ் வென்றார். இதன்மூலம் நடப்பாண்டின் முதல் வெற்றியை பதிவு செய்தார்.

கடந்த 2005, 2008 மற்றும் 11ஆம் ஆண்டுகளில், உலக சம்பியன் பட்டம் வென்றவர் மார்க் கேவன்டிஷ். கடந்த 2006 ஆம் ஆண்டு காமன்வெல்த் தொடரிலும் தங்கம் கைப்பற்றிய மார்க் கேவன டிஷ் பிரான்ஸ் டூர் தொடரிலும் பதக்கம் வென்றார்.

## இலங்கை கிரிக்கெட் அணி முகாமையாளர் பதவி நீக்கம்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். புதிய முகாமையாளராக மிச்சல் டி சொய்சா நியமிக்கப்பட்டள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அண்மையில் இலங்கைக் கிரிக்கெட் சபைக்கெதிராக மஹேல ஜெயவர்தன ஊடகமொன்றிற்குப் பகிரங்கமாக எழுதிய கடிதத்தை வெளியிட மஹேலவிற்கு உதவிய காரணத்திற்காகவும், வேறும் சில தனிப்பட்ட காரணங்களுக்காகவும் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாகத தகவல்கள் வெளியாகியுள்ளன.

## விளையாட்டுத் துளிகள்


- சிலி பகிரங்க டெனிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒன்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஸ்பெய்னின் முன்னணி வீரர் ரபெயல் நடால் தோல்வியடைந்துள்ளார். தரப்படுத்தலில் 73 ஆம் இடத்திலுள்ள ஆஜென்டீனாவின் ஹொராசியோ ஷெபொலஸ் 2 - 1 என்ற செட் கணக்கில் நடேலைத் தோற்கடித்தார்.
- மகளிர் உலகக் கிண்ண அரையிறுதி ஆட்டத்தில் இலங்கையை 9 விக்கெட்டுக்களால் அவுஸ்திரேலிய அணி வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.
- இந்தியாவுக்கு எதிரான இரண்டு பயிற்சி ஆட்டங்களிலும் அவுஸ்திரேலிய அணித் தலைவர் கிளார்க் காயம் காரணமாக விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில் 214 ஓட்டங்களைக் குவித்ததன மூலம் தங்களுடைய அதிகபட்ச ஓட்டமாக இதனை பதிவு செய்தது இங்கிலாந்து. முன்னதாக இங்கிலாந்து அணி தென்னாபிரிக்காவுக்கு எதிராக 202 ஓட்டங்கள் பெற்றதே அதிகபட்ச ஓட்டமாக இருந்தது.
- இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 15 சிக்ஸர்களை விளாசியது. இதன்மூலம் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியில் ஓர் இன்னிங்ஸில் அதிக சிக்ஸர் அடித்த அணிகளின் வரிசையில் 3ஆவது இடத்தைப் பிடித்தது. இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 17 சிக்ஸர்களை விளாசி முதலிடத்திலும், இந்தியாவுக்கு எதிராக அவுஸ்திரேலியா 16 சிக்ஸர்களை விளாசி 2ஆவது இடத்திலும் உள்ளன.
- அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து கம்பீர் நீக்கப்பட்டு ஹர்பஜன் சிங்கிற்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது.



மெல்பேர்னில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 5 ஆவது ஒருநாள் போட்டியில் கொரில்லா உருவத்துடன் காட்சிதருகின்றார் கிரிக்கெட் ரசிகர் ஒருவர்.

## பிரபல சைக்கிளோட்ட வீரருக்கு எதிராக வழக்கு





அமெரிக்க சைக்கிளோட்ட வீரர் லான்ஸ் ஆம்ஸ்ட்ரோங்கிற்கு எதிராக நிறுவனமொன்று வழக்கு தாக்கல் செய்துள்ளது. மூன்று டுவர் டி பிரான்ஸ் பட்டங்களை வெற்றிகொண்டமைக்காக அவருக்கு 12 மில்லியன் அமெரிக்க டொலர் பணப் பரிசு வழங்கியதாக குறித்த நிறுவனம் கூறியுள்ளது.

ஊக்கமருந்து பயன்படுத்திய குற்றச்சாட்டில், லான்ஸ் ஆம்ஸ்ட்ரோங் பெற்ற ஏழு டுவர் டி பிரான்ஸ் பட்டங்களையும் சர்வதேச சைக்கிளோட்ட ஒன்றியம் கடந்த ஆண்டு மீளப்பெற்றிருந்தது. இந்த நிலையில் டக்ஸாஸ் மாநிலத்தின் டலாஸ் பகுதியிலுள்ள நீதிமன்றத்தில் குறித்த நிறுவனம் ஆம்ஸ்ட்ரோங்கிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது.

ஆம்ஸ்ட்ரோங் மற்றும் அவரின் நிர்வாக நிறுவனம் ஆகியன தமது நிறுவனத்தை ஏமாற்றியுள்ளதாக குறித்த நிறுவ னம் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளது.

2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் டுவர் டி பிரான்ஸ் சைக்கிளோட்டத்தில் லான்ஸ் ஆம்ஸ்ட்ரோங் பெற்ற பட்டங்களுக்கென இந்த பரிசுத் தொகை வழங்கப்பட்டதாகவும் குறித்த நிறுவனம் கூறியுள்ளது.

## ஒருநாள் அரங்கில்.... 500 ஆவது வெற்றியை பதித்தது ஆஸி!

**மேற்கிந்தியத் தீவுகளை 5 ஆவது ஒருநாள் போட்டியில் வீழ்த்தி அவுஸ்திரேலிய அணி தனது ஒருநாள் அரங்கில் 500 ஆவது வெற்றியை பதிவுசெய்துள்ளது.**

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி அவுஸ்திரேலிய அணியுடன் இடம்பெற்ற 5 ஒருநாள் போட்டிகளிலும் தோல்வியடைந்தது. மெல்பேர்னில் இடம்பெற்ற 5 ஒருநாள் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 274ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணியில் வோஜஸ் ஆட்டமிழக்காமல் 2 சிக்ஸர், 10 பவுண்டரிகளுடன் 112 ஓட்டங்களைக் குவித்தார். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 49.5 ஓவர்களில் 257 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கட்டுக்களையும் இழந்து 17 ஓட்டங்களால் தோல்வியடைநதது. அணி சார்பாக சார்லெஸ் 1 சிக்ஸர், 8 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி ஒருநாள் போட்டியில் தனது 500 ஆவது வெற்றியை பதிவுசெய்த முதல் அணி என்ற பெருமையை பெற்றுள்ளது. இதுவரை 811 போட்டிகளில் பங்கேற்று 500 வெற்றி, 275 தோல்வி, 9 சமநிலை என்ற பெறுபேறுகளைப் பெற்றுள்ளது. 27 போட்டிகளுக்கு முடிவு இல்லை. இப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் பாகிஸ்தான் ([illegible] போட்டி, [illegible] வெற்றி), மூன்றாவது இடத்தில் இந்தியா (817 போட்டி, 405 வெற்றி) உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி அபார வெற்றி

19 வயதுப் பிரிவுக்குரிய கிரிக்கெட் போட்டியின் 4-வது சுற்றுப் போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதில் யாழ்.இந்துக் கல்லூரி அணி யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து விளையாடியது.


நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் தமது முதல் இன்னிங்ஸுக்காக யாழ்ப்பாணக் கல்லூரி அணி 27.3 பந்து பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 154 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் அபிராஜ் 33, மதுசன் 32 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி சார்பில் பானுகோபன் 3, மதுசன் 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 40.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.



மதுசன்

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் றுக்ஸ்மன் 7 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் உள்ளடங்கலாக 65 ஓட்டங்களையும், சிந்துஜன் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் நிமலேந்திரன் 5, சோபிநாத் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

19 ஓட்டங்கள் முன்னிலையில் தமது 2-வது இன்னிஸ்ஸை ஆரம்பித்த யாழ்ப்பாணக் கல்லூரி அணி 33.3 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 88 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக நிமலேந்திரன் 18, அபிராஜ் 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பில் பானுகோபன் 5 இலக்குகளையும், கல்கோகன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

108 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த யாழ்.இந்துக் கல்லூரி அணி 16 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரமே இழந்து 8 விக்கெட்டுக்களால் வெற்றியிலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில் மதுசன் ஆட்டமிழக்காமல் 9 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் உள்ளடங்கலாக 59 ஓட்டங்களையும், கல்கோகன் 2[illegible] ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் பிரவிந், நிலுக்ஷன் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

## சண்டிலிப்பாய் பிரதேச வி.விழாவை முன்னிட்டு கரப்பந்தாட்ட போட்டி





சண்டிலிப்பாய் பிரதேச விளையாட்டு விழாவை முன்னிட்டு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி நடைபெற்றது.

மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் அரையிறுதிப் போட்டியில் கலை ஒலி விளையாட்டுக் கழகமும், ஒக்போட் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் 25:9, 25:17 என்ற என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஒக்போட் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

மற்றுமோர் அரையிறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக் கழகமும், சண்டிலிப்பாய் நவசக்தி விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

இதில் 25:20, 25:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதிப்போட்டியில் பண்டத்தரிப்பு ஐக்கியம் விளையாட்டுக் கழகமும், இளவாலை கெனற்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

## வாய் மூலப் பரீட்சை

மெய்வன்மை தொழில்நுட்ப அலுவலகர் வாய் மூலப் பரீட்சை எதிர்வரும் 23-ம் திகதி சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகள் மெய்வன்மை சங்கத் தலைவர் செ.ரமணனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## மாபெரும் வீதியோட்டம்

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் வீதியோட்ட நிகழ்வு எதிர்வரும் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இவ் வீதியோட்ட நிகழ்வில் பங்குபற்ற விருப்பம் உள்ளவர்கள் யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தலைவர் செ.ரமணனுடன் தொடர்பு கொள்ளவும்

இப்போட்டிகள் அனைத்தும் இரு பிரிவுகளாக நடைபெறும். 1992க்கு பிறகு பிறந்தவர்கள், திறந்த போட்டியாளர்கள்.

இவ்விரு பிரிவுகளிலும் ஆண், பெண் போட்டியாளர்கள் பங்குபற்றலாம்.

## மகளிர் கிரிக்கெட் போட்டி வதிரி டயமன்ஸ் சம்பியன்

(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் மகளிர் கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை மாலுசந்தி மைக்கல் அணியை 5 விக்கெட்டுக்களால் தோற்கடித்து வதிரி டயமன்ஸ் அணி கைப்பற்றியுள்ளது.



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றான மகளிருக்கான கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் கரவெட்டி வளர்மதி அணியை தோற்கடித்து மைக்கல் அணியும், அல்வாய் மனோகரா அணியை தோற்கடித்து வதிரி டயமன்ஸ் அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக தயானி 28, தர்மினி 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் வதிரி டயமன்ஸ் சார்பில் இந்துகா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வதிரி டயமன்ஸ் 4.3 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றி



யிலக்கை அடைந்தது. இதில் மேரி கோல்டா 38, இந்துகா 8 ஓட்டங்களைப் பெற்றனர். (எ-3,24)

## போப்பாண்டவர்...

அந்தப் பதவி வெற்றிடமாக இருக்கும்.

முடிந்தவரை வெகுவிரைவில் புதிய போப்பாண்டவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று வத்திக்கான் கூறியுள்ளது.

1415-ம் ஆண்டுக்குப் பின்னர் ஒரு போப்பாண்டவர் பதவி விலகுவது இதுதான் முதற்தடவையாகும். செலெஸ்டைன் 5 என்னும் போப்பாண்டவர்தான் இதற்கு முன் பதவி விலகியவராவார். பொதுவாகத் தேர்ந் தெடுக்கப்படும் போப்பாண்டவர்கள் அவர்களது ஆயுள் வரை அந்தப் பதவியில் இருப்பார்கள்.

போப்பாண்டவரின் இந்த முடிபு அவரது நெருங்கிய சகாக்களுக்கு கூட மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக வத்திக்கான் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். அவருக்கு பார்கின்ஸன் நோய் இருப்பதாக உறுதி செய்யப்படாத தகவல்கள் கூறுகின்றன.

மேற்குலகில் மதச்சார்பின்மை அதிகரித்து உலகின் ஏனைய பகுதிகளில் இஸ்லாம் வளர்ச்சி பெற்றுவரும் சூழலில் கத்தோலிக்க படிப்பினைகளை பாதுகாப்பவராக தன்னை போப்பாண்டவர் கருதி வந்தார். இவர் கொஞ்சம் பழமைவாதியாகவும் பார்க்கப்படுகிறார்.

முன்னைய போப்பாண்டவர் இரண்டாம் ஜோன் போல் அவர்களின் கீழ் தலைமை ஒழுக்கக்கட்டுப்பாட்டாளராக இவர் பணியாற்றினார்.

கருத்தடை விவகாரத்தில், உயிருக்கு ஒரு புனிதத்துவம் இருக்கிறது, அதனைக் கெடுக்கக்கூடாது என்று தார்மீக துல்லியத்தை வலியுறுத்தியவர் போப்பாண்டவர் பெனடிக்ட்.

ஆனால், தனது பதவிக்காலத்தில், கத்தோலிக்கத் திருச்சபையை ஆக்கிரமித்திருந்த சிறார் துஷ்பிரயோகச் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இவர் எதிர்கொண்டார்.

இஸ்லாம் குறித்து இவர் ஒரு கடும்போக்கு நிலையை எடுத்திருந்தார். முகமது நபியை கடுமையாக விமர்சித்த 14-ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ ஆட்சியாளரை ஆதாரம் காட்டி இவர் கூறிய கருத்துக்கள் பல முஸ்லிம்களின் மனதை புண்படச் செய்தது.

போப்பாண்டவரின் பதவி விலகல் குறித்து பல நாடுகளின் தலைவர்களும் அதிர்ச்சி வெளியிட்டிருக்கின்றார்கள். (எ-11)

## போராட்டத்தைத் தொடர...

கப்பட்ட போதிலும், ஒரு பகுதி புலி உறுப்பினர்களே இவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டுள்ளனர் என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் வலிறுத்தியுள்ளார். மேலும் ஒரு தொகுதியினர் தொடர்ந்தும் செயற்பட்டுவருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் எஞ்சிய பிரிவினர் தொடர்ந்தும் பிரிவினைவாத யுத்தத்தை தொடர முயற்சிப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இந்த அச்சுறுத்தலை வெற்றிகரமாக முறியடிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதன் காரணமாகவே தேசியப் பாதுகாப்பு விவகாரங்களில் அரசாங்கம் எந்த விதமான நெகிழ்வுத் தன்மையையும் காட்டுவதில்லை.

நீண்ட காலமாக யுத்தம் இடம்பெற்ற இலங்கை போன்ற நாடுகளில் ஒரே இரவில் அனைத்து விடயங்களும் வழமைக்கு திரும்பிவிட்டதாக கருதுவது முட்டாள்தனமானது.

இதேவேளை யுத்தம் இடம்பெற்ற காலத்தில் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை முடிந்தளவு தளர்த்துவதற்கு அரசாங்கம் தொடர்ச்சியாக முயற்சிக்கும்.

இந்த இரண்டு முரண்பாட்டு நிலைமைகளுக்கு காத்திரமான முறையில் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும். நவீன தொழில்நுட்ப முறைகளைப்பயன்படுத்தி குறிப்பாக இணையத் தளத்தைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் மீள ஒருங்கிணையக் கூடுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்களில் புலி ஆதரவாளர்களும் வாழ்ந்து வருவதனால், மனிதாபிமான மீட்புப்பணிகள் தொடர்பில் பிழையான தகவல்கள் அந்த நாட்டு அரசாங்களுக்கு வழங்கப்படுவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

வெளிநாடுகளில் தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்கள் மேற்கொண்டுவரும் பிரசாரங்களை முறியடிப்பதே அரசாங்கத்தின் பிரதான சவாலாக அமைந்துள்ளது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்புக்கு அழைப்பில்லை

ஜனாதிபதி முன்னிலையில் இன்று இடம் பெறவுள்ள யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள தமிழ்த் தேசியத் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுக்க வில்லை என தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் ரில்கோ சிற்றி ஹோட்டலி லேயே இந்தக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலை மையில் நடைபெறவுள்ள இவ் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினருக்கு அழைப்பு விடுக்கவில்லை என் பதை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் உறுதிப் படுத்தியுள்ளார். (எ-11)

## எதிர்க் கட்சிகள் புரிந்து...

கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் எதிர்க் கட்சித் தலைவரும், ஐக்கிய தேசிய கட்சி தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன், நவ சமசமாஜ கட்சி தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண, ஹேமகுமார நாணயக்கார, அருண சொய்சா, சிறிமாசிறி பெரேரா, சுதர்ஷன குணவர்த்தன மற்றும் கூட்டமைப்பின் எம்.பி.சுமந்திரன் ஆகி யோர் கலந்துகொண்டனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த உடன் படிக்கையில் கையெழுத்திடும் என எதிர் பார்க்கப்பட்டாலும், கூட்டமைப்புத் தலைவர் நாட்டில் இல்லாத காரணத்தால், இது சம்பந் தமாக கட்சியின் அதிகாரப்பூர்வ முடிபுடன் பிறி தொரு தினத்தில் தமது கட்சி கையெழுத்திடும் என சுமந்திரன் எம்.பி குறிப்பிட்டார்.

அதேபோல் ஐக்கிய சோஷலிச கட்சியின் தலைவர் நாட்டில் இல்லாத காரணத்தால் இக்கட்சியும் பிறிதொரு தினத்தில் கையெழுத் திடும் என அறிவிக்கப்பட்டது. (எ-11)

## மீண்டும் பயங்கரவாத...

எதிராக அவதூறு செய்திகளை வெளியிட்டு வரு கின்றன.

அத்தோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினர் தமது அரசியல் வியாபாரத்திற்காகவும் இராணுவத்தினர் தொடர்பாக அவதூறு செய்தி களை வெளியிட்டு வருகின்றனர்.

இராணுவத்தினர் தனது தொழில் நிமிர்த் தம் இங்குநிலை கொண்டுள்ளனர். இராணு வத்தினரை வெளியேறுமாறு கோஷமிடுவதால் எந்தப் பயனும் இல்லை.

எமக்கு கொடுக்கப்பட்ட உத்தரவிற்கு அமை வாகவே இங்கு நாம் நிலை கொண்டுள்ளோம்.

இராணுவத்தினர் இங்கு நிலைகொள்வ தற்கு கடந்த கால சூழ்நிலைகள்தான் காரணம். இருப்பினும் இராணுவத்தினரின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைக்கப்பட்டுவிட்டது.

இராணுவத்தினருக்கு எதிராக அவதூறு ஏற்படுத்துவதை விடுத்து இங்கு இடம்பெறும் சமூக விரோத செயல்கள் தொடர்பில் மக்க ளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

தந்தையால் மகள் பாலியல் வன்புணர்வுக் குட்படுத்தப்படுவதும் 60 வயது முதியவரால் சிறுமிகள் வன்புணர்வுக்குட்படுவதும் போன்ற சம்பவங்கள் அதிகரித்து செல்கின்றன. இவற் றைக் கட்டுப்படுத்த இது தொடர்பில் விழிப்பு ணர்வை ஏற்படுத்த ஊடகங்கள் ஒத்துழைக்க வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் வாழ்க்கையினை வளப் படுத்த உதவ வேண்டும்.

அரசியல் வியாபாரிகளின் பொய்யான பரப் புரைகளுக்கு ஊடகங்கள் ஒத்துழைப்பு வழங் காமல் சமூகத்தில் மாற்றத்தையும் அபி விருத்தி யையும் ஏற்படுத்த ஒத்துழைக்க வேண்டும்.

ஊடகவியலாளர்களின் கைகளிலுள்ள பேனாக்கள் ஆயுதங்களைவிடச் சக்தி வாய்ந் தன. நாட்டில் ஏற்பட்டுள்ள நிரந்தர சமாதானத் தினை குழப்புவதற்கும் மீண்டும் பயங்கர வாதத்தினை தோற்றுவிப்பதற்கும் அதனைப் பயன்படுத்த சில அரசியல் வியாபாரிகள் முயற்சிக்கின்றனர்.

அதற்கு ஒத்துழைத்து மீண்டும் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தி விடாதீர்கள். அதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இந்த நாட்டில் 30 வருட காலமாக நிலை கொண்டு இருந்த பயங்கரவாதம் முற்றாக அழிக் கப்பட்டுவிட்டது விடுதலைப்புலிகளின் தலை வர் பிரபாகரன் இறந்து விட்டார். மீண்டும் பயங்கரவாதமும் பிரபாகரன் போன்றவர் களும் உருவாக அனுமதிக்க மாட்டோம்.

30 வருட காலமாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தால் சாதித்தது எதுவுமேயில்லை. வீணாக உயிர்களைத் தான் பறிகொடுக்க வேண்டி ஏற்பட்டது. நாட்டின் அபிவிருத்தியும் முடக்கப்பட்டிருந்தது என அவர் மேலும் தெரி வித்தார்.

இதே வேளை ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் பதிலளித்தி ருந்தார். (எ-6)

## ஜனாதிபதி மகிந்த...

அதேவேளை இராணுவத் தளபதி மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் பாதுகாப்பு நிலைமைகளை நேரில் அவதானித்துள்ளனர்.

இரண்டு நாள் பயணமாக இன்று யாழ்ப் பாணத்துக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி காலை 10 மணிக்கு சுன்னாகத்தில் அமைக்கப் பட்டுள்ளபுதியமின்உற்பத்திநிலையத்தைதிறந்து வைப்பார்.

அதன்பின். யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் காலை 11 மணியளவில் இடம் பெறும் மாவட்ட விசேட அபிவிருத்திக் குழுக் கூட்டத் திற்கு தலைமை தாங்கவுள்ளார்.

இதனையடுத்து நயினாதீவுக்குச் செல்லும் ஜனாதிபதி அங்கு புதிதாக அமைக்கப்பட்ட இறங்குதுறையினை திறந்து வைக்கவுள்ளார்.

அத்தோடுநயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திலும்விசேடவழிபாட்டிலும்ஈடுபடவுள்ளார்.

நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணி யளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 5 மாடிக் கட்டிடத் தொகுதியைத் திறந்து வைக்கிறார்.

ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு யாழ்.குடாநாட்டில் குறிப்பாக ஜனாதிபதி விஜ யம் செய்யும் பகுதிகளில் வீதி அபிவிருத்திப் பணிகள் துரித கதியில் இடம் பெற்றதோடு அவரது உருவப் படங்களும் பதாகைகளும் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதி பாதுகாப்புத் தரப்பினரின் முழுமையான கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதோடு முக ப்பு வாயில் பகுதி தேசியக் கொடியினால் அலங் கரிக்கப்பட்டுள்ளது.

அத்தோடுரில்கோ ஹோட்டலை அண் மித்த பகுதிகளிலும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர யாழ். நகரப் பகுதியில் ஆஸ்பத்திரி வீதியில் பொலிஸார் கடவை களையும் போட்டு வாகனங்களையும் சோதனைகளுக்கு உட்படுத்தியிருந்தனர்.

பலத்த பாதுகாப் புக்குமத்தியில் இன்று யாழ்ப்பாணம் வருகை தரும் ஜனா திபதியுடன் அமைச் சர்களும் வருகை தரவுள்ளனர்.

இதேவேளை நேற்றைய தினம் இராணுவத் தளபதி மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பாது காப்பினை உறுதிப்படுத்திக் கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. (எ-6)

## நாமல் ராஜபக்ஷ...

கிளிநொச்சி வைத்தியசாலை, 60 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒட்டுசுட்டான் வைத்தியசாலையையும் உத்தி யோகபூர்வமாக திறந்து வைத்து மக்களின் பாவனைக்கு வழங்கவுள்ளார். (எ-11)

## இந்தியாவுடனான...

கூறிவிடுவார் எனவும் ஜனாதிபதி அமைச்சர் களிடம் குறிப்பிட்டுள்ளார்.

சந்திப்பு முடிந்தவுடன் அலரி மாளிகை யைவிட்டு வெளியேறிய அமைச்சர் ஒருவர், தொண்டமானை தொடர்பு கொண்டு கூறியபோது, அதனை தான் அறிந்து வைத்துத்திருந்தாக தொண்டமான் கூறியதாகவும் அந்த இணையத் தளம் குறிப்பிட்டுள்ளது. (எ-11)


ஒத்துமாறல்

கொழும்பு கொட்டாஞ்சேனையில் தேசிய பாடசாலை ஒன்றில் பணிபுரியும் ஆசிரியை ஒருவர் யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் பெற விரும்புகிறார். ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

0777966796, 0771882495

(1721)

மணல் மண் வேண்டுமா?

- கட்டிட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
- இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
- உங்கள் இடத்திற்கே கொண்டு வருகிறோம்.

4 1/2 டிராக்டர் 20,500/=

தொடர்பு: ராம்

072 63 78 546

(1716)

Deutsch, Dutch, French, English

ஜேர்மன் - டொச், நெதர்லாந்து - டச்

தூதரக பரீட்சைகளுக்கான புதிய வகுப்புக்கள் அனைத்தும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. மேலும் London செல்பவர்களுக்கான ஆங்கிலம் AI, French, Italian வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.

குறிப்பு: திங்கள் முதல் புதிய வகுப்புகளுக்கான பதிவுகள் நடைபெறும்.

தொடர்பு: விவேகானந்தா அக்கடமி

221/1 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Tel: Hotline, 0774842464

(க-2405)

தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கம்

பருத்தித்துறை -கொடிகாமம் பாதை இல 759




வாழ்த்துக்கள்

கடந்த பத்து ஆண்டுகளாக யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவராகவும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும் கடந்த மூன்று ஆண் டுகளாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவராகவும் சேவையாற்றி தற்போது இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள

திரு.பொன்னுத்துரை கெங்காதரன்

அவர்கள் மென்மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று நலத்துடன் சேவையாற்ற மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

உரிமையாளர்கள், பணியாளர்கள், சாரதி நடத்துநர்கள், சிற்றூர்திச்சேவை சங்கம், பருத்தித்துறை – கொடிகாமம்.

(1724)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் 5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட



Spoken English

புதிய பிரிவுகள் ஆரம்பம்

- A/L பரீட்சையின் பின் பல்கலைக்கழகம் செல்ல உள்ளோருக்கு விசேடபிரிவுகள்
- உங்கள் A/L பெறுபேற்றுக்கேற்ப விசேட கட்டணக்கழிவுகள் (A-2500, B-2000, C-1500)

IELTS
- Unique Test Tips
- Latest course Materials

(Duration: 50 hrs with 5 mock exams)

City & Guilds A1, A2, B1 B2 International English for Speakers of other Language (ESOL) Diploma

DMI COMPUTER EDUCATION

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டோஸ் சந்தி Tel.:021-224 1970 |


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org